SARINIHAR

# சரிநிகர்

සරිනිහර්

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இதழ் 199 ஜூன் 22 - ஜுலை 05, 2000 விலை ரூபா 10. 00








# பொருத்தமான தீர்வு இரண்டு அரசுகளே!



## இறுதி நம்பிக்கைகளும் தகர்கின்றன!



## முஸ்லிம் மக்களுக்கான தீர்வு என்ன?

# 'சரோஜா'ச் சிறுமிகளுக்கு ஜயவிரு சம்பத்தின் மிரட்டல்



தேசிய ஒற்றுமையை தொனிப்பொருளாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட சர்வதேச விருதுகள் பெற்ற "சரோஜா" திரைப்படத்தில் நடித்த சிறுமிகள், தற்போது விளம்பரப்படுத்தப்படும் "ஜயவிரு சம்பத்" லொத்தர் சீட்டு விளம்பரத்தில் நடிக்கின்றனர். இவ்விளம்பரத்தில் அச்சிறுமிகளின் பெற்றோருக்கு பயமுறுத்தல் விடுக்கப்பட்டே இச்சிறுமிகள் இருவரும் ஈடுபடுத்தப்பட்டனர் என தெரிய வந்துள்ளது.

திரைப்படத்தின் வெற்றியுடன் அச்சிறுமிகளுக்கு கிடைத்த புகழ் காரணமாக, விளம்பரங்களில் இவர்களை பயன்படுத்த பலதரப்பட்ட நிறுவனங்களினால் முயற்சிக்கப்பட்ட போதும், பெற்றோர்கள் வன்மையாக இவ்விடயத்தை எதிர்த்துள்ளனர். எனினும், "ஜயவிரு சம்பத" லொத்தர் சீட்டு விளம்பரத்தை தயாரித்தவர்கள் இச்சிறுமிகளின் பெற்றோர்களிடம் சென்று "ஜனாதிபதியின் ஆணையின்படி" என ஏமாற்றி அவர்களது அனுமதியைப் பெற்றுக்கொண்டதாக தகவலறிந்தோர் தெரிவிக்கின்றனர்.

இவ்விளம்பரங்களில் நடித்தமைக்கு மிக சொற்பமான பணம் வழங்கப்பட்டதாகவும், இவ்வாறு பயமுறுத்தப்பட்டது குறித்து சரோஜா திரைப்பட இயக்குனர் சோமரத்ன திசாநாயக்க கவலையடைந்துள்ளதாகவும் தெரிய வருகின்றது.

# தளபதியிடம் கோரிக்கை!

தற்போது யாழ் மாவட்டத் தளபதியாக நியமிக்கப்பட்டிருக்கும் இராணுவத் தளபதி ஜானக பெரேரா அண்மையில் வலிவடக்குப் பகுதி மக்களுடன் கலந்துரையாடல் ஒன்றை நடத்தினார். மேற்படி கலந்துரையாடலில் இவர் வலிகாமம் வடக்கில் வசிக்கும் மக்களை (மல்லாகத்திற்கு அப்பால் வசிப்பவர்களை) இடம் பெயர்ந்து செல்லுமாறு கோரிக்கை விடுத்தார்.

இராணுவத்தளபதியின் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட மக்கள் 'நீங்கள் சொல்கிறபடி நாங்கள் எமது வீடுகளை விட்டு வெளியேறத் தயார். ஆனால், நீங்கள் எமக்கு ஒரு உதவி செய்யவேண்டும்' என்றனர். ஜானக பெரேரா என்ன உதவி என்றார். வேறொன்றுமில்லை ஐயா. நீங்கள் வந்து குடியேறச் சொன்னபடியால் தான் நாங்கள் வந்து மீளக்-குடியேறினோம். இப்போது பாதுகாப்புக் காரணங்களுக்காக நீங்கள் எம்மை எமது இருப்பிடங்களை விட்டு வெளியேறச்சொல்கிறீர்கள். இப்போது பாதுகாப்பான இடம் வன்னி தான். எனவே எம்மை புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதிக்கு அனுப்புவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு எம்மை வன்னிக்கு அனுப்பி வைக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம் என்றனர்.

தளபதி ஜானக பெரேரா என்ன செய்வார்?

# கண்ணிவெடி நிபுணரின் கண்ணிவெடி!

யாழ்ப்பாணத்தில் கண்ணிவெடி அகற்றுவதற்கென சிம்பாவேயிலிருந்து வந்த நிபுணருக்கும் யாழ்ப்பாணத்தின் மிகப் பெரிய ரியூட்டறி என வர்ணிக்கப்படும் பட்டதடிகளை உற்பத்தி செய்யும் கல்வித்-தொழிற்சாலையின் கல்விமானின் மனைவி ஒருவருக்குமிடையில் பாலியல் தொடர்பு ஏற்பட்டிருக்கிறது.

மேற்படி கல்விமானின் மனைவி, தான் கண்ணிவெடி நிபுணருடன் உறவு கொண்டதுடன் நிற்காமல் ஏழு மாணவிகளையும் 'சப்ளை' செய்துள்ளார். இதற்காக கண்ணிவெடி நிபுணர் ஆயிரம் அமெரிக்க டொலர்களைச் செலவிட்டுள்ளார்.

பின்னர் கண்ணிவெடி நிபுணருக்கு ஏற்பட்ட ஏதோ சுகயீனம் காரணமாக மருத்துவ பரிசோதனை செய்தபோது அவருக்கு எச்.ஐ.வி. தொற்று இருப்பதை மருத்துவர்கள் கண்டு பிடித்துள்ளனர்.

சரி, அந்தக் கல்விமானின் மனைவி கண்ணிவெடி நிபுணருக்கு 'சப்ளை' செய்த மாணவிகள் யார்? யார்? அவர்கள் யார் யாருடன் உறவு கொண்டார்கள்? யாழ்ப்பாணத்தில் யார் யாருக்கு இப்போது எயிட்ஸ்?

# திருட்டுப் பேர்வழிக்குப் பதவி உயர்வு!

இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் பொலிஸ் சார்ஜன்ட் மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள்களுக்கு அலுவலக சீருடைகளுக்கென வழங்க 17 லட்சம் பெறுமதியான இடைப்பட்டிகள் கொள்வனவு செய்வதில் ஏற்பட்டுள்ள ஊழல் குறித்தான விசாரணை நடவடிக்கைகள் பின்தள்ளப்பட்டு, குறித்த ஊழலுடன் தொடர்புடைய உதவிப் பொலிஸ் அதிகாரிக்கு கடந்த வாரம் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

1997இன் இறுதிப்பாகத்தில் கேள்விப்பத்திர அழைப்பாணையின்படி குறிப்பிட்ட இடைப்பட்டிகளை வழங்க தகுதிகொண்ட இந்நாட்டிற்கு ஆயுதங்கள் மற்றும் பாதுகாப்பு பிரிவுகளுக்கு ஆயுதங்களை கொண்டு வரும் நிறுவனத்திலிருந்து பொலிஸ் களஞ்சியசாலைக்கு அவ் இடைப்பட்டிகள் அடங்கிய பெட்டிகள் 35 கிடைத்துள்ளன. இந்த இடைப்பட்டிகள் இயந்திரங்களினால் தயாரிக்கப்பட்டவையாக இருக்க வேண்டிய போதிலும் 35 பெட்டிகளில் 3 மட்டுமே இயந்திரங்களினால் செய்யப்பட்டவையாகவும் எஞ்சியவை வெல்டிங் செய்யப்பட்டவையதகவும் இருந்துள்ளன எனப் பொலிஸ் உயரதிகாரிகளுக்குத் தகவல் கிடைத்துள்ளது.

இதுபற்றிய மேலதிக விசாரணைக்கென இவ்விடயம் இரகசியப் பொலிசாருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. எனினும், கடந்த 3 வருடங்களாக இந்த ஊழல் விடயம் பின்தள்ளப்பட்டு இவ்விடயம் குறித்து பிரதான சந்தேகநபருக்கு பொலிஸ் உயரதிகாரி பதவியும் கடந்த வாரம் கிடைத்துள்ளது.

இந்த திருட்டுப் பொருட்களை வழங்கும் கேள்விப்பத்திர வழங்குனர் நாட்டில் பிரசித்தி பெற்ற ஆயுத வியாபாரி என்றபடியாலும், அவர் அரசின் ஆதரவாளர் என்றபடியாலும் குறிப்பிட்ட அச்சம்பவம் குறித்து மறைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## பேனாமுனை

# அது ஒரு நோய்!

இடைக் கால நிர்வாக சபை ஒன்றை அமைப்பது, அதை மூன்றாண்டுகளுக்கு இயங்க அனுமதிப்பது, அதன் பிறகு தேர்தல் நடத்துவது என்றெல்லாம் இப்போது பரவலாகக் கதைகள் அடிபடுகின்றன. இடைக் கால நிர்வாக சபை பற்றிய பேச்சு நடைபெற்றுக் கொண்டிருக்கும் அதேவேளை அரசாங்கத்தின் தீர்வு ஆலோசனைகளைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பது என்றும் அரசாங்கம் அபிப்பிராயம் தெரிவித்திருக்கின்றது

ஆலோசனைகளைப் புலிகளுக்கும் வழங்க வேண்டும் என்ற கருத்தை உதாசீனம் செய்த அரச தரப்பு தீர்வுப் பொதியைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப் போவதாகவும், அதைத் தாம் புலிகளுக்கு வழங்கப் போவதில்லை என்றும் அறிவித்துள்ளது. புலிகளுக்கு வழங்காத தீர்வுப் பொதியை வைத்து அரசாங்கம் என்ன செய்யப் போகிறது என்ற கேள்விக்கு எந்தப் பதிலும் இல்லை - அரச தரப்பிடமிருந்து. கூழ் காய்ச்சிக் குடிக்கப் போகிறதோ என்று நையாண்டி செய்கிறார் எனது நண்பர் ஒருவர்.

புலிகளுடன் உடன்பாட்டுக்கு வராத ஒரு தீர்மானத்தை எப்படி நடைமுறைப்படுத்த அரசாங்கத்திற்கு முடியப் போகிறது என்ற கேள்வி ஒன்றும் அலட்சியம் செய்யக் கூடிய கேள்வி அல்ல. ஏற்கெனவே, வடக்கில் உள்ளூராட்சித் தேர்தல்களை நடாத்தித் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் அங்கு போய்ச் செயற்பட முடியாத நிலையை எதிர் நோக்குகின்றனர். அவர்களைச் செயற்பட வைக்கும் பலம் அரசாங்கத்திற்கும் கிடையாது.

ஆக, இப்போது இந்தத் தீர்வுப் பொதியை மட்டும் புலிகளுக்குக் காட்டாமல் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதன் அர்த்தம் என்ன ?

ஓகஸ்டில் நடக்கவுள்ள தேர்தலுக்கு முன்பாகத் தாம் சொன்னவற்றில் ஒன்றிரண்டையாவது செய்திருக்கின்றோம் என்று காட்டுவது தான் அதன் நோக்கமா?

இப்போது பேசப்படுகின்ற இடைக்கால நிர்வாக சபைக்கும் இது தான் நடக்கப் போகிறது. ஏற்கெனவே த. வி. கூவும், ரெலோவும் தாம் இதில் பங்கேற்கப் போவதில்லை என அறிவித்துவிட்டன. நடைமுறைக்கு உதவாத - நடைமுறைப்படுத்த முடியாத திட்டங்களை அறிவிப்பதில் இந்த அரசாங்கத்திற்கு வேறு யாரும் இணையில்லை. ரூபா 03.50க்குப் பாண் தருவது என்று கூறியது முதல், யுத்தத்தினை ஒரு சில மாதங்களுள் முடித்து விடுவோம் என்று சொல்வது வரை !

உயிருள்ள குழந்தையைப் பிரசவித்து அது இறந்து போவது ஒரு துயரம்.

செத்த சிசுவைப் பிரசவிப்பது இன்னொரு வகைத் துயரம்.

செத்துப் போன சிசுக்களையே தொடர்ந்து பிரசவிப்பது என்பது வெறும் துயரம் மட்டுமல்ல, அது நோயும் கூட.

அரசாங்கம் இந்த நோய்க்கு முதல் வைத்தியம் செய்தாக வேண்டும் - குழந்தை பெற முயல்வதற்கு முன் !

# அரசாங்கம் எப்போ?

புலிகள் ஜனநாயக வழிக்கு வந்தால் தான் பேச்சுவார்த்தை என்றும், ஜனநாயக வழிக்கு வந்தால் தான் இடைக்கால சபையில் பங்கேற்க அனுமதிப்பது என்றெல்லாம் ஜனாதிபதி அவர்கள் அறிவித்து வருகிறார்கள். இந்த அறிவிப்புகளைக் கேட்கிற நேரமெல்லாம் மனதில் எழுகின்ற ஒரு கேள்வி இது தான்.

ஜனநாயக வழி என்றால் என்ன ?

ஜனநாயக வழி என்றால் ஆயுதங்களைக் கீழே போட்டு விட்டு, அரசியல் ரீதியாகச் செயற்படுதல் என்று அர்த்தம் என்று கூறுகிறார்கள். அதாவது, தேர்தலில் நிற்கத் தயாராதல், அதன் மூலம் தமது அரசியல் நோக்கங்களை நிறைவேற்ற முயல்தல்.

இதெல்லாம் சரி தான். இதைத் தான் த. வி. கூ. இவ்வளவு காலமும் செய்தது, செய்கிறது. ஆனால் இன்று வரை அது கேட்ட எந்த அரசியல் கோரிக்கைகளும் நிறைவேற்றப் படவில்லையே.....

ஒரு வேளை ஜனநாயக வழி என்றால், ஆயுதங்களைப் போடுவது மட்டுமல்ல, அரசாங்கம் சொல்வதை மட்டும் ஏற்றுக் கொள்வதும் சேர்த்துத்தான் ஜனநாயக வழி என்கிறார்களோ ?

அப்படி இல்லை, வெறுமனே ஆயுதங்களைக் கீழே போடுவது தான் மட்டும் என்றால், அரசாங்கத்திடம் கேட்க வேண்டிய முக்கியமான ஒரு கேள்வி இருக்கின்றது.

அரசாங்கம் ஜனநாயக வழிக்கு வருவது எப்போது ?

# பிதற்றும் கருணாநிதி!

இலங்கைக்கு இந்தியா கடன் கொடுப்பதாக அறிவித்திருந்தது. கொஞ்ச நஞ்சமல்ல, பத்துக் கோடி அமெரிக்க டொலர்கள். அதாவது எழுநூறு கோடி ரூபாய்கள்.

இந்த உதவி மனிதாபிமான அடிப்படையில் வழங்கப்பட்டது என்றும் அது இராணுவ நோக்கத்திற்குப் பயன்படுத்தப்பட முடியாது என்றும் பின்னர் - தமிழ் நாட்டிலிருந்து இதற்கு எதிராகக் குரல்கள் எழுந்த போது - தெரிவிக்கப்பட்டது. அது சரி, மனிதாபிமான உதவி என்றால் என்ன ?

யுத்தம் புரிகிற நாடு ஆயுதங்களை வாங்காமல், உணவுப் பண்டங்களை வாங்க வேண்டும், அப்படி வாங்குவதற்குத் தான் இந்த உதவி வழங்கப்பட்டிருக்கிறது என்று கொள்ளலாமா? அரசாங்கத்திடம் மனிதாபிமானம் காட்டும் இந்தியப் பிரதமர் அவர்கள் எதிர்நோக்கும் நெருக்கடி என்று எதைக் கருதுகிறார் ?

பலாலியிலிருந்து இராணுவத்தை வெளியேற்றுவதில் உதவி செய்யலாம் என்று அறிவித்ததை மனிதாபிமானம் கலந்த ஒரு அறிவிப்பாகப் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால் கொழும்பிலிருக்கும் அரசாங்கத்திற்குக் கடன் உதவி செய்வதில் என்ன மனிதாபிமானம் இருக்கிறது என்று புரியவில்லை.

உண்மையில் இந்திய அரசாங்கம் மனிதாபிமான அடிப்படையில் உதவ விரும்பினால் இலங்கை அரசாங்கத்தின் கிபீர் விமானங்களின் குண்டு வீச்சுக்கும், பிற போர் நடவடிக்கைகட்கும் பலியாகிக் கொண்டிருக்கும் மக்களுக்கு - அப்பாவி மக்களுக்கு - உதவியிருக்கலாம். அல்லது இலங்கையின் இன அழித்தொழிப்பு யுத்தம் காரணமாக அதன் மீது ஈராக் போல ஒரு பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டிருந்தால் இப்படி ஒரு கடனுதவி பற்றி அறிவித்திருக்கலாம்.

ஆனால் அதெல்லாம் இல்லாமல் "மனிதாபிமான" உணர்வை வெளிப்படுத்தியிருக்கிறது இந்தியா.

ஒரு வேளை இலங்கை கேட்ட போது படையுடன் வந்து புலிகளைத் தாக்குவதற்காக இறங்க மறுத்த " குற்ற உணர்வு " காரணமாக, யுத்தத்தைத் தொடர்ந்து நடத்துவதற்காக இந்த உதவியை வழங்க முன் வந்ததா ? கேள்விகள் எழுவதைத் தவிர்க்க முடியவில்லை. இந்த உதவிச் செய்தி யுத்த சூழலில் வாழும் தமிழ், முஸ்லீம் மக்களுடைய தலையில் பேரிடியாக வந்து விழுந்ததென்றால், தமிழ் நாட்டு முதலமைச்சர் மு. கருணாநிதியின் சளாப்பல் கதை அதை விடப் பேரிடியாக வந்து விழுந்திருக்கிறது.

யுத்தத்துக்கு அந்த உதவி பயன்படுத்தப்பட மாட்டாது என்று பிரதமர் அறிவித்துவிட்ட படியால், நாம் அது பற்றி அலட்டக் கூடாது என்கிறார் அவர்.

ஆமாம். "மெளனம் கலக நாஸ்தி " என்ற "உண்மைக்கு " உதாரண புருஷராகி விட்டார் கருணாநிதி இப்போதெல்லாம். வெகு விரைவில் ஆயுதம் கொடுத்தால் கூடப் பரவாயில்லை. அதைத் தமிழ் நாட்டுக்கு எதிராகப் பயன்படுத்தக் கூடாது என்று பிரதமர் சொன்னால் சரி என்று இருந்தாலும் இருந்து விடுவார் போலும் !

பதவி, மனிதர்களை மாற்றும் என்பது உண்மை தான். ஆனால் பிதற்றவுமா செய்யும் ?

# ‘வவுச்சர்’ வளர்க்கும் தமிழ்?

இப்போதெல்லாம் வடக்குக் கிழக்கில் அரசியல்வாதிகள் மௌனிகளாகிப் போய்விட்ட குறையை மாகாண சபைச் செயலாளர்கள் தீர்த்து வைக்கத் தொடங்கியுள்ளார்கள். மேடை போட்டுக் கொடுத்து விட்டால் போதும் அரசியல்வாதிகளே திணறிப் போகும்படியான உரைகளை இவர்கள் நிகழ்த்தி விடுவார்கள்.

போரினாலும், புறக்கணிப்புக்களாலும், நெருக்கடிகளினாலும் நொந்து போயிருக்கும் தமிழ் மக்களை உண்டு கொழுத்து உல்லாசக் குளுகுளு அறைகளில் பணம் பண்ணிக் கொண்டிருக்கும் இவர்களும் மடையர்களாக்கத் தீர்மானித்து விட்டார்கள் போலும்.

மாகாணசபை நிர்வாகத்தில் பத்து வருடங்களாகத் தனிக்காட்டு ராஜாக்களாக ஆட்சி செலுத்திக் கொண்டிருந்த செயலாளர்கள் அண்மையில் திருகோணமலை வலயக் கல்விப் பணிமனை நடத்திய வலயத் தமிழ் மொழித்தின விழாவில் கிடைத்த மேடையில் தமிழுக்காக நீலிக் கண்ணீர் வடித்து மக்கள் முன் நடித்துக் காட்டியிருக்கிறார்கள்.

கல்விச் செயலாளர் க. பரமேஸ்வரன் தனதுரையில் 'தமிழில் நிர்வாகம் என்று கருத்தரங்குகள் தாம் நடைபெறுகின்றன. ஆனால், நிர்வாகத்தை தமிழில் நடத்த முடியவில்லை. சிங்களப் பகுதிகளைப் பார்க்கும் போது பொறாமையாக இருக்கிறது' என்ற பாவனையில் அழுது வடித்திருக்கிறார். பிரதம செயலர் கி. கிருஷ்ணமூர்த்தியோ 'மொழியை அரசியலுக்காகப் பயன்படுத்துகிறார்கள். ஆனால், நிர்வாகத்துக்குப் பயன்படுத்தவில்லை. மாகாண கீதத்தைக் கூட உருவாக்கவில்லை. மிகவிரைவில் உருவாக்குவோம்' என்ற வகையில் நடனமாடித் தள்ளியிருக்கிறார்.

இவர்கள் இரண்டு பேருடைய உரைகளைப் பார்த்தால் தமிழுக்கு அரியணை பெற்றுக் கொடுக்க இவர்கள் தங்கள் வாழ்க்கையை அழித்துக் கொள்வது போலவும், வேறு தீயசக்திகள் இவர்களது புனித நோக்கங்களுக்கு இடையூறு செய்வது போலவும் ஒரு தோற்றமே காணப்படுகிறது. ஆனால், உண்மையில் அரசியல்வாதிகள் பதவிக்காகத் தமிழைப் பயன்படுத்துகிறார்கள். இவர்கள் பணத்துக்காகப் பயன்படுத்துகிறார்கள். தமிழுக்கென்றோ தமிழ் மக்களுக்கென்றோ எதையும் செய்யாது பதவியில் இருக்கும் காலத்தில் எப்படி உச்சநிலையில் பணம் பண்ணலாம். எவ்வளவு காலத்துக்கு இந்தப் பதவியைத் தக்க வைத்துக் கொள்ளலாம் என்று சிந்திக்கும் மனப்பாங்கு இருக்கின்ற வரையில் இன்னும் பத்து வருடங்கள் இவர்கள் பதவியில் இருந்தாலும் இந்த இழிநிலை மாறப் போவதில்லை.

அரசியல்வாதிகளின் கைகளில் மாகாண சபை இருந்த குறுகிய காலத்தில் கட்டிடங்களில் மாகாண சபைக் கொடிகள் பறந்தன. வாகனங்களில் தமிழ் எழுத்துக்களும் மாகாணச் சின்னமும் பளிச்சிட்டன. எங்கும் தமிழ்மயமாகவே காட்சியளித்தது. (தமிழ் மக்களுக்கு ஏதாவது கிடைத்ததா என்பது வேறு கதை)

அரசியல்வாதிகள் போய் அதிகாரிகளின் கைகளுக்கு என்று மாகாண சபை நிர்வாகம் வந்ததோ அன்றே ஊழலும், சுரண்டலும் ஆரம்பித்து விட்டதோடு தமிழின் உபயோகமும் படிப்படியாகக் குறையத் தொடங்கியது.




இவர்கள் செய்த முதல் வேலை கொழும்பு அரசுக்குத் தாசானுதாசர்களாகத் தங்களைப் பிரகடனப்படுத்திக் கொண்டது தான். மாகாணக் கொடியைக் கொண்டு போய் ஒளித்து விட்டார்கள். மாகாணச் சின்னங்களை வாகனங்களிலிருந்து அழித்து விட்டார்கள். பெயர்ப் பலகைகள் பலவற்றில் தமிழுக்கு இரண்டாவது இடத்தை வழங்கினார்கள்.

செயலளார்களே அரசுக்குக் காவடி எடுக்கும் போது நாங்கள் என்ன குறைந்தவர்களா என்று திணைக்களத் தலைவர்கள் நினைத்தார்களோ என்னவோ, அவர்களும் தங்கள் பங்குக்கு தமிழ் ஒழிப்பில் ஈடுபடத் தொடங்கினார்கள். ஆங்கிலத்தில் கடிதங்களை எழுதினார்கள். பொதுமக்களுடன் தொடர்பு கொள்ளும் போது கூட ஆங்கிலத்தில் தொடர்பு கொள்வதையே பெருமையாகக் கருதினார்கள். தமிழ் மொழித்தினப் போட்டிக்கு நடுவர்களாகப் பணிபுரிந்தவர்களது கொடுப்பனவுக் காசோலையை மட்டுமல்ல தழுவற் கடிதத்தைக் கூட ஆங்கிலத்திலேயே எழுதினார்கள்.

படித்தவர்கள் என்றால் ஆங்கிலத்தில் உரையாடுவதும் ஆங்கிலத்தில் கருமம் ஆற்றுவதும் கட்டாயம் எனக் கொண்டார்கள். சிங்கள அதிகாரிகளையோ, சிங்கள அரசியல்வாதிகளின் கையாட்களையோ கண்டாற் போதும் சுத்தமான சிங்களத்தில் பேச ஆரம்பித்து விடுவார்கள். இதன்மூலம் பெரும்பான்மையோரின் அபிலாஷைகளை மீறாத அதிகாரிகளாக நடந்து கொண்டார்கள். கல்வித் திணைக்களம் இன்னும் ஒரு படி மேலே போய் தங்கள் வாகனங்களில் "அத்யாபன" என்று தனிச்சிங்களத்தில் பொறித்து அழகாகப் பவனி வந்து கொண்டிருக்கிறது.

இவர்கள் நடத்திய தமிழ் மொழிக் கருத்தரங்குகள், ஆய்வரங்குகள் அறிஞர்பட்டறை, நாடகப்பட்டறை, தமிழ் விழாக்கள் என்பன தமிழ்மேற் கொண்ட விருப்பால் நடத்தப்பட்டவை அல்ல. அத்தனையும் "வவுச்சர்" காய்க்கும் மரங்களாக இவர்களுக்குப் பயன் தந்தன. வவுச்சர் இல்லையென்றால் தமிழ் மொழி வாழ்த்துப் பாடக்கூட இவர்கள் தயாராக இல்லை என்பதே உண்மையாகும்.

தமிழ் மொழி அமுலாகவில்லையென்று இவர்கள் பொதுமக்களிடம் ஏன் சொல்ல வேண்டும்? பொதுமக்களா தமிழ் மொழி அமுலாக்கத்துக்குத் தடையாக இருக்கிறார்கள். கொடியை ஒளித்து சின்னத்தை அழித்தது எதிலும் பொதுமக்கள் பங்கு இல்லையே. இவர்கள் தானே செய்தார்கள்.

இலங்கையில் தமிழ் மொழியைப் பேணிப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு மற்றெந்த அமைப்புகளை விட வடக்கு கிழக்கு மாகாண சபைக்குத் தான் அதிகமாயிருக்கிறது. இவர்கள் நினைத்திருந்தால் தமிழ்நாடு, மலேஷியா, சிங்கப்பூர் முதலான நாடுகளுடன் மொழி இணைப்பை ஏற்படுத்தி விஞ்ஞான கணனித் துறைகளுக்கு பொதுவான கலைச் சொற்களை ஆக்கியிருக்கலாம். புதிதாக ஆக்கப்படும் சொற்களுக்குப் பொதுமையை ஏற்படுத்தி இருக்கலாம்.

இவற்றைச் செய்வதற்குத் திறமை போதாவிட்டால் வடக்கு கிழக்கில் மாகாணச் சபைக் கருமங்களைத் தமிழிலேயே நடத்தியிருக்கலாம். இதற்கு எந்தச் செலவோ திறமையோ தேவையில்லை. மொழிப்பற்று இருந்தாலே போதும். ஆகக் குறைந்தது தத்தம் கையொப்பங்களையாவது தமிழில் இடுவதற்கு முடிவு செய்திருக்கலாம்.

ஆங்கிலம் பேசாவிட்டால் அல்லது எழுதாமல் விட்டால் தங்களைப் படிக்காதவர்கள் என்று சமூகம் நினைத்து விடுமோ என்ற அடிமையுணர்வு இவர்களுக்கு. தமிழ் மொழி வளர்வதற்கோ நிர்வாகத்தில் இருப்பதற்கோ அடிப்படைத் தேவை தமிழர் தம் மொழியில் பற்று வைக்க வேண்டும். இது வெளியார் சொல்லி வருவதில்லை.

வடக்கு கிழக்கு மாகாணச் சபைச் செயலாளர்கள் அரசுக்கும் பெரும்பான்மை இனத்தவருக்கும் எவ்வளவு தான் விசுவாசமாகச் செயல்பட்டாலும் "தமிழர்" என்ற நிலையில் அவர்கள் சிங்களவர்கள் முன்னால் ஒடுங்கித் தான் நிற்கிறார்கள். அண்மையில் கைத்தொழில் அமைச்சர் குண்டுவெடிப்பில் கொல்லப்பட்ட போது சொய்ஸாபுரத்து தொடர்மாடிக் பிளாட்டுகளில் பெருமையுடன் தங்கியிருந்த சில செயலாளர்களும், அவர்தம் குடும்பங்களும் காடையர்களிடமிருந்து தப்பி வந்தது பெரும்பாடாய்ப் போயிற்று. பொல்லு, கத்தி சகிதம் சூழ்ந்த கோஷ்டிக்கு இவர்கள் தமிழர்களாகத் தான் தென்பட்டார்களேயொழிய வடக்குக் கிழக்கில் முடிசூடா மன்னர்களாகத் சிங்கள அரசின் தாசானுதாசர்களாகத் தெரியவில்லை. அவர்கள் அன்று கேட்ட வசவுகளும், பொலிசார் வந்து காப்பாற்றிய நிலையும் இன்று கூட செயலாளர்களின் முகங்களில் பயப்பிராந்தியைக் காட்டிக் கொண்டிருக்கிறது.

இனிமேலாவது திணைக்கள வாகனங்களில் மகளுக்கு வாகனம் ஓட்டப் பழக்குவதையும், வடக்கு கிழக்கு மக்கள் பெற்றுத் தந்த அதிகாரத்தில் "வண்டில் விடுவதையும்" நிறுத்திக் கொண்டு எடுக்கிற சம்பளத்துக்கேனும் உழைக்க மாகாணச் சபைச் செயலாளர்கள் முன்வர வேண்டும். இல்லையேல், சொய்ஸா புரத்தில் சிங்களக் காடையர்கள் தான் சூழ்ந்தார்கள். வடகிழக்கிலோ பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் சூழ்ந்து கொள்வார்கள். அப்போது காப்பாற்ற சிங்களப் படையும் வராது.

**விவேகி**

---

## மொரட்டுவை பல்கலைக்கழகம்:

# இறுதி நம்பிக்கைகளும் தகர்கின்றன!

இனவாதமற்ற இலங்கையைப் படித்த இளைஞர்கள் மூலமாகக் கட்டியெழுப்புவோம் என்ற இறுதி நம்பிக்கையும் மொரட்டுவைப் பல்கலைக்கழகத்தில் அண்மையில் நடந்த சம்பவத்தால் தகர்ந்து போயுள்ளது.

போர்வீரர் தினமான ஜுன் 7ம் திகதி இரத்மலானை கொழுமடுச் சந்தியில்' இடம்பெற்ற குண்டுவெடிப்பையும்அதில் கைத்தொழில் அமைச்சர் சி.வி. குணரத்ன உட்பட பலர் பலியானமையையும் அடிப்படையாக வைத்து மொரட்டுவைப் பல்கலைக்கழகப் புத்திஜீவிகளின் இனவாதச் சுயரூபம் தலைவிரித்துத் தாண்டவமாடியிருக்கிறது.

இந்த நிலை திடீர் உணர்ச்சியின் வெளிப்பாடோ அல்லது புறச்சூழலால் எழுந்த கோலமோ அல்ல. மெல்ல மெல்ல அவர்கள் மனதில் குடிகொண்டிருந்த எண்ணத்தின் சமயம் பார்த்த பிரதிபலிப்பு என்று தான் கொள்ள வேண்டியிருக்கிறது.

தாங்கள் ஆளும் இனம் என்றும், தமிழர்கள் ஆளப்படும் இனம் என்றும், இவர்கள் தங்களுக்குள் கருதி இருந்தமையிலோ என்னவோ, சமயம் வாய்க்கும் போதெல்லாம் இங்கு தமிழ் மாணவர்கள் புறந்தள்ளப்பட்டே வந்திருக்கிறார்கள். மாணவர்கள் பயன்பாட்டுக்கென வழங்கப்பட்டிருக்கும் தொலைக்காட்சிகூட சிங்கள மாணவர்கள் விருப்பத்தை மட்டுமே பூர்த்தி செய்யும் உபகரணமாகவே இன்று வரை இருந்து வருகிறது.

இலங்கை அணி கலந்து கொள்ளும் கிரிக்கெட் ஆட்டத்தை மட்டும் ரசிக்கும் சிங்கள மாணவர்கள் வேறு அணிகள் விளையாடுவதைத் தமிழ் மாணவர்கள் பார்த்து ரசிப்பதை விரும்புவதில்லை. குறிப்பாக இந்தியாவின் ஆட்டம் என்றால், எத்தனை தமிழ் மாணவர்கள் ரசித்துக்கொண்டிருந்தாலும் நாகரீகத்துக்குத் தானும் ஒரு வார்த்தை கேட்காமல் தனியொரு சிங்கள மாணவனே அலைவரிசையை மாற்றிவிடுவான். தனக்கு பயன்தருகிறதோ இல்லையோ தமிழ் மாணவர்களின் விருப்பத்தை மறுக்க வேண்டும் என்பதற்காக வேறு அலைவரிசைகளை மாற்றி மாற்றிப் பார்த்துக் கொண்டிருப்பார்கள். குறிப்பாகத் தமிழ்ப்படம் காட்டப்படுமானால் அதைத் தமிழ் மாணவர்கள் ரசித்துவிடக் கூடாதென்பதில் கவனமாகச் செயல்படுவார்கள்.

மறைந்து கிடந்த சிங்கள இனவாத உணர்வுகளுக்குத் தீனிபோட்டு வளர்த்த பெருமை வீரவிதான இயக்கத்தையே சாரும். இவர்களின் உபாயத்தால் இவ்வருட ஆரம்பத்தில் மொரட்டுவைப் பல்கலைக்கழக வளாகத்தில் அமைக்கப்பட்ட "சிங்களக் கலாசார அமைப்பு" கூட்டங்கள், கலந்துரையாடல் என்பவற்றை நடத்தி இனவாதக்கருத்துக்களை வேகமாகப் பரப்பியது. தமிழ் மாணவர்கள் எல்லாம் புலிகள்: நம்பத்தகாதவர்கள் என்ற எண்ணத்தைத் தோற்றுவித்தது.

இவ் அமைப்பின் ஆரம்பத்தில் பின்னர், சகஜமாகப் பழகிய சிங்கள மாணவர்கள் கூடத் தமிழ் மாணவர்களிடமிருந்து பிரிந்து செல்லத் தொடங்கினார்கள். பல்கலைக்கழக வளாகமெங்கும் தமிழர் விரோத சுவரொட்டிகள் தேசபக்தி என்ற போர்வையில் ஒட்டப்பட்டன.

வரலாறுகள் திரிக்கப்பட்ட கருத்தரங்குகள் இடம்பெற்றன. தமிழர்கள் வந்தேறு குடிகள் என்றும், படையெடுப்பாளர்கள் என்றும், காட்டப்பட்டனர். தமிழருக்கென்று இலங்கையில் நிலம் எதுவும் கிடையாது என்றும், வடக்குக் கிழக்கில் சிங்கள அரசுகள் இருந்தன என்றும், திருகோணஸ்வரர், திருக்கேஸ்வரர் போன்ற தலங்கள் பௌத்த விகாரைகளை அழித்து அந்த இடத்திலேயே கட்டப்பட்டவை என்றும் போதிக்கப்பட்டன. தொல்பொருள் ஆராய்ச்சி முடிவுகள் இவற்றுக்குச் சான்று கூறுகின்றன என்றும் கூறப்பட்டன. இத்தகைய கருத்துக்கள் சிங்கள மாணவர்கள் மத்தியில் விதைக்கப்படுவதற்கு பல்கலைக்கழக விரிவுரையாளர்கள்




சிலர் கூட ஆதரவு தந்தார்கள் என்பதும் ஒரு கசப்பான உண்மை.

ஆனையிறவு முகாம் வீழ்ச்சி இவர்களைச்



சினங்கொள்ளவைத்தது. தமிழ் மாணவர்களினின்றும் விலகி நின்றார்கள். சந்தர்ப்பம் வாய்க்கும் போதெல்லாம் தூஷண வார்த்தைப் பிரயோகங்களைச் செய்தார்கள். வளாகச் சுவரெங்கும் தூஷணமான சுவரொட்டிகள் ஒட்டினார்கள்.

இந்த நிலையில் தான் கொழுமடுச் சம்பவம் இடம்பெற்றது. திடீரெனச் சிங்கள மாணவர் முகங்கள் இறுகின. பலத்த சத்தத்துடன் தமிழர்களுக்கெதிரான துவேஷ வார்த்தைகள் கொட்டப்பட்டன. தமிழ் மாணவர்களை முறைத்துப் பார்ப்பதும் தங்களுக்குள் கூடி விவாதிப்பதுமாக இருந்தார்கள். சிலர் தொலைக்காட்சியில் செய்திகளை அலைவரிசைகளை மாற்றி மாற்றிப் பார்த்து ஆவேசங் கொண்டு உரக்கக் கத்தினார்கள்.

அண்மையில் தனியார் ஒளிபரப்பு நிலையமொன்று 'பம்பாய்' படத்தை ஒளிபரப்புச் செய்ய முனைந்த போது வன்முறைக் காட்சிகள் இடம்பெறுவதாகக் கூறி அப்படத்தை தணிக்கை செய்த அதிகாரிககள் சிதறுண்ட உடல்களையும், கொட்டிய குருதியையும் காட்ட சகல தொலைக்காட்சி நிறுவனங்களுக்கும் அனுமதி வழங்கியது ஆச்சரியமானது தான்.

சிங்கள மாணவர்களின் போக்கைக்கண்ட தமிழ் மாணவர்கள் தங்களுக்கெதிரான திட்டங்கள் ஏதோ உருவாவதை உணர்ந்து கொண்டபோதும்

⊃19

# இ.தொ.கா. புனைவுகளும் உண்மைகளும்

மலையக மக்களது வாழ்வியலோடு இணைந்து விட்டதாகவும், மலையகத் தமிழரின் நல்வாழ்வுக்காக தன்னை அர்ப்பணித்துள்ளதாகவும், தாம் மலையகத் தமிழரின் ஏகபோக பிரதிநிதிகள் எனவும், மாபெரும் இயக்கமெனவும் செய்யப்படும் புனைவுகள் அத்தனையும் தற்போது வெற்றுப் பிதற்றல்காகி வருகின்றன. இப்புனைவுகளையே மூலதனமாக்கி ஒரு தேசத்தையே விலைபேசிவிற்கும் கும்பலொன்று தம்மை மலையக மக்களின் பிரதிநிதிகளென மார்தட்டிக் கொள்கிறது. இப்புனைவுகளின் அரசியலால் பெரும் பலன்களை அடைந்தவர்கள் மக்கள் விரோத பாசிச கும்பலும், அவர்களின் அடிவருடிகளும், ஆளும் வர்க்கங்களுமேயாகும்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தொடர்பான புனைவுகளை பின்வருமாறு வகைப்படுத்திக் கொண்டு அதன் அரசியலையும் உண்மையையும் விவாதிக்கலாம்.

1. மலையகத் தமிழரின் ஏகபோக பிரதிநிதி இ.தொ.கா.
2. மலையகத் தமிழரின் உரிமைகளுக்காக அயராது போராடிய இயக்கம்.
3. அகிம்சை வழிநின்று இயங்கும் இயக்கம்.
4. தொழிலாளர்களுக்கான உரிமைக் குரலாய் ஒலித்து வரும் இயக்கம்.
5. இ.தொ.கா. தான் பிரஜாவுரிமை பெற்றுக் கொடுத்தது.
6. இ.தொ.கா. தான் வாக்குரிமை பெற்றுக் கொடுத்தது.
7. இ.தொ.காவிற்கு பத்து இலட்சம் மக்களின் பலம் உள்ளது.
8. இ.தொ.காவே யார் ஆட்சி செய்வது எனத் தீர்மானிக்கிறது.

இப்புனைவுகள் அனைத்தும் நன்கு திட்டமிடப்பட்ட வகையில் இ.தொ.காவின் தலைமையினாலும், அத்தலைமைகளால் பயன்பெறும் பேரினவாத அரச இயந்திரத்தாலும் இந்திய ஆளும் வர்க்கங்களும், தொடர்பூடகத்துறை முதலாளிகளாலும் புனையப்பட்டுள்ளன.

இதன் மூலம் பெரும் பயன்பெற்றவர்கள் பேரினவாத ஆட்சியாளர்களும், இ.தொ.காவின் தரகு முதலாளித்துவ தலைமைத்துவமுமேயாகும்.

ஆனால், இப்புனைவுகளின் பின்னால் ஒரு தேசம் செத்துக் கொண்டிருக்கிறது. வறுமை, நோய், பிணி, அறியாமை, மூடத்தனங்கள், அடிமைத்துவ வாழ்வின் அவலச் சுமைகளோடு 180 வருடங்களாக உரிமையிழந்து கிடக்கிறது என்பதை உலகம் அறியமாட்டாது.

மலையகத் தமிழர்கள் சுதந்திரத்தின் பின்னர் பேரினவாத தாக்குதல்களுக்கு முகம் கொடுக்க முடியாமல் நாலாபுறமும் சிதறியோடினார்கள். இலங்கை - இந்திய அடிமை சாசனங்கள் மூலம் சிதறடிக்கப்பட்டார்கள். பாரிய புலப்பெயர்வுக்கு உள்ளாக்கப்பட்டார்கள். இவ்வாறு சிதைக்கப்பட்ட சமூகத்தின் பிரநிதித்துவத்தை இ.தொ.கா வால் வழங்க முடிந்ததா? வன்னியிலும், முல்லைத்தீவிலும், கிளிநொச்சியிலும் வாழ்விழந்து போன மலையகத் தமிழ் மக்களின் பிரதிநிதியாக இ.தொ.கா. இருக்கின்றதா?

தாயகம் திரும்புவதாகக் கூறி புலம்பெயர்க்கப்பட்டு இந்திய தேச ஆளும் வர்க்கத்தால் வஞ்சிக்கப்பட்ட ஆறு லட்சத் தமிழர்களை இ.தொ.கா. பிரதிநிதித்துவப் படுத்துகின்றதா?

கொழும்பு நகரிலும், புறநகர்களிலும், உதிரிகளாய் நாடோடிகளாய் அல்லற்பட்டு சேரிகளில் வாழும் பத்தாயிரக்கணக்கான மலையகத் தமிழரை இ.தொ.கா. பிரதிநிதித்துவப் படுத்துகின்றதா?

பத்தாயிரக்கணக்கான வேலையற்ற மலையக இளைஞர்கள், சிறைகளில் வாடும் மலையக இளைஞர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெண்களின் பிரதிநிதியாக இ.தொ.கா. இருக்கின்றதா?

தலித்துக்கள், பெண்கள், சிறுவர்கள் தொடர்பான இ.தொ.காவின் பங்களிப்பு என்ன?

காலங்காலமாக இ.தொ.காவின் அதிகாரபீடம் பேரினவாத அதிகாரப்பீடங்களுடன் மாறி மாறி கைகோர்த்துக் கொண்டு மலையகத் தமிழருக்கு திட்டமிட்டு துரோகமிழைத்து வந்துள்ளது. பல்வேறுபட்ட மக்கள் இயக்கங்கள், சிறிய தொழிற்சங்கங்கள், முற்போக்கு சிந்தனையாளர்கள் உருவாக்கும் சமூக மேலெழுச்சிகளை, போராட்டங்களை, திட்டங்களை நாகூசாமல் பறித்தெடுத்துக் கொண்டு அரசியல் அறுவடையை மட்டும் பெற்றுக் கொண்டு அதனை அரசியல் சுயநலனுக்காக விற்றுப்பிழைப்பு அரசியல் நடத்தி வந்தது தான் இ.தொ.கா.

மாதாந்தம் மக்கள் தரும் இலட்சக்கணக்கான ரூபா சந்தாப் பணத்திற்கும் நன்கொடைகளுக்கும் என்ன நடக்கிறதென மக்களுக்குத் தெரியாது. தன்வாழ்நாள் பூராவும் சந்தா செலுத்திய ஒரு தொழிலாளி தான் எந்தத் தொழிற்சங்கத்தின் உறுப்பினர் என்றும் தெரியாமல் ஒரு போதுமே தொழிற்சங்கத்தின் பக்கமே போகாமலும் தான் மடிந்து போகிறார்.

பிரஜாவுரிமை பறிப்பின் போது பார்வையாளர்களாக இருந்த 7 பேரும் இ.தொ.காவினர் தான். பின்னர் தமது ஆசனங்கள் பறிபோய் விடும் என்பதால் சத்தியாக்கிரகம் நடத்தியவர்கள். பின்னர் சிறிமா சாஸ்திரி ஒப்பந்தத்தின் முன் சரணடைந்ததன் மூலம் பத்து இலட்சம் தமிழர்களை நாடு கடத்துவதற்கு துணைபோனது இ.தொ.கா. தலைமை. வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை அங்கீகரிக்க மறுத்து பேரினவாதிகளுடன் சல்லாபித்ததன் மூலம் இ.தொ.கா. தலைமை வட - கிழக்கு மலையகத் தமிழர்கள் ஒன்றுபட்டு அரசியல் உரிமைகளை கோருவதற்குரிய சந்தர்ப்பத்தை நிர்மூலமாக்கியது. கேவலம் ஒரு அமைச்சர் பதவிக்காக இருபெரும் அரசியல் சமூகங்களின் அரசியல் ஒருமைப்பாடு சிதைக்கப்பட்டது.

ஆண் - பெண் சம்பளத்தை பெற்றுக்கொடுத்து சாதனை படைத்ததாக மார் தட்டும் இ.தொ.கா. தலைமை 1998ம் ஆண்டு முதல் தேயிலைத் தோட்டத் தொழிலாளருக்கும், இறப்பர் தோட்டத் தொழிலாளருக்கும் வெவ்வேறு சம்பளத் திட்டத்தை அங்கீகரித்து துரோகமிழைத்தது. தொண்டமானை அமைச்சராக வைத்துக் கொண்டு ஐ.தே.க. அரசாங்கம் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட மலையகத் தமிழ்க் குடும்பங்களை மகாவலித் திட்டத்தின் கீழ் விரட்டியத்தது. 1977, 1979, 1981, 1983, 1986 காலப் பகுதியில் திட்டமிட்ட வன்முறைகள் மலையகத் தமிழர் மீது நடத்தப்பட்ட போது அமைச்சரவையில் குந்தியிருந்தவர் தான் அவர். சந்திரிகா அரசில் ஒட்டிக் கொண்டு அமைச்சராக இருந்த போது சக அமைச்சர் ஒருவரே முன்னின்று வேவல்வத்தையை எரித்த போதும், அவர் அமைதியாக ஆனால் அமைச்சராகவே இருந்தார். சந்திரிகா அரசு பல்வேறு பெயர்களில் 50,000 ஹெக்டருக்கு மேலான மலையகக் காணிகளை மலையகத் தமிழ் மக்களிடமிருந்து அபகரித்துள்ளது. திட்டமிட்ட வகையில் அது தனது ஆக்கிரமிப்புகளை நடாத்துகின்றது. நூற்றுக் கணக்கான மலையக இளைஞர்கள், ஆசிரியர்கள், கூட கைது செய்யப்பட்டு சிறைவைக்கப்பட்டுள்ளனர்.



மலையகத்தின் மக்கள் ஜனநாயக உரிமைகளுக்கும், செயற்பாடுகளுக்கும், தொடர்ச்சியாக அரை நூற்றாண்டுகளுக்கும் மேலாக இ.தொ.கா கொடுத்து வரும் அச்சுறுத்தல்கள் பாசிசத் தன்மை கொண்டவை. மக்களது தன்னியல்பான போராட்டங்களை நசுக்கியும், ஒடுக்கியும் அல்லது அதன் பயன்களை பறித்தெடுத்தும் வந்துள்ள இ.தொ.கா. தலைமைத்துவங்கள் ரவுடித்தனங்கள், திட்டமிட்ட நெருக்குதல்கள் மூலம் மலையகத் தமிழரின் அடிமை வாழ்வைத் தாபரித்து வருவதோடு அதற்கு உரிமை கோரி, தாம் இல்லையென்றால் "மலையகம் அமைதிப் பூங்காவாக இருக்காது" என மார்தட்டிக் கொண்டு பேரினவாதிகளின் அரவணைப்பைப் பெற்றுக் கொண்டுள்ளது.

இ.தொ.காவின் வெற்றுப் புனைவுகளை நம்புகிற உலகின் கண்களுக்கு மலையகத் தமிழரின் அவலவாழ்வு தெரியப் போவதில்லை. அவர்கள் தெரிந்து கொள்ள முயல்வதுமில்லை. அமைச்சர்களையும், அதிகாரிகளையும் வைத்துக் கொண்டு மலையகத் தமிழரை மதிப்பிடும் சக்திகளுக்கு மலையக மக்களது துயர்மிகு வாழ்வு புலப்படப் போவதில்லை.

தோட்டத்துறைக்கான உள்ளகக் கட்டமைப்பு அமைச்சு திட்டமிட்டு செய்ய வேண்டிய எவ்வளவோ கருமங்கள் இருக்கின்றன. ஆனால், அவ்வமைச்சு நகைப்பிற்கிடமான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது. தமது நண்பர்கள், உறவினர்கள், கட்சி அமைப்பாளர்களிடம் கட்டுமானப் பணிகளைக் கொடுத்து இவ் அமைச்சு நிதியை விரயமாக்கி வருகின்றது. இவ் அமைச்சினால் செய்யப்படும் எந்தக் கட்டுமான வேலையும் பயனற்றதாகவும், ஊழல் நிரம்பியதாகவுமே காணப்படுகின்றது. மேலும் மக்களைச் சிந்திக்கவிடாமல், செயற்படவிடாமல் முடக்க என்னென்ன தேவையோ அவை தான் அமைச்சின் திட்டம் போல் தெரிகிறது. அதனை மலையக மக்களுக்கான அமைச்சு என்பதை விட காங்கிரஸ் கட்சிக்கான அமைச்சு, காங்கிரஸ் கல்வி அமைச்சு, காங்கிரஸ் கலாசார அமைச்சு என வகைப்படுத்துவது தான் மிகப் பொருத்தமானதாக இருக்கும். அவற்றின் ஒவ்வொரு நடவடிக்கையும் கட்சி நடவடிக்கையே அன்றி வேறல்ல.

இந்தக் கட்டத்தில் இ.தொ.காவுக்குள் வெடித்துள்ள பிளவு தவிர்க்கப்பட முடியாததுதான். ஆனால், கடந்த காலப்பகுதியில் இ.தொ.காவில் அப்துல் அசீஸ் முதல் ஐவர் குழு வரையான பல்வேறு பிளவுகளின் அரசியல் என்னவோ சுயநலம் தான். இவற்றுக்கு எந்த விதமான சித்தாந்த பரிமாணமோ மக்கள் நலனோ கிடையாது. ஆனால், பிளவுண்டு செல்வோர் தம்மை மக்கள் நலனை நேசிப்போராக அடையாளப் படுத்திக் கொள்ள முனைவது ஒன்றும் புதிதல்ல.

தொண்டமானின் அந்திம காலத்தில் அவரது மக்கள் விரோத நடவடிக்கைகளுக்கு மக்கள் பாடம் புகட்டத் தொடங்கினர். தொழிலாளர்களின் தன்னியல்பான எழுச்சிகளை நசுக்கிவிட்டு அந்தமக்களின் நலன்களின் மேல் நடைபோட அவரால் முடிந்தது. மக்களின் கழுத்தை நெரித்துக் கொண்டே மக்களைப் பற்றி ஓலமிட அவரால் முடிந்தது. இது அவருக்கு மட்டுமே கை வந்த கலை.

தொண்டமானுக்குப்பின் மலையகம் நீண்டநாள் துயிலில் மூழ்கிக் கிடக்காது என்பதை உணர்ந்த பேரினவாதம் வாரிசுரிமையாக அமைச்சர் பதவியை ஆறுமுகம் தொண்டமானுக்கு கொடுத்தது. ஆனால், அரசியல் கேடித்தனம் நிரம்பியவர்களால் நீண்ட நாள் நின்று பிடிக்க முடியாது என்பதை வரலாறு பலமுறை மெய்ப்பித்துள்ளது.

இன்றைய இ.தொ.காவின் பலம். அச்சுறுத்தல், மிரட்டல், காடைத்தனம், காவல் துறையுடனான உறவு என்பன மட்டும் தான். இ.தொ.காவுக்கும் மக்களுக்குமான மானசீக உறவு எப்போதோ முடிவடைந்த கதையாகி விட்டது.



இ.தொ.காவின் மொத்த உறுப்பினர்கள் தோட்டத் தொழிலாளர்களில் 29 சதவீதமானோர் மட்டுமே. 80,576 பேர் மட்டுமே இ.தொ.காவில் அங்கம் வகிக்கின்றனர். லங்கா, தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் 15 சதவீதமான 41,326 உறுப்பினர்களையும், கூட்டுத் தொழிற்சங்கம் 20 சதவீதமான 54,230, உறுப்பினர்களையும் கொண்டுள்ளது. கூட்டுகுழுவில் 10 தொழிற்சங்கங்கள் அங்கம் வகிக்கின்றன.

அதேவேளை 21சதவீதமான 59,096 தொழிலாளர்கள் எந்தவொரு தொழிற்சங்கத்திலும் அங்கம் வகிப்பதில்லை. ஆக 23 தனியார் பெருந்தோட்ட முகாமைக் கம்பனிகளினதும் மொத்த தொழிலாளர்களின் எண்ணிக்கை 76,917 பேர் மட்டுமேயாவர். ஒரு மில்லியனுக்கும் மேலான ஜனத்தொகைக் கொண்ட மலையகத் தமிழரில் கிட்டதட்ட 7 1/2 இலட்சம் பேர் எந்த தொழிற்சங்கத்திலோ, அரசியல் கட்சியிலோ தம்மை நேரடியாக சேர்த்துக் கொள்ளவில்லை.

இந்நிலையில் இ.தொ.காவின் ஏகபோக தலைமைத்துவத்திற்கான கோசம் வெற்றுப்பிதற்றலன்றி வேறென்னவாக இருக்க முடியும். மேலும் 1992ம் ஆண்டு தோட்டத்துறையை தனியாரிடம் கையளிக்க இ.தொ.கா உடன்பட்ட துரோகத்தனமான நடவடிக்கைக்குப் பின்னர் கிட்டத்தட்ட 80,000 தொழிலாளர்கள் இ.தொ.காவை விட்டு வெளியேறி விட்டனர்.

குறுகிய காலத்தில் தமது வாக்குறிமையை வெற்றிகரமாகப் பயன்படுத்தி அரசியல் முதிர்ச்சி மிக்கவர்களாக மலையகத் தமிழர் தம்மை இனம் காட்டியுள்ளனர். அவர்கள் இனிமேல் ஏமாற்றப்பட முடியாதவர்களாக மாறி வருவதை கடந்த பல தேர்தல் முடிவுகள் எமக்குக் காட்டுகின்றன.

உள்ளூராட்சித் தேர்தல்களில் அம்பகமுவ, நுவரெலியா பிரதேச சபைகள் இ.தொ.காவினால் இழக்கப்பட்டன. ஜனாதிபதித் தேர்தலில் அரசுக்கு எதிராக மக்களின் குரல் வெளிப்பட்டுள்ளது. இந்நிலையில் மலையகத் தமிழரின் 5 சதவீதத்தினரை உறுப்பினராக்கிக் கொண்டு 95 சதவீதமான மக்களின் நலன்களுக்கு எதிராக தொடர்ந்து இயங்கும் இவ்வியக்கத்தால்,

- ✖ 600,000 மலையகத் தமிழரின் பிரஜாவுரிமைப் பிரச்சினையை இன்னும் தீர்க்க முடியவில்லை.
- ✖ தோட்டத் தொழிலாளரின் சம்பளத்தை நிர்ணயிக்க முடியவில்லை.
- ✖ மலையகத் தமிழருக்கு எதிரான பேரினவாதிகளின் தாக்குதல்களை தடுத்து நிறுத்த முடியவில்லை.
- ✖ மலையக இளைஞர்களின் விடுதலையை வேண்ட முடியவில்லை.
- ✖ மலையகத்தில் திட்டமிட்ட பேரினவாத மயப்படுத்தலையும், குடியேற்ற திட்டங்களையும் தடுக்க முடியவில்லை.
- ✖ ஒரு இலட்சத்திற்கும் மேலான வீட்டு வேலையாட்களுக்கு வாழ்வளிக்க முடியவில்லை.
- ✖ மலையகத் தமிழரின் அரசியல் நலனை முன்னிறுத்த முடியவில்லை.
- ✖ கட்டமைப்பு அமைச்சை மக்கள் நலனுக்காகப் பயன்படுத்த முடியவில்லை.

இவ்வாறான முடக்குவாதம் கொண்ட இயக்கம் ஒன்றினால் மலையக மக்களுக்கு எவ்வித பயனும் ஏற்படப் போவதில்லை.

மேலும் இந்திய ஆளும் வர்க்கத்தின் நலன் சார்ந்து கிட்டத்தட்ட இந்திய ஏஜென்ட் ஆகவே செயற்படும் இவ் இயக்கம் மலையக தமிழரின் வாழ்வுக்கும் இருத்தலுக்கும் பெரும் அச்சுறுத்தலாகி வருகிறது.

மலையக மக்களின் வாழ்நிலை தொடர்பான புனைவுகள் கட்டுடைக்கப்பட்டு மக்கள் அரசியல் மயப்பட வேண்டுமானால் இ.தொ.காவின் புனைவுகள் வெறும் பொய் பிதற்றல்களே என்பது அம்பலமாக்கப்பட்டு மக்கள் சரியான அரசியல் தலைமையின் கீழ் அணி திரட்டப்பட வேண்டும்.

- கௌசீகன்

# பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டும் இந்தியா!

தொட்டிலையும் ஆட்டிவிட்டு பிள்ளையையும் கிள்ளி விடுகிற மாதிரி என்கிற முதுமொழி ஒன்று வழக்கில் இருப்பதை வாசகர்கள் அறிவார்கள்.

பிள்ளையை தூங்கவிடாமல் அதை துன்புறுத்திக் கொண்டிருக்கிற அதேவேளை, அதை தூங்கவைக்க மிகவும் அக்கறையுடன் முயற்சிப்பதாக வெளியிலே காட்டிக் கொள்வதற்காக தொட்டிலை ஆட்டிக் கொண்டிருக்கிற ஒரு செயலை விபரிக்கிற இந்தப் பழமொழி வெளிப்படுத்துகிற உண்மை இன்று பிரத்தியட்சமாக நம்முன் நடந்து கொண்டிருக்கிறது.

இந்தப் பீடிகையை நான் ஆரம்பிக்கும் போதே யாரைப்பற்றி நான் சொல்லப் போகிறேன் என்பதை நீங்கள் நிச்சயமாக ஊகித்திருப்பீர்கள். ஆம். உங்கள் ஊகம் சரிதான்! நான் இந்தியா பற்றித்தான் கூறிக்கொண்டிருக்கிறேன்.

இலங்கையின் இனப்பிரச்சினை பூதாகரமான வடிவம் எடுக்கத் தொடங்கிய காலம் தொட்டே இந்தியாவிடம் இந்த நிலைப்பாடு தான் இருந்து வந்திருக்கிறது.

முதலில் அது தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கு ஆதரவான ஒரு நிலைப்பாட்டை கொண்டிருப்பதாக தன்னை வெளிக்காட்டி வந்தது. ஜே.ஆர்.ஜெயவர்தன அரசாங்கத்துடன் இருந்த கசப்புணர்வு காரணமாக அது தமிழ் மக்களின் போராட்டத்திற்கு தீவிர ஆதரவை வழங்கி வந்தது. 1983 இனக்கலவரம் வெடித்த போது எழுந்த தமிழ் நாட்டு உணர்வலைகள் இந்திய அரசுக்கு இந்த விடயத்தில் அதிகம் அக்கறை காட்டுவதற்குரிய முக்கிய விடயம் என்ற எண்ணத்தை வலுப்படுத்தியது எனலாம். கலவரம் முடிந்த ஒரு சில நாட்களுக்குள்ளேயே இலங்கையில் உள்ள தமிழ் இளைஞர்களுக்கு ஆயுதப் பயிற்சி வழங்குவது என்ற தீர்மானத்தை அது எடுத்தது. உடனடியாக இராணுவ பயிற்சி முகாம்கள் அமைக்கப்பட்டதும், முடிந்தளவு அதிகப்படியான தமிழ் இளைஞர்களை பயிற்சிக்காக அழைத்து வருமாறு அப்போது அங்கு மறைந்து வாழ்ந்த தமிழ் இயக்கத் தலைவர்களிடம் அது கேட்டுக் கொண்டது.

அதுவரை காலமும் மிகவும் நிதானமாக, ஆனால், உறுதியாக வளர்ந்து வந்த தமிழர் விடுதலைக்கான இளைஞர்களது போராட்டம் இந்தப் பயிற்சி மற்றும் ஆயுத வழங்கல்கள் காரணமாக திடீரென ஊதிப் பருக்கத் தொடங்கியது. தமிழ் இளைஞர்களுக்கு பேருதவி செய்வதாக வெளிக்காட்டப்பட்ட இந்த நடவடிக்கை உண்மையில் தமிழ் விடுதலை ஸ்தாபனங்களை உள்ளூர அரசியல் ரீதியில் பலவீனப்படுத்துவதாகவே அமைந்திருந்தது.

உண்மையில் இந்தியாவுக்கு தேவைப்பட்டது, ஆயுதமேந்திய ஒரு தமிழ் இளைஞர் கூட்டம்: இந்தியா சொல்கிறபடி ஆடத் தயாரான ஒரு கூட்டம். அந்த இளைஞர்கள் இந்தியாவின் ஒரு மேலதிக படைப்பிரிவு போல உருவாக்கப்பட்டார்கள். இவர்களை வைத்துக் கொண்டு இலங்கையைத் தனது பிடிக்குள் சிக்க வைக்கும் தனது நீண்டகால இலக்கை வேகமாக நடைமுறைப்படுத்த முடியும் என்று இந்தியா கருதியது. இந்தியாவின் இந்த எதிர்பார்ப்பு விரைவிலேயே காரிய சாத்தியமாயிற்று. இந்தியாவைத் தொடர்ந்து விமர்சித்துக் கொண்டும், இந்தியாவுக்குப் பிராந்திய அளவில் அச்சுறுத்தலைத் தரக்கூடிய நாடுகளுடன் நல்லுறவை ஏற்படுத்திக் கொண்டும் செயற்பட்ட அன்றைய இலங்கையை இந்தியா தனது கைகளுக்குள் கொண்டுவந்து சேர்த்தது. இதன் காரணமாகவே ஜே.ஆர். ஜெயவர்தன இந்தியா விடயத்தில் தான் விட்டது 'ஹிமாலயத் தவறு' என்று குறிப்பிட்டிருந்தார். இந்தியாவின் புதிய பிரதமர் ராஜீவ் பதவிக்கு வந்த பின் இந்த நடைமுறை மேலும் தீவிரமடையத் தொடங்கியது. ஜே.ஆர்.இந்தியாவுடனான ஒரு ஒப்பந்தத்திற்கும் தயாரானார். உண்மையில் இந்தியா இலங்கை அரசிடம் எதிர்பார்த்தது இதைத்தான்.

எப்போது இந்தியா இலங்கை அரசுடன் சிநேக பூர்வ உறவை மேற்கொள்வதில் வெற்றி பெற்றதோ, அன்றையில் இருந்து அதற்கு தமிழ் இயக்கங்கள் வேண்டாத அமைப்புகளாக மாறிவிட்டன.

இலங்கையில் போராளிகளிடமிருந்து ஆயுதக் களைவு மற்றும் தமிழ் விடுதலை அமைப்புகளை ஒன்றாக அந்த ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ள வைத்தல் போன்ற நோக்கங்களை நிறைவேற்றும் பணியில் அது இறங்கியது. 'சமாதானப் படை' என்ற பெயருடன் இலங்கையின் அழைப்பின் பேரில் வந்ததாக கூறிக் கொண்ட இந்தியப் படை புலிகளை முற்றாக முடக்குதல், தனக்குப் பிடித்த தான் போடும் தாளத்திற்கு ஆடத் தயாரான அமைப்புகளை ஒன்று சேர்த்துக் கொண்டு மாகாண சபைத் தேர்தலை நடாத்தத் தயாரானது. உண்மையில் ஒப்பந்தத்திற்குப் பிந்திய இந்தியாவின் நடவடிக்கைகள், தமிழ் மக்களது அரசியல் அபிலாசைகள் சம்பந்தமாக அதன் அக்கறை குறைந்திருப்பதையே காட்டின. தான் கொண்டு வந்த ஒப்பந்த மூலமான தீர்வை எப்பாடுபட்டாவது நடைமுறைப்படுத்தும்



முயற்சியில் அது ஈடுபடத் தொடங்கியது. புலிகளுடன் பெரும் யுத்தமொன்றை நடாத்துவதில் அது இறங்கியது.

அதாவது, அதன் சொந்த நலன்கள் பாதுகாக்கப்படுவதை உறுதிசெய்தபின், அதை உறுதி செய்யக் காரணமாக - ஏணியாக - இருந்த தமிழ் இயக்கங்களை அது தன் மனம் போனபடி கையாளத் தொடங்கியது. இனப்பிரச்சினையைத் தீர்ப்பது என்பது தமிழ் மக்களின் அபிலாசைகட்கேற்ற விதத்தில் அதனைத் தீர்ப்பதற்காக முயல்வது என்பது இந்தியாவுக்கு இப்போது ஒரு வேண்டாத தலையிடியாக மாறி விட்டது.

இயக்கங்களை ஆயுதபாணியாக்கி தனது விசேட படைப்பிரிவு ஒன்று போல செயற்படுத்த முனைந்து அவர்களுக்கு தனிநாட்டு மோகத்தையும், அதை அடைவோம் என்ற நம்பிக்கையையும் ஏற்படுத்திய அதேவேளை, இலங்கை அரசாங்கத்துடன் அது நல்லுறவை மேற்கொள்ளவும் தொடங்கியது. பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன் என்ற மனோநிலையுடன் அது செயற்பட்டது.

இந்திய றோவின் தூண்டுதலின் காரணமாக இனப்படுகொலைகளை இவ்வியக்கங்களால் நடாத்தப்பட அங்கீகரித்த அதேவேளை அத்தகைய செயல்களில் ஈடுபட்டவர்களை இலங்கை அரசாங்கத்திடம் கையளிக்கவும் அது தயாரானது.

அதன் பிறகு, இந்தியப்படை இலங்கையில் இருந்து வெளியேறும் வரை அதன் செயற்பாடுகள் தமிழ் மக்களுக்கு அவர்களது அபிலாசைகளை வென்று தர வந்த ஒரு படையாக தமது படையை வெளியே காட்டிக்கொண்ட அதேவேளை, அரைகுறைத் தீர்வான 13வது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் முயற்சியில் தீவிரமாக இயங்கியது. தமிழ் மக்களுக்கு உதவுவது போல பாசாங்கு செய்தபடி அவர்களை தொடர்ந்து நசுக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டும் வந்தது.

இங்கிருந்து இந்தியப்படை வெளியேறிய 10 ஆண்டு காலத்திற்குப் பிறகு இப்போது திரும்பவும் அதே தமிழ் மக்களது பிரச்சினையில் ஈடுபட வேண்டிய வாய்ப்பு அதற்கு ஏற்பட்டது. இம்முறை இவ்விடயத்தில் நேரடியாக தலையிடுமாறான கோரிக்கை இலங்கை அரசாங்கத்திடம் இருந்தே வந்தது. ஆனால், அது தமிழ் நாட்டு மக்களது மனோநிலை காரணமாக தான் அத்தகைய ஒரு இராணுவ செயற்பாட்டிற்கு உதவ முடியாது என்று வெளிப்படையாக அறிவித்துவிட்டு மறைமுகமாக வேறுவித ஆதரவுகளை இலங்கை அரசுக்கு வழங்கத் தொடங்கியது.

அவற்றில் ஒன்றுதான் 10 கோடி அமெரிக்க டொலர்களை கடனுதவியாக இலங்கைக்கு வழங்குவதாக அறிவித்தது.

மனிதாபிமான அடிப்படையில் மட்டுமே இந்தியா உதவி செய்யும் என்று அறிவித்துக் கொண்டே இலங்கை அரசுக்கு அந்த உதவியை அது செய்தது.

இந்தியா வழங்கிய இந்தப் பணம் இராணுவ நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படக் கூடாது என்று இந்தியப் பிரதமர் அறிவித்த அதே வேளை இந்தியாவின் அனுசரணையுடன் பாகிஸ்தானிலிருந்து பெரும் தொகையான ஆயுதங்களை - ஆட்டிலறி ஷெல்கள், பல குழாய்களைக் கொண்ட றொக்கற் லோஞ்சர்கள் உட்படப் பல விமானமூலம் (பொயிஸ் 707 விமானமூலம்) இலங்கைக்கு வந்து சேர்ந்தன. அவசர அவசரமாக மூன்று விமானப் பறப்புகள் மூலமாக ஆயுதங்கள் ஆனையிறவு வீழ்ச்சியையடுத்து வந்து இறங்கிய பின்னர் ஆயுதங்கள் கப்பல்கள் மூலமாக இலங்கைக்கு பாகிஸ்தானிலிருந்து வந்து இறங்கிக் கொண்டிருக்கின்றன. இந்தியா இலங்கைக்கு ஆயுதங்களை அனுப்பும் பாகிஸ்தானின் நடவடிக்கைக்கு கூட்டாக சேர்ந்து உதவி வழங்கியிருப்பது வியப்பூட்டுகிற நம்பமுடியாத ஒரு விடயமாக இருந்தாலும் கூட, அது உண்மையாக நடந்திருக்கிறது.

மனிதாபிமான உதவி மட்டும் செய்வதாக கூறிய இந்தியா தனது தீவிர பகையாளியான பாகிஸ்தானுடன் கூட்டாக ஆயுதங்களை அனுப்பி வைப்பதில் சேர்ந்து செயற்பட்டது. இந்தியா எவ்வளவுக்கு 'மனிதாபிமானத்தைக்' கொண்டிருக்கிறது என்ற உண்மையையும் அதேவேளை அது தமிழ் மக்கள் மீது கொண்டுள்ள 'அக்கறை'களையும் விளக்கப் போதுமானதாகும்.

இந்தியாவின் இந்த பிள்ளையையும் கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஆட்டுகிற செயல், பிராந்தியத்தில் தனக்குள்ள நலன்களை அடிப்படையாகக் கொண்டு செய்யப்பட்டவை என்பதை வெளிப்படையாக உணர்த்துகின்றன.

இலங்கை ஆபத்தான சூழலில் இருக்கின்றது என்ற வாய்ப்பைப் பயன்படுத்தி அளவுக்கு மீறிய சக்தி வாய்ந்த ஆயுதங்களைக் கொண்டு வருவதை தனது தனிப்பட்ட நலன் அடிப்படையில் கண்காணிப்பதுவே இந்த கூட்டு நடவடிக்கையின் முக்கிய நோக்கமாகும்.

ஆக, இந்தியாவின் 'மனிதாபிமானம்' நிச்சயமாக அதன் தனிப்பட்ட நலன்களால் கட்டியெழுப்பப்பட்ட மனிதாபிமானம் என்பதே உண்மை. அண்மையில் இந்திய வெளிநாட்டமைச்சர் ஜஸ்வந்சிங் இலங்கைக்கு வந்து பேசிச் சென்றதும் அவரது புகழ் பெற்ற 'மூன்று நோக்கங்களும்' மிகவும் ஆரவாரமாக பேசப்பட்ட போதும் இரகசியமாக நடந்த பேச்சுக்களின் பின் நடக்கும் சம்பவங்கள் உண்மையில் இந்த மூன்று விடயங்கள் பற்றித்தான் நடந்தனவா என்ற சந்தேகத்தைக் கிளப்புபவையாக உள்ளன.

இந்தா பலாலி விழுந்துவிடும் என்ற நிலையும், இந்தியப் படைகள் இலங்கையில் இறங்கி இராணுவத்தை வெளியேற்றுவதற்காக தயாராக தென்கரையோரப் பகுதியில் நிறுத்தப்பட்டிருந்தமையும் நிலவிய ஒரு சூழலில் புலிகளுடன் பேசுவதை வலியுறுத்திய இந்தியாவின் வெளிநாட்டமைச்சர் வந்து போன பின் இலங்கை அரசாங்கம் இரண்டு விடயங்களை வெளியிட்டுள்ளது.

ஒன்று தீர்வுத் திட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க தயாராகுவதாக அறிவித்த அரசாங்கம், அதை புலிகளுக்கு அனுப்பிவைக்க முடியாது என்று குறிப்பிட்டிருக்கிறது.

இரண்டு, உத்தேச இடைக்கால நிர்வாக சபை ஒன்றை உருவாக்க திட்டமிடுகிற அதே வேளை அதிலும் புலிகளுக்கு இடமில்லை என்று அறிவித்திருக்கிறது.

ஆக, புலிகளை முழுக்க முழுக்க இன்றைய அரசியல் முயற்சிகளில் இருந்து விலக்கி வைப்பதே அரசாங்கத்தின் நோக்கம் என்று தெளிவாகத் தெரிகிறது.

உண்மையில், இந்த இரண்டு விடயங்களும் இங்குள்ள ஒன்றிரண்டு தமிழ்க் கட்சிகளுக்கு வாயைப் பிளக்க வைத்துள்ள போதும், தமிழ், முஸ்லிம் மக்கள் அக்கறைப்பட வேண்டிய அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்தவையாக இருப்பதாகத் தோன்றவில்லை. இடைக்கால நிர்வாகமும் பாராளுமன்றத்தில் தீர்வு ஆலோசனைகளை முன்வைப்பதும் தேர்தலை எதிர்நோக்கிய கப்சாக்கள் என்பதற்கு மேல் அவற்றால் தமிழ் முஸ்லிம் மக்கள் எதையும் பெறப் போவதில்லை என்பதைத் துணிந்து கூற எந்த அரசியல் ஞானமும் தேவையில்லை. இலங்கை அரசியலின் வரலாறு மட்டும் தெரிந்தாலே போதுமானதாகும்.

இடைக்கால நிர்வாகக் கோரிக்கை ஈ.பி.டி.பி.யினாலும் பின்னர் வரதராலும் முன்பு முன்வைக்கப்பட்டது. வடக்கு கிழக்கு மாகாண நிர்வாகத்திற்கு ஒதுக்கப்படும் நிதியை தம்முடைய தனிப்பட்ட / கட்சி நலன்களுக்கு வசதியாக பங்குபோட்டுக் கொள்ள ஒரு அங்கீகரிக்கப்பட்ட சட்ட வழிமுறை அவசியம் என்பதற்காக இவர்களால் முன்வைக்கப்பட்டது

⊃19

நாசமறுப்பான்

# முஸ்லிம் மக்களின் மிக இக்கட்டான அரசியற் சூழல் எதை நோக்கிப் போகிறது?

இலங்கையின் இனவியல் வரலாற்றில் மிகப் பெரும் அதலபாதாளத்தில் வீழ்த்தப்பட்டு வீழ்ந்து கொண்டிருக்கும் ஒரு இனத் தொகுதியாக முஸ்லிம்கள் நிற்கின்றர். கடந்த கால வரலாற்றுப் புனைவுகளின்படி சிங்கள இனவாதிகளால் வியாபாரிகள் என்றும் தமிழ் இனவாதிகளால் தொப்பி புரட்டிகள் என்றும் அடையாளம் காட்டப்பட்டு வந்த முஸ்லிம்கள் இன்றும் அதே நாமங்களுக்குரிய பார்வையில் அந்த அணுகுமுறைகளுக்கு ஏற்பவே இனவாதிகளால் மட்டுமன்று, ஜனநாயக அரசியல் தலைமைகளாலும் ஆயுதப் போராட்ட தமிழ்த் தலைமைகளாலும் நோக்கப்டுகின்றனர், அணுகப்படுகின்றனர்.

இந்தப் புனைவுகளின் மீது கட்டப்பட்டிருக்கும் அரசியல், இராணுவ வாதப் பார்வைகள் கடந்தகால இலங்கையின் வரலாற்றில் முஸ்லிம்களின் தனித்துவத்தின் மீதும் அவர்களின் இருப்பின் மீதும் மிகப் பெரும் பேராபத்தை ஏற்படுத்தி இருக்கிறது. இதனை மெய்ப்பிக்கும் சுவடுகளையும் தழும்புகளையும் இலங்கை வாழ் முஸ்லிம்கள் தங்கள் நெஞ்சங்களிலும் முதுகுகளிலும் சுமந்து கொண்டிருக்கின்றனர். இந்தப் பயணத்தின் முடிவு இதுதானா? முஸ்லிம்கள் எதை நோக்கிப் போவது? என்கின்ற வினாக்கள் இலங்கையின் இன்றைய அதிகாரப் பகிர்வு, தேசியவாத சிந்தனைகளுக்கு மத்தியில் மிக முக்கியமாகின்றது.

அரசியல் மேலாதிக்க நலன்களுக்காக வேண்டி, அதிகார மையத்தை தக்க வைத்துக் கொள்வதற்காக வெறும் புனைவுகளை, கற்பிதங்களை வெகுஜன அபிப்பிராயமாகக் காட்டுவதில் உலக வரலாற்றில் அதிகார ஆதிக்க சக்திகள் தீவிரமாக உழைத்து வந்திருக்கின்றன. தமிழ் மக்களைப் பற்றிய சிங்கள தேச நலன் சார்ந்த புனைவுகளும் சிங்களவர்களைப் பற்றிய தமிழர்களின் தமிழ்த்தேச நலன் சார்ந்த புனைவுகளும் இலங்கையின் இனத்துவ அரசியலில் மிகப்பெரும் விளம்பரப் பலகைகளாகவும் கோஷங்களாகவும் முன்னெடுக்கப்பட்டு அரசியலாக்கப்பட்டதன் விளைவுகளை இலங்கை வாழ் மக்கள் அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர்.



அந்த வகையில், அதன் வழியில் இலங்கை வாழ் முஸ்லிம்கள் தொடர்பாக வைக்கப்பட்டிருக்கும் புனைவுகளின் அடிப்படையில் இலங்கையில் வாழும் முஸ்லிம்களை சிங்களத் தலைமைகளும் தமிழ்த் தலைமைகளும் அணுகப் பார்க்கின்றன. இந்த அணுகுமுறையின் விளைவுகள் கடந்த காலத்தில் என்னவாக இருந்தது, எதிர்காலத்தில் எப்படி இருக்கும் என்பதே இக்கட்டுரையின் பிரதான தளமாகும்.

இலங்கையில் வாழும் முஸ்லிம்கள் இரண்டாவது சிறுபான்மையினராய் இருப்பதையும், இலங்கை முழுவதும் சிதறி வாழ்வதையும் பலவீனமாகக் கருதி இலங்கைவாழ் முஸ்லிம்கள் வாழும் அவ்வப்பிரதேச புவியியல் சார்பு அரசியல் ஆதிக்க நிலைமைகளுக்கேற்ப அடக்கியும் ஒடுக்கியும் வாழ வைத்து விடலாம் என்பது ஆதிக்க சக்திகளின் மனோநிலையாக இருந்து வருகின்றது. இந்த மனோநிலையின் வழித் தடத்தில் தான் கடந்த காலத்திலும் நிகழ்காலத்திலும் முஸ்லிம்கள் வாழ நிர்ப்பந்திக்கப்படுகின்றனர்.

தமிழர்கள் இலங்கையில் தமிழ் தேசக் கோட்பாட்டை முன்வைக்காத கால வரையறையினுள் ஒட்டுமொத்த இலங்கைத் தேசத்தினுள் தமிழ் மக்கள் எதிர்கொண்ட சிங்களத் தேசிய அடக்கு முறையின் வடிவங்களை இலங்கை வாழ் முஸ்லிம்களும் எதிர் கொண்டனர். தமிழர்களுக்குரிய அனைத்து போராட்ட நியாயங்களும் முஸ்லிம்களுக்கும் உரியதாகவும் இருந்தது.

தமிழர்களின் தேசியவாத ஆயுதப் போராட்டத்தின் பக்கவிளைவாக முஸ்லிம்களை அடக்கும் ஆதிக்க கரம் உருவானது. இந்த அடக்குமுறை வடிவங்கள் கடந்த காலத்தில் சிங்களவர்கள் தமிழர்களை அடக்கிய வடிவத்திற்கும் சுமைக்கும் எந்த விதத்திலும் குறைவானதாக இருக்கவில்லை. இந்த உண்மையின் அடிப்படையில் இலங்கையில் வாழும் இனங்களின் இருவேறுபட்ட தேசியவாத சக்திகளால் அடக்கப்பட்டு, ஆட்டிப்படைக்கப்பட்டும் மிகவும் சோகமிக்க அரசியல் வரலாறு கொண்ட இனமாக முஸ்லிம்கள் இன்று உள்ளனர். முஸ்லிம்களை அடக்கும் இவ் ஆதிக்க மனோநிலையின் அடிப்படைத் தன்மை ஒரே விதமாக இருந்தாலும் இரு தேச சக்திகளின் போக்கு இதுவாக இருப்பதனால், வடக்கு கிழக்கில் தமிழ்த்தேச சக்திகளாலும் தென்னிலங்கையில் சிங்களத் தேசிய சக்திகளாலும் விரிக்கப்படும் வலையை எதிர்கொள்ள வேண்டிய அரசியல் நிலைமை இலங்கை வாழ் முஸ்லிம்களுக்கு முன் இன்று உள்ளது.

### வடக்கு கிழக்கு முஸ்லிம்கள்:

இலங்கையில் வாழும் முஸ்லிம்களுள் தனித்த அரசியல் பிரதிநிதித்துவப் பலத்தை வடக்கு கிழக்கு முஸ்லிம்களே கொண்டிருக்கின்றனர். அத்துடன் வடக்கு கிழக்கில் வாழும் முஸ்லிம்களின் கணிசமான சனத்திரட்சியும் மண்ணுடன் தொடர்புற்ற தொழில் முயற்சிகளும் இம்மக்களை வடக்கு கிழக்கில் புறக்கணிக்க முடியாத இனச் சக்தியாக நிலைநிறுத்தி உள்ளது. கிழக்கு மாகாணத்தில் 1981ம் ஆண்டைய குடிசன மதிப்பீட்டின்படி மொத்த சனத்தொகையில் 33 சதவிகிதமாகவும் வடக்கு கிழக்கு மாகாணத்தில் ஐந்து இலட்சம் முஸ்லிம்களையும் கொண்டுள்ளது. இந்த முஸ்லிம்கள் நேற்று இன்று இப்பிரதேசங்களில் குடியேறி வாழ்ந்ததற்கான வரலாற்றுச் சான்றுகள் இதுவரை இவர்களின் அரசியல் கோரிக்கையை மறுப்பவர்களால் கண்டுபிடிக்கப்படவில்லை.

வடக்கு கிழக்கு முஸ்லிம்களின் அரசியல் என்பது இலங்கையின் பாராளுமன்ற அரசியல் வரலாற்றுடன் 1947 சோல்பரிக்குப் பின் உற்று நோக்கும் போது தனித்தன்மை வாய்ந்ததாகவும் முஸ்லிம் பாராளுமன்றப் பிரதிநிதிகளையே அவர்கள் தங்கள் பாராளுமன்ற பிரதிநிதிகளாக தேர்ந்தெடுத்துள்ளதையும் காணக் கூடியதாக இருக்கின்றது. இதிலிருந்து அவர்கள் தமிழ் மக்களுடன் வாழ்ந்தாலும் தங்களுக்கென்ற அரசியல் பிரதிநிதித்துவத்தை தனித்தே, தனித்துவமாக அடையாளம் கண்டு செயற்பட்டு வந்திருப்பது முக்கிய அம்சமாகின்றது.

அரசியல் அரங்கில் முஸ்லிம்களின் வளர்ச்சி என்பது இனத்துவ சார்புடைய தற்காப்பு நிலையை எடுத்து வளர்ந்து வந்திருப்பதை யாவரும் ஏற்றுக் கொள்வர். பொன்னம்பலம் இராமநாதன் முஸ்லிம்களும் தமிழ் பேசுவதனால் அவர்களும் தமிழர்கள் தான் என வாதித்து முஸ்லிம்களுக்கு தனித்த பாராளுமன்ற அரசியல் பிரதிநிதித்துவம் தேவையில்லை என்று எதிர்நிலை எடுத்த போது முஸ்லிம்கள் தங்களுக்கான தனித்த அரசியல் பிரதிநிதித்துவத்தை பெறுவதில் தீவிரமாக நின்று அன்று பெற்றார்கள் என்பது வரலாற்றின் முக்கிய நிரூபணம் தான்.

1947 தொடக்கம் வடக்கு கிழக்கில் தமிழர்களுடைய ஆயுதப் போராட்ட எழுச்சியின் நடுப்பகுதிக் காலம்வரை முஸ்லிம்கள் தங்களுக்கான ஒரு அரசியல் ஸ்தாபனத்தின் தேவையையோ அல்லது தங்களுக்கான ஆட்சி அதிகாரத்திற்கான அரசியல் அலகையோ உணர்ந்திருக்க வில்லை. அவர்கள் தங்களின் அரசியல் அடையாளமாக முஸ்லிம் பாராளுமன்றப் பிரதிநிதிகளையே காட்டிக் கொண்டிருந்தனர். இந்த அரசியல் பிரதிநிதித்துவத்திற்கான அரசியல் ஸ்தாபனங்கள் எதுவாக இருப்பினும் அதுபற்றிய அரசியல் நுண்மைகள் வடக்கு கிழக்கில் வாழும் முஸ்லிம்களுக்கு அன்று அவசியமாக இருக்கவில்லை. அது ஐ.தே.கவாகவும் ஸ்ரீ.ல.சு.கவாகவும் தமிழரசுக் கட்சியாகவும் இருக்கலாம். சுயேட்சை அணியாகவும் இருக்கலாம் என்ற மனோநிலை தான் அக்காலத்தின் அரசியல் தேவைப்பாடாக இருந்திருக்கிறது. தமிழரசுக்கட்சியும் கூட தங்களுடைய அரசியல் தேவைப்பாட்டின் காரணமாக குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் தங்கள் கட்சியின் பிரதான வேட்பாளர்களாக முஸ்லிம்களை நிறுத்தியது இந்த மனோ நிலையின் பிரதிபலிப்பும் விளைவும் தான்.



வடக்கு கிழக்கில் வாழும் முஸ்லிம்களில் கணிசமான பெரும்பகுதியினர் தமிழ் மொழி உணர்வு சார்ந்தும் பொதுவான தன்மையில் சிங்கள மேலாதிக்க அரசின் அடக்கப்படும் தன்மை காரணமாயும் பாதிக்கப்பட்டதன் விளைவுமாய் தமிழ் மக்களுடன் இணைந்த தங்களுடைய அரசியல் அபிலாசைகளை கொண்டிருந்தனர். இந்த வெளிப்பாடு ஜனநாயக அரசியல் நிறுவனங்கள் சார்ந்தும் 1979க்குப் பின் தமிழ் ஆயுத அமைப்புகள் சார்ந்தும் வெளிப்பட்டு நின்றன.

தமிழ் மக்களின் ஆயுதப் போராட்ட ஆரம்பக் கட்டம் பிரித்தறிய முடியா போராட்டத் தேவையின் நிமித்தம் முஸ்லிம்கள் தமிழ் இளைஞர்களுடன் சேர்ந்து போராடியே தீரவேண்டும் என்ற அவசியத்தை உணர்த்தியது. இதில் கணிசமான ஈடுபாடு முஸ்லிம் இளைஞர்களுக்கு ஏற்பட்டது. தமிழீழ விடுதலைப் புலிகள் தொடக்கம் ஈ.பி.ஆர்.எல்.எப் வரை முஸ்லிம் இளைஞர்கள் இவ்வாயுத அமைப்புகளின் வெற்றிக்காகவும் ஒட்டுமொத்த தமிழ், முஸ்லிம் இனங்களின் சுயநிர்ணய அந்தஸ்துக்காகவும் தங்களை அர்ப்பணித்தனர். முஸ்லிம் பிரதேசங்கள், சாதாரண முஸ்லிம் பொதுமக்கள் வரை இவ்வுணர்வும் ஒத்துழைப்பும் இருந்தது.

1985 சித்திரை மாதம் வடக்கு கிழக்கு வாழ் முஸ்லிம்கள் மீதான தமிழ் ஆயுத அமைப்புகளின் அராஜகத் தன்மைகள் வெளிப்படத் தொடங்கின. இவ்வெளிப்பாடு குறிப்பாக கிழக்கு மாகாணத்தின் அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் மிகவும் உக்கிரமாக இருந்தது. இதற்குப் பல்வேறு காரணிகள் காரணமாக இருப்பினும் மிக முக்கியமாக கிழக்கு முஸ்லிம் மக்களின் வர்க்க, பொருளாதாரத் தன்மை இப்பகுதிவாழ் தமிழ் ஆயுத அமைப்பு இளைஞர்களை முஸ்லிம்களை நோக்கி தங்களுடைய ஆதிக்க கரத்தை விரிப்பதற்கு முக்கிய காரணமாக இருந்திருக்கின்றது என்பதை ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும்.

**பையூஸ் அஹமட்**

இந்த நெருக்கடியின் பின்விளைவாக ஒட்டு மொத்த சிங்கள பேரினவாதத்திற்கு எதிரான அரசியல் உணர்வுகள் முஸ்லிம்களைப் பொறுத்த வரையில் இன்னொருபடி மேலே சென்று தமிழ் பேரினவாதத்திற்கெதிரான உணர்வும் என்ற தன்மைக்கு இட்டுச் சென்றது. தமிழ் ஆயுத அமைப்புகளிடமிருந்து தங்களுடைய பொருளாதாரத்தையும் அரசியல் வாழ்வையும் மண்ணையும் காப்பாற்றியே ஆகவேண்டுமென்ற நிலைக்கு இட்டுச் சென்றது. இதன் விளைவுதான் முஸ்லிம்கள் தங்களுக்கென ஒரு தனித்த அரசியல் இயக்கத்தை உணர்ந்து அதனை அரசியல் பலமுள்ள ஸ்தாபனமாக்க துணை நின்றனர்.

1987ம் ஆண்டைய இலங்கை இந்திய உடன்படிக்கையில் முஸ்லிம்கள் தொடர்பான பாதுகாப்பற்ற அம்சங்களும் ஈ.பி.ஆர்.எல்.எப் மாகாண அரசாங்கத்தின் முஸ்லிம் விரோதப் போக்கும் ஐ.பி.கே.எப்இன் முஸ்லிம் விரோத நடவடிக்கைகளும் முஸ்லிம்களை தனித்த அரசியல் செயற்பாட்டுக்கு இட்டுச் சென்றது. இதன் விளைவாக முஸ்லிம்கள் தங்களுக்கென்ற அரசியல் தேசிய இயக்கமாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை ஏற்றுக் கொண்டு அதனை பலப்படுத்தியேயாக வேண்டுமென்ற தீவிர செயற்பாட்டுத் தளத்தில் உழைக்க வேண்டியவர்களாக இருந்தனர்.

90களில் ஏற்பட்ட விடுதலைப் புலிகளின் மிகப் பெரும் இனச் சுத்திகரிப்பு, இனப்படுகொலைகளின் பின் முஸ்லிம்கள் தாங்கள் ஒரு தனித்த தேசிய இனமாகவும் தங்களுக்கென்ற ஒரு தேசத்தின் ஊடான அதிகார அலகை கோருபவர்களாகவும் மாறவேண்டிய மாற்று வழியில்லாத சூழல் ஏற்பட்டது.

விடுதலைப் புலிகள் உட்பட, ஏனைய தமிழ் அமைப்புகள் முஸ்லிம்கள் தொடர்பாக தாங்கள் வைத்திருப்பதாகக் காட்டிக் கொண்ட வெறும் பம்மாத்து வெளிப்பாடுகளை அறையில் மட்டுமே ஆடிக் கொண்டிருந்தனர். இது முஸ்லிம் இளைஞர்களையும், சாதாரண முஸ்லிம் மக்களை தங்களுடன் சேர்த்து வைத்திருப்பதற்காக அவர்கள் காட்டிக் கொண்ட விடயமாக மட்டுமே இருந்தது. இதனை அம்பலத்தில் ஆடவேண்டிய சூழல் ஏற்பட்ட போது அவர்களின் உண்மைச் சொரூபம் வெளிப்படத் தொடங்கியது. மிகப் பெரும் பாசிசத் தன்மை கொண்ட அடக்குமுறைச் சக்திகள் அவர்கள் என்பதை காரைதீவு பொலிஸ் படுகொலை தொடக்கம் காத்தான்குடி பள்ளிவாசல் படுகொலை, ஏறாவூர் கிராமப் படுகொலை, ஹஜ்ஜாஜிகள் படுகொலை, முஸ்லிம் புத்திஜீவிகளை அழிக்கும் படுகொலைகளான மூதூர் உதவி அரசாங்க அதிபர் ஹபீப் முஹம்மத் தொடக்கம் அலிஉதுமான் வரையான படுகொலைகள், வடக்கிலிருந்து முஸ்லிம்களை வெளியேற்றியது என்பன நிரூபித்தன.

### அழிவுகளில் பங்கெடுங்கள்! அதிகாரம் தரமாட்டோம்!

இரண்டு தேசிய இனங்களுக்கிடையிலான அதிகாரப் போர் நடக்கும் போது இந்த இரண்டு இனங்களுக்கு மத்தியிலும் சிக்குண்டு மிகப் பெரும் அழிவுகளையும் அரசியல் அச்சுறுத்தல்களையும் இருப்பு தொடர்பான வாழ்வின் மிகப்பெரும் கேள்விகளையும் எதிர்கொண்டு நிற்கும் முஸ்லிம்கள் தங்களுக்கான ஒரு அதிகார ஏற்பாட்டைக் கோருவதை தமிழ் அரசியல் இராணுவத் தலைமைகள் மறுத்தே வருகின்றன. இந்த மறுப்பு தமிழ் பாசிச மேலாதிக்க சிந்தனை என்பதை வரலாறு தொடர்ந்தும் நிரூபித்து வருகிறது.

வடக்கு கிழக்கில் இனச்சுத்திகரிப்பு, இன அழிப்பு, இன அச்சுறுத்தல் ஏற்பட்டதன்பின் மீண்டும் தமிழர்களின் கீழ் சமத்துவமாக வாழுங்கள் எனச் சொல்வதை விடுத்து, இராணுவப் பார்வையுடனான நாங்கள் ஆளப்பிறந்தவர்கள் முஸ்லிம்கள் அடிமைகளாக வாழ வேண்டியவர்கள் என்பது எந்த வகையில் நியாயம்?

அதிகாரப் பகிர்விற்கான பேச்சுவார்த்தை சூழல் ஏற்படும் போதெல்லாம் வடக்கு கிழக்கு-

⊃19

# ஈழம் அல்ல பிரச்சினை!

சுனந்த தேசப்ரிய

பிரபாகரன் மற்றும் புலிகள் அமைப்பின் தலைமையின் கீழ் ஈழம் என்ற பெயரில் தனியான அரசு உருவானால் ஏற்படக்கூடிய விளைவுகள் பற்றி கடந்த காலத்தில் பரவலாக கலந்துரையாடப்பட்டது.

ஜனாதிபதி தொடக்கம் யுத்த பிரதானிகள் வரை சிங்களத் தேசியத் தலைவர்கள் தொடக்கம் பௌத்த பிக்குகள் வரை இந்தக் கலந்துரையாடலில் பங்கெடுத்துக் கொண்டனர். ஈழம் உருவானால் இலங்கைக்கு மட்டுமன்றி இந்தியாவுக்கு மட்டுமன்றி அமெரிக்காவுக்கும் ஏற்படும் தீங்குகள் பற்றி இங்கு குறிப்பிடப்பட்டது.

இந்தக் கலந்துரையாடல் இவ்வாறு சிக்கலாகவும், சூடாகவும் இருக்கக் காரணம் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட யுத்த நிலைமை, தமிழ்நாடு முதலமைச்சர் கருணாநிதியின் செக்கோஸ்லோவாக்கியா உதாரணம் மற்றும் தெற்கில் போர்ச் சூழல் ஏற்படுத்திய தாக்கம், அரசாங்கத்தினால் அவசர காலச்சட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்ட யுத்த முன்னெடுப்புக்கான



ஊக்குவிப்பு ஆகிய அடிப்படைகள் ஆகும்.

பிரபாகரன் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றினால் அதன் பின் மலையகத்தையும், அதன்பின் தெற்கையும் ஸ்தீரப்படுத்த நடவடிக்கை எடுத்து சென்னை வரை தனது ஈழவாதத்தை விஸ்தரிப்பார் என ஜனாதிபதி பகிரங்கமாகத் தெரிவித்திருந்தார். ஜனாதிபதியின் இந்த உரையின் நோக்கம், யுத்தத்தில் வெற்றி பெற அவரது அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட சமூக-அரசியல்-பொருளாதார வேலைத்திட்டங்களை நியாயப்படுத்துவதாகும்.

அவரது அரசாங்கத்தினால் போர்ச்சூழல் பிரகடனப்படுத்தப்பட்டு முழு இன மக்களையும் யுத்தத்தில் தொடர்புபடுத்தலை நியாயப்படுத்தக் கூடிய சரியான வழிமுறை ஈழம் எனும் பயங்கர ராட்சதனை சிங்கள மக்களுக்கு சுட்டிக் காட்டுதலாகும்.

பிரபாகரன் அரசியலில் பிரவேசிப்பதற்கு முன் தமிழ் மக்களின் நியாயமான அபிலாசைகளை அடக்குமுறை செய்ய சிங்கள தேசியவாதிகளினால் பயன்படுத்தப்பட்டதும் இந்த இலங்கையைப் பிரிவினை செய்து தனி அரசை ஸ்தாபித்தலின் பயங்கர எதிர்வுகூறல்களே எனலாம். அநகாரிக தர்மபால தொடக்கம் சிறில் மத்தியூ வரையும் இங்கிருந்து தோற்றம் பெற்ற நவீன சிங்கள தேசியவாதிகளும் உலக அழிவுக்கு ஒப்பான பயங்கரமான எதிர்வு கூறலாக தொடர்ச்சியாக இந்த ஈழம் பற்றிய விடயத்தையே எடுத்துக்காட்டியுள்ளனர்.

1981ல் ஜே.ஆர் அரசாங்கம் மாவட்டசபைகள் முறையை அறிமுகப்படுத்தியபோதும் பல பிரதான அரசியல் கட்சிகள் குறிப்பாக, ஸ்ரீ.ல.சு.க அதனை நாட்டைப் பிரிக்கும் நடைமுறையாக விபரித்தது. 1957ல் பண்டாரநாயக்கவுக்கு எதிராக ஐ.தே.கவினாலும் 1966ல் டட்லி சேனநாயக்கவுக்கு எதிராக ஸ்ரீ.ல.சு.கவுடன் இணைந்து கொண்ட சமசமாஜக் கட்சியும் கம்யூனிஸ்ட் கட்சியும் சுமத்திய குற்றச்சாட்டாக நாட்டைப் பிரிக்க உதவுகின்றனர் என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. 1987ல் இந்திய இலங்கை ஒப்பந்தத்தை எதிர்த்த அரசியல் மற்றும் சிவில் சக்திகளினாலும் இவ்வாறான குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. எனினும் இந்தச் சந்தர்ப்பத்தில் முன்வைக்கப்பட்ட அரசியல் சீர்திருத்தம் இந்நாட்டைப் பிரிக்கும் தன்மை கொண்டதல்லவென இன்று பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. இந்த வரலாற்றுச் சந்தர்ப்பங்களை மீட்டுப் பார்த்தால் நாட்டைப் பிரிக்கும் அச்சம் எவ்வளவு தூரம் ஒரு அரசியல் தூண்டலாக மாறியிருந்தது என்பது தெளிவாகும். அவ்வரலாற்றுச் சூழல்களில் உருவான அரசியல் தீர்வுக்கான சந்தர்ப்பங்களை கைப்பற்றிக் கொள்ள எம்மால் இயலாமல் போனதற்கான காரணம் சிங்கள மக்கள் மத்தியில் உள்ள பிரதானமான அச்சமான நாட்டைப் பிரித்தல் என்ற விடயம் அடிப்படைக் காரணியாக தொழிற்பட்டமையாகும்.

இன்று நிலைமை முற்றிலும் மாறுபட்டது என்றும் தனி அரசை ஸ்தாபிக்கும் நோக்குடன் போரில் ஈடுபட்டிருக்கும் புலிகளினால் நாடு பிரிக்கப்படுவது பற்றிய பிரச்சினை யதார்த்தமாக்கப்பட்டுள்ளது என்றும் எவராவது தர்க்கம் செய்யலாம். ஆனால், அது அவ்வாறில்லை. அன்றைய நிலையை விட முற்றிலும் மாறுபட்ட நிலையில் இலங்கைப் பிரச்சினை இன்று சர்வதேசமயப்பட்டுள்ளது. அன்று இலங்கை பிரிவதற்கு எதிராக இருந்த காரணி இந்த சர்வதேச மயமாகும். தெற்காசியாவின் பலம் வாய்ந்த நாடான இந்தியா இலங்கைப் பிரிவதற்கு உடன்பட மாட்டோம் என மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது. உண்மையில் புலிகளுடன் இலங்கை ஈடுபட்டுள்ள யுத்தத்தில் 1987 தொடக்கம் இந்தியா புலிகளுக்கெதிரான நிலைப்பாட்டை எடுத்துள்ளது. இந்திய நீதிமன்றத்தினால் பிரபாகரனுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளமையை பல சந்தர்ப்பங்களில் நாம் மறந்து விடுகின்றோம். மேலும் எதிர்காலத்தில் இந்திய மத்திய அரசாங்கம் இலங்கை பிரிந்து சிங்களம், தமிழ் என்ற வகையில் இரண்டு அரசுகள் உருவாகுவதற்கு ஆதரவு தரும் என எண்ண வாய்ப்பில்லை.

தற்போதைய உலக நிலைமையில் இலங்கை குறித்தான மற்ற சக்தி அமெரிக்க ஐக்கிய நாடாகும். அமெரிக்காவில் புலிகள் தடை செய்யப்பட்ட அமைப்பாகும். வடஅமெரிக்காவின் மற்றைய சக்தியான கனடாவில் புலிகளுக்கு அரச அங்கீகாரம் இல்லை. வட அமெரிக்கா அதிகார சக்திகளைப் போன்று ஐரோப்பிய அதிகார சக்திகளும் புலிகள் குறித்து விருப்பை வெளிக்காட்டவில்லை. அதேபோல் இலங்கையைப் பிரிக்க இந்த அதிகார சக்திகள் ஆதரவளிக்கப் போவதுமில்லை. சுருக்கமாகக் கூறினால் தற்கால சர்வதேச அதிகார சக்திகள் இலங்கை பிரிந்து போக இடமளிக்கப் போவதில்லை. இதற்கு மாற்றாக இலங்கையின் ஒருமைப்பாடு பாதுகாக்கப்பட வேண்டுமென அவ்வனைத்து அதிகார சக்திகளும் ஏற்றுக் கொள்கின்றன.

சர்வதேச காரணிகளைத் தவிர்ந்த, இலங்கையின் தற்கால உள்ளக சமூக அரசியல் நிலைமையும் இலங்கை பிரிவதற்கு சாத்தியமானதாக இல்லை. வடக்குக் கிழக்கிற்கு வெளியே வாழும் லட்சக் கணக்கான தமிழ் மக்களின் எதிர்காலம் பல்லின, பல்கலாசார ஐக்கிய இலங்கைக்கு சார்பாகவே கட்டியெழுப்பப்பட்டுள்ளது. நாடு முழுவதும் பரந்து வாழும் முஸ்லிம் மக்களின் சமூக அரசியல் பொருளாதாரத் தேவைகள் நாட்டைப் பிரிக்க வாய்ப்பளிக்கவில்லை. குறிப்பாக யுத்தத்தினால் இலங்கையைப் பிரித்தலானது பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பதில் புதுப் பிரச்சினைகளை ஏற்படுத்த வழி சமைக்கும். இரண்டு தசாப்த கால யுத்தத்தினால் வளர்த்தெடுக்கப்பட்ட மக்கள் அவநம்பிக்கை, பீதி என்பன அவ்வண்ணம் நிலவும் போது தென்னிலங்கை பிரதான அரசியல் கட்சிகளினால் இலங்கையில் இரு அரசுகள் ஏற்பட ஆதரவளிக்க இயலாமற் போகும்.

மேற்கூறப்பட்ட சமூக அரசியல் விடயங்களை விபரமாக நோக்கும் போது இலங்கை பிரிந்து இரு அரசுகள் உருவாகுவது எதிர்காலத்தில் இடம்பெற வாய்ப்பில்லை என்பது தெளிவாகும். இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதியான அரசியல் தீர்வினைப் பெற்றுக் கொள்ள வேண்டுமாயின் இந்த விளக்கம், புரிந்துணர்வு அவசியம். அதாவது அரசியல் தீர்வொன்றை ஏற்படுத்தும் முகமாக மேற்கொள்ளப்படும் முயற்சிகளை ஈழப் பிசாசைக் காட்டிப் பின்னடையச் செய்ய நாம் வாய்ப்பளிக்கக் கூடாது.

சிங்கள மக்கள் தரப்பில் பார்க்கும் போது நாட்டைப் பிரித்தல் என்பது அவர்கள் முகம் கொடுக்கும் பாரியதொரு விபத்தாகும். உண்மையில் அது விபத்தா இல்லையா என்பது வேறு பிரச்சினை. ஆனால், அது அவ்வாறு தான். எனினும் தமிழ் மக்களின் தரப்பில் பிரச்சினை எப்படி நோக்கப்படுகின்றது? 1990 காலப்பகுதி முழுவதும் யுத்தம் கிரமம் கிரமமாக வளர்ச்சி பெற்றமையைத் தவிர அரசியல் ரீதியில் அவர்களுக்கு என்ன தான் கிடைத்தது. பிரேமதாஸா-புலிகள் பேச்சுவார்த்தை, சந்திரிக்கா-புலிகள் பேச்சுவார்த்தை இருதரப்பினர் மத்தியிலும் மோதலை அதிகரிக்கச் செய்யும் வகையிலேயே பூர்த்தியடைந்தது. பிரபாகரனும் புலிகளும் தமது தீர்வை தமிழ் மக்கள் முன் வைத்துள்ளனர். அவர்களது தீர்வு ஈழம். அதாவது, ஐக்கிய அரசாங்கங்கள் இரண்டு. அதாவது கூட்டரசாங்கம். புலிகளின் இந்த வாக்குறுதியின் அடிப்படையிலேயே தமிழ் மக்கள் யுத்தத்திற்கு அழைக்கப்படுகின்றனர். கடந்த பத்து வருடங்களாக ஈழத்திற்கு எதிராக போரிடுகின்றோம் எனக் கூறப்பட்டதே தவிர இலங்கை அரசாங்கத்தினால் தமிழ் மக்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகள் எதுவுமில்லை. பிரேமதாஸா-புலிகள் பேச்சுவார்த்தை வீழ்ச்சியடைந்ததன் பின்னர் 1994வரை ஐ.தே.க அரசியல் தீர்வு எதனையும் முன்வைக்கவில்லை. அவ்வாறான தீர்வுக்கான சாத்தியக்கூறுகளை முன்வைத்த ஜனாதிபதி வேட்பாளர் காமினி திஸாநாயக்கா புலிகளினால் கொல்லப்பட்ட பின் ஐ.தே.க அத்தீர்வு யோசனையை முழுமையாக கைவிட்டது.



சந்திரிக்கா - புலிகள் பேச்சுவார்த்தை 1995 ஏப்ரலில் முறிந்தது. அன்றிலிருந்து யுத்தம் மட்டுமே மேற்கொள்ளப்பட்டு வரப்படுகின்றது. இன்றும் அரசியல் தீர்வுத் திட்டம் ஏகமனதாக முன்வைக்கப்படவில்லை.

உண்மையில் பிரச்சினை ஈழம் அல்ல. அதற்கு மாற்றான தீர்வு தான் பிரச்சினையாகும். இதுபற்றி இணக்கப்பாடின்றி ஈழப் பிசாசைக் காட்டுவது, பயமுறுத்துவது மட்டும் இந்நாட்டு தமிழ் சமூகத்தில் எந்தவொரு தாக்கத்தையும் ஏற்படுத்தாது. யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட யுத்த நிலைமை குறித்த சர்வதேச சமூகத்தின் அனைத்து வெளிப்பாடுகளிலும் ஈழம் என்ற விடயம் கருத்திலெடுக்கப்படவில்லை. அவ்வாறாயின் வேறு என்னதான் தீர்வு என்ற கேள்விக்கு பதில் தேட நாம் முனைய வேண்டும். உண்மையில் 1987ன் பின் நாம் எந்த முன்னேற்றத்தையும் அடையவில்லை. 1987ல் இலங்கை இந்திய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது, தேசிய சக்திகளின் வளர்ச்சியாக அன்றி சர்வதேச தலையீட்டின் சக்தியினாலேயாகும். கவலைக்குரிய விடயமாக இன்றும் அதேதான் நடைபெறுகின்றது. அரசியல் அதிகாரப் போட்டியினால் தேசிய ரீதியாக இந்நாட்டு அரசியல் மிக மோசமான முறையில் பிரிவினைக்குஉள்ளாகியுள்ளது. அரசியல்வாதிகளின் காலை இழுத்து வீழ்த்தி விடுவது தான் எமது அரசியல் ஒழுக்கத்தின் பிரதான இலட்சணம்.

இலங்கை இனப்பிரச்சினைக்கு யுத்தத் தீர்வு தான் இருசாராரிடமும் உண்டு. ஈழத்தையும், புலிகளையும் முழுமையாகத் தோற்கடிப்பது ஒரு கனவாகும். உண்மைப் பிரச்சினை முற்றிலும் மாறுபட்டது. இதன்படி ஈழம் என்ற உணர்ச்சிபூர்வமான கோஷத்திற்கு பதில் ஈழம் இல்லாவிட்டால் வேறு மாற்று தான் என்ன என்ற கேள்வியை எமது கலந்துரையாடலுக்கு எடுக்க தற்போது காலம் வாய்ப்பாக உள்ளது.

## கடதாசிப் புலிகளும் பிசாசுகளும்

மாவோ புலிகள் என்று பொய் வீரத்தைக் காட்டும் ஆனால் உண்மையில் பலவீனமானவர்களையே குறிப்பிட்டார். ஆனால், இந்தக் கடதாசிப் புலிகள் வித்தியாசமானவர்கள். இவர்கள் பத்திரிகையாளர்கள். இவர்ளைப் புலிப் பத்திரிகையாளர்கள் என்கிறது ரூபவாஹினி. இதனைத் தயாரித்தது அரசாங்கத்தின் தொலைக்காட்சியின் செய்திப் பிரிவு. ஆனால், இவர்கள் உண்மையான புலிகள் அல்லர். பொய்யான புலிகள்.

தொடர்பூடகவியலாளர்களில் சிலர் புலிகள் அமைப்பின் ஆதரவாளர்கள் என புலிகளுடன் உக்கிரமான போரில் ஈடுபட்டுள்ள அரசாங்கத்தின் தொடர்பூடகங்களில் வெளிப்படுத்துவதானது மிகவும் பயங்கரமான குற்றச்சாட்டாகும். சிங்கள தமிழ்த் தொடர்பூடாகவியலாளர்கள் ஒன்றிணைந்து மூன்று மாதங்களுக்கு முன்னர் மட்டக்களப்பில் நடாத்திய கருத்தரங்கொன்று இந்தப் 'புலி'ப்பத்திரிகையாளர்களின் கதைக்கு தொனிப் பொருளாகியது. இந்தக் கருத்தரங்கை தேசிய சமாதான சபை ஒழுங்கு செய்திருந்தது. அதன் தொடர்பூடாக பணிப்பாளர் பேராசிரியர் ஜெஹான் பெரேரா. அரசாங்கம் சமீபத்தில் ஸ்தாபித்த இனங்களுக்கிடையே சமாதானத்திற்கான பலம் வாய்ந்த குழுவில் உள்ள நபர்களில் ஒருவர் அவர். அடுத்ததாக இனங்களுக்கிடையே புரிந்துணர்வை ஏற்படுத்தும் ஊடகவியலாளர்கள் அமைப்பும் அதில் கலந்து கொண்டது. அதன் தலைமைப் பதவியிலிருப்பவர் அரசாங்க தொலைக்காட்சியின் செய்திப்பிரிவின் முக்கியஸ்தரான காமினி விஜேதுங்க. அரசாங்கத்தின் சங்வாத சஞ்சிகையின் ஆசிரியர். (பிரேமதாச காலத்தில் காமினி விஜேதுங்க ஐ.தே.க. அரசாங்கத்தின் தெசத்திய சஞ்சிகையின் ஆசிரியர் என்பதும் குறிப்பிடத்தக்கது.)

தற்போது இந்த காமினி விஜேதுங்கவுக்குக் கீழ் உள்ள தொலைக்காட்சி செய்திப்பிரிவு மட்டக்களப்பு கருத்தரங்குக்கு சென்ற சிவராம்(தாரகி), சீவகன், சமன்வக ஆராய்ச்சி, மற்றும் ரோய் டினேஷ் ஆகிய தொடர்பூடகவியலாளர்கள் நால்வரும் புலிகளுடன் கொண்டுள்ள தொடர்பின் காரணமாகவே மட்டக்களப்பு பயணத்தில் கலந்து கொண்டதாக குற்றம் சாட்டியுள்ளது. சமன்வக ஆராய்ச்சியைத் தவிர மற்றவர்கள் தமிழர்கள். அரசாங்க தொலைக்காட்சி இச்செய்தியை உபாலி பத்திரிகை நிறுவனத்திடமிருந்து கடன்பெற்றுள்ளது. அச்சந்தர்ப்பத்தில் அத்தமிழ் பத்திரிகையாளர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது. இதைப் பற்றி சர்வதேச தொடர்பூடக அமைப்புகளுக்கு அனுப்பிய கடிதத்தில் காமினி விஜேதுங்க தலைவர் என்ற வகையில் கையொப்பமிட்டுள்ளார்.

ரூபவாஹினி பணிப்பாளருக்குப் பதிலாக தற்காலிக பதவி வகிக்கும் மனோரஞ்சன் ஒரு புலி என்று ரூபவாஹினி நிறுவன மலசல கூடத்தில் அண்மையில் எழுதப்பட்டிருந்தது. மனோரஞ்சன் ஒரு தமிழர். அதேபோல் முன்னை நாள் போராளி. அதற்குமுன் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆங்கிலப் பிரிவின் பணிப்பாளரான எரிக் பெர்ணாந்து இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பெரிய புலியென லேக்ஹவுஸ் பத்திரிகைகள் அறிக்கையிட்டன. தற்போது அவர் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர்.

கடந்த காலம் முழுவதும் தமிழ்ப் பத்திரிகையாளர்கள் பலர் புலி என்ற முத்திரையின் கீழ் கைது செய்யப்பட்டனர். ஆனால், அவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டு விட்டனர். இப்போதைய குற்றச் சாட்டும் பொய்.

சுதந்திர ஊடகவியலாளர்களை விழுங்க சகுனம் பார்த்துக் கொண்டிருக்கும் பிசாசுக் கூட்டங்களின் கீழ்த்தரமான வேலைகளே இவை.

ஆனால், இவ்வாறு குற்றம் சாட்டப்படும் தொடர்பூடகவியலாளர்களுக்கு வெறிபிடித்த சிங்களவர்களினால் ஆபத்து ஏதும் நேர்ந்தால் பொறுப்பு சொல்ல வேண்டியது இந்தப்பிசாசு தான் என்பதைக் குறித்து வைக்க வேண்டும்.

# எங்களுடைய குழந்தைகளைக் காப்பாற்றுவது யார்?

இன்றைய காலகட்டத்தில் பாலியல் வல்லுறவுச் சம்பவங்களும் அதனையொட்டிய நிகழ்வுகளும் சர்வசாதாரணமாகி விட்டன. இவ்வாறான சம்பவங்களைச் சற்று விரிவாகப் பார்க்கின்ற போது இத்தகைய நிகழ்வுகள் பல்வேறு மட்டங்களில் நடைபெறுவதை அவதானிக்க முடியும். இன்றைய சூழ்நிலையில் இவ்வாறான பாலியல் வல்லுறவுச் சம்பவங்களின் ஆரம்பம் ஓரளவிற்கு தற்போது இருக்கின்ற யுத்த நிலைமைகளோடு இருந்தாலும் இன்று அதன் தொடர்ச்சி பல்வேறு வடிவங்களில் வெளிப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் படையினராலேயே அதிகளவில் நடை பெற்றுள்ளன. ஆனால் இன்று மகளை தந்தை பாலியல் வல்லுறவுக்குட்படுத்துவதும், அண்ணன் தங்கையை பாலியல் வல்லுறவுக்குட் படுத்துவதும் என்று விடயங்கள் வெளிவர ஆரம்பித்துள்ளன.(அடிப்படையில் இவற்றை உற்று நோக்குகின்ற போது ஆணாதிக்கமும் அதனோடு ஒத்த கருத்துக்களுமே பிரதான மானதாக இருப்பதைக் காணலாம்.) இதனைவிட தகப்பன் மகளைப் பாலியல் வல்லுறவுக்கு ஆளாக்குவது, அண்ணன் தங்கையை பாலியல் வல்லுறவுக்குள்ளாக்குவது என்பன போன்ற விடயங்களில் வேறும் சில விடயங்களும் உப காரணிகளாக அமைகின்றன. இதற்கான சமூகப் பின்னணி என்ன என்று ஆராய்வதும் இதன் அடிப்படையை காண்பதும் தற்போதைய நிலையில் மிகமிக அவசியமாகின்றது. இத்தகைய சம்பவங்களுக்கு ஆணாதிக்க சிந்தனையும் ஆண்மேலாதிக்கமும் மூலகாரணம் என்பதில் இரண்டு கருத்துக்களுக்கு இடமில்லை. ஆனால், தகப்பன் மகளை வல்லுறவுக்குட்படுத்தும் போது ஆணாதிக்கம் மட்டுமே ஒரு காரணமாக அமைய முடியுமா என்பது ஒரு கேள்விக்குரியதாகின்றது. உண்மையில் இதற்கான பின்னணியை கண்டறிவது சிக்கலான விடயமே. ஆனால் இச்சம்பவங்கள் நடந்த சூழ்நிலை, சம்பவத்தில் ஈடுபட்ட ஆணின் மனநிலை என்பன நடைபெற்ற சம்பவத்திற்கான ஏனைய காரணங்களை ஆராய்வதில் ஓரளவு உதவ முடியும். இவ்வாறாக சம்பவங்களை ஆராய்ந்து நியாயம் கற்பிப்பது கூட ஒரு பக்கத்தில் ஆணாதிக்கத்தை நியாயப்படுத்துவதாகவே இருக்கும். ஆனால் இவ்வாறான நிலைமைகள் தொடருமானால் சமூகச் சீரழிவுக்கு வழிவகுப்பதோடு எதிர்காலத்தில் சமூகமட்டங்களில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

1. வாழ்க்கைத் தரத்திற்கும் மேலான வறுமை.
2. கூடுதலான பிள்ளைகள்.
3. கூலிவேலையும் குடியும்.
4. மனைவி கூலிவேலைக்குச் செல்லல்.
5. வாழ்விட அமைப்பு முறை
6. மனைவி வேலைக்காக வெளிநாடுகளுக்குச் செல்லுதல்.
7. தொடர்பூடகங்களினால் பிரச்சாரப்படுத்தப்படும் மனித உறவுகள் பற்றிய மதிப்பீடு.
8. தொடர்பூடகங்களினால் வெளிப்படுத்தப்படும் பாலியல் பற்றிய தவறான வெளிப்பாடு.
9. தொடர்பூடகங்களினால் பிரச்சாரப்படுத்தப்படும் சமூகப் பிரக்ஞையற்ற வாழ்க்கை பற்றிய விடயங்கள்.

எனப் பல்வேறு காரணிகளை பார்க்கலாம். ஏற்கெனவே உள்ள ஆணாதிக்க கருத்தியலை இவை மிக இறுக்கமாக பற்றி நின்று செயற்படுகின்றன.

அண்மையில் பரவலாகப் பேசப்பட்ட மட்டக்களப்பு மாநகரசபை எல்லைக்குட்பட்ட மாமாங்கத்தைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை ராஜா என்பவர் தனது 7 வயது மகள் பிரதிபாவை பாலியல் வல்லுறவுக் குட்படுத்தியது பற்றி சற்று விரிவாகப் பார்க்கின்ற போது சில உண்மைகளையும் அதிர்ச்சி தரும் தகவல்களையும் எம்மால் அறிய முடிகின்றது. ராஜா ஏற்கனவே கொழும்பில் பிரபாவதி என்கிற சிங்களப் பெண் ஒருவரை திருமணம் செய்தவர். பிரபாவதி கொழும்பில் தனது உறவினர் வீட்டில் நின்று தொழில் செய்து கொண்டிருந்த வேளையிலேயே ராஜா பிரபாவதியை இரண்டாம் தாரமாக மணம் முடித்திருந்தார். ராஜா போதை வஸ்து, கஞ்சா, சாராயம் போன்றவற்றிக்கு அடிமையான பேர்வழி. திருமணமாகி இரண்டு பிள்ளைகள் கிடைத்த பின்பும் அந்நிலைமை தொடர்ந்து கொண்டே இருந்தது. வறுமையும் வீட்டில் தாண்டவமாடியது. பிரபாவதி வீட்டின் வறுமையைப் போக்க தொழிலுக்குப் போக நேர்ந்தது. இந்நிலைமை காலப் போக்கில் ராஜாவின் பசிக்கு மகள் பிரதீபா இரையாக வேண்டியேற்பட்டது. இது ஆரம்பத்தில் பிரபாவதி வீட்டில் இல்லாத வேளைகளில் நடைபெற்று வந்தாலும் காலம் போகப் போக பிரபாவதியையும் வைத்துக் கொண்டு நடைபெறத் தொடங்கியது. பிரபாவதியின் எதிர்ப்புக்குப் பதிலாக ராஜாவின் அடி உதைகளே பிரபாவதிக்கு கிடைத்துள்ளது. இதை பிரபாவதி தனது உறவினர்களிடமும் கூறியிருக்கின்றார். "நான் போட்டவிதையில் நான் பழம் சாப்பிடாமல் வேறு யார் சாப்பிடுவது" என்று அனை வருக்கும் பதில் கூறினார் ராஜா. இந்த வேளை யில் தான் பிரபா வதியும் மூன்று மாதக் கர்ப்பிணியாக இருந்தார். ஆனால் வீட்டின் பொருளாதார நிலைமையும் நாளுக்கு நாள் மோசமடைந்து கொண்டு வந்தது. ராஜாவின் குடியும் பிள்ளையுடனான தொடர்பும் தொடர்ந்து கொண்டிருந்தது. வேறுவழியின்றி தனக்கு இனிப்பிள்ளை தேவையில்லை என முடிவு செய்து கொண்டு கருவைக் கலைக்க முடிவு செய்துள்ளார். இதனை தனது தாயின் உதவியுடன் மட்டக்களப்பு வைத்தியசாலையில் சிற்றூழியராகப் பணிபுரியும் தங்கநாயகியைக் கொண்டு செய்துள்ளார். கருக்கலைப்புச் செய்து மூன்றாவது நாள் பிரபாவதிக்கு அதிகளவு இரத்தப்போக்கு ஏற்பட்டிருக்கின்றது. தொடர்ந்து வீட்டில் வைத்துக் கொள்ள முடியாததால் மட்டக்களப்பு போதனாவைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டு 24.04.99 அன்று மரணமானார். வைத்தியசாலை பிரேத பரிசோதனை அறிக்கையின்படி மனித வலுவைப் பயன்படுத்தி மூலிகைத் தண்டை (கள்ளித் தண்டு) உட்தள்ளியதால் கருப்பை சிதைவடைந்ததால் உண்டான இரத்தப் பெருக்கினால் ஏற்பட்ட மரணம் சம்பவித்துள்ளது என்று கூறப்பட்டுள்ளது. பிரேத பரிசோதனையின் போது சிதைவுற்ற கருப்பையில் இருந்து கள்ளித்தண்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கள்ளிப் பால் கொடுத்து பெண்பிள்ளைகளைக் கொல்லும் கோரத்தை அறிந்திருக்கின்றோம். அதுவும் எமது நாட்டிலல்ல. ஆனால் எமது நாட்டில் கள்ளித்தண்டைக் கொண்டு கருக்கலைப்பதை இப்போது தான் கேள்விப்படுகின்றோம். இது சட்டத்தை மீறிய கருக்கலைப்பாதலால் (criminal abortion) இதனைச் செய்த தங்கநாயகியை தேடிச்சென்ற வேளையில் பொலீஸ் சப்இன்ஸ்பெக்டர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதுவும் குறிப்பிடத்தக்கது. பிரபாவதி இறந்தபின் பிரதீபாவும் அவளது ஆறு வயதுத் தங்கை சுவியும் 11 வயது டைய அண்ணன் பிரதாப்பும் அம்மம்மா வீட்டிலிருந்தே வளர்ந்திருக்கிறார்கள். ராஜா பிரபாவதி இறந்ததன் பின் எதுவித தொடர்பையும் வைத்துக் கொள்ளவில்லை. ஆனால் திடீரென கடந்த பெப்ரவரி 14ந் திகதி பாடசாலைக்குச் செல்ல வந்த மகள் பிரதீபாவை தெருவில் வைத்து கட்டாயப் படுத்த முயன்ற போது பிரதீபா பயத்தால் அலறத் தொடங் கியுள்ளார். அயலவர்களாலும் உறவினர்க ளாலும் ராஜா நையப்புடைத்து பொலீசில் ஒப்படைக்கப் பட்டார். தற்போது ராஜா தனது உறவினர்களின் உதவியுடன் சிறையிலிருந்து பிணையில் வெளியே வந்துள்ளார். சிறையி லிருந்து வெளியே வந்ததும் வராததுமாக தனது ஆறுவயதுடைய இரண்டாவது மகளான சுவியை அம்மம்மாவிடம் இருந்து வலுக்கட்டாயமாக அழைத்துச் சென்று விட்டார். கடந்த வாரம் மகன் பிரதாபனையும் யாருக்கும் தெரியாமல் வீட்டிலிருந்து கூட்டிச்சென்று நாவற்குடா என்னுமிடத்தில் வைத்திருப்பதாகக் கூறப்படுகின்றது. ராஜாவைப் போல் எத்தனையோ ராஜாக்கள் இந்த சமூகத்தில் பசு தோல் போர்த்த புலியாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். உண்மையில் இவ்வாறான சம்பவங்களை கண்டு கொள்ள வில்லையா அல்லது கண்டுகொள்ள விரும்ப வில்லையா என்றுதான் இங்கு சமூகவேலையில் ஈடுபடுகின்ற நிறுவனங்களைப் பார்த்துக் கேட்க வேண்டியுள்ளது.



பாலியல் வக்கிரத்தின் அதீத உச்சநிலையில் தனது மகளை பாலியல் வன்முறைக்கு உட்படுத்துவது மட்டுமல்லாமல் இன்னும் வார்த்தைகளில் எழுத முடியாதபடி மகளை பாலியல் ரீதியாகக் கொடுமைப்படுத்தியுள்ளார். இக் கோரச் செயலை மட்டக்களப்பு சின்ன ஊறணியைச் சேர்ந்த யோகானந்தம் என்பவரே செய்துள்ளார்.

இவ்வாறான விடயங்கள் புரையோடிப் போயுள்ள இந்தச் சமூகத்தில் இத்தகைய விசச் செடிகளை களையெடுப்பதற்கு தற்போது நடைமுறையிலுள்ள சட்டங்களும் தண்டனைகளும் மட்டுமே போதுமானதா?

இந்த அவலத்தை எமது சமூகத்தில் இருந்து துடைத்தெறிவதில் நாம் எதிர்நோக்கும் சிக்கல்கள் பல. இத்தகைய கொடூரங்களை வெளிக்கொணர்வதில் பாதிக்கப்பட்டோருக்கு ஏற்படும் மனப்பயம், தயக்கங்கள் அதையும் மீறி துணிவுடன் வெளிக்கொணரப்படும் போது பாதிக்கப்பட்டவர்களுக்கு இந்த சமூகத்தினால் கொடுக்கப்படும் 'அந்தஸ்த்தும்' நெருக்கடிகளும், அத்துடன் இவ்வாறு அம்பலப் படுத்தப் பட்ட வெறியர்கள் மீண்டும் அதே சமூகத்தில் தமது கொடூரங்களைத் தொடர்வ தற்கு இடம் கொடுக்கும் எமது சட்ட ரீதியானதும் சமுதாய ரீதியானதுமான கட்டமைப்புக்கள்.

இவற்றில் எந்த ஒரு நிலையில் மாத்திரம் மட்டும் வரும் மாற்றம், தொடரும் இக்கொடூரங்களை துடைத்தெறியப் போதுமானதல்ல. ஒட்டு மொத்தமான சமூக அமைப்பிலும் சிந்தனையி லும் ஏற்படும் விழிப்புணர்வுகளும் அவைசார்ந்த மாற்றங்களுமே இத்தகைய வெறிபிடித்தவர்களிடம் இருந்து எமது சமூகத்தைக் காப்பாற்றும்.

இந்நிலைமைகளை நோக்குகின்ற போது இவ்வாறான பாலியல் வல்லுறவுச் சம்பவங்களுக்கான சமூகக்காரணியாக சிதைவடைந்து வரும் சமூக உறவுகளும் உறவு தொடர்பாக சமூகத்தில் இருக்கின்ற ஆரோக்கியமற்ற தன்மையையுமே கூறலாம். இந்நிலைமைகளுக்கு இன்றைய யுத்த சூழ்நிலை பலமாக விளங்குகின்றது என்பது ஒரு பக்க உண்மையாக இருந்தாலும் இதுவே முழுக்காரணமுமல்ல.

இவ்வாறான குற்றச் செயல்களுக்கு இலங்கைச் சட்டத்தில் தண்டனைகள் எழுத்தளவில் காணப்படுகின்றதே தவிர நீதித்துறையும் அதில் பங்களிப்பவர்களும் பெருமளவில் ஆண்களாகவே காணப்படுவதாலோ என்னவோ நடைமுறையில் அவை பாதிக்கப்பட்ட பெண்களுக்குச் சாதகமாக அமைவது மிக அபூர்வம்.

இவ்வாறான குற்றம் சாட்டப்பட்ட ஒரு ஆண் வெகு இலகுவாக பிணையில் வந்துவிடுவதன் காரணத்தால் இவ்வாறான குற்றங்களில் சம்பந்தப்படுகின்ற ஆண்கள் பயமற்ற நிலையில் காணப்படுகின்றனர். இலங்கையைப் பொறுத்தவரை இதுவரை தீர்ப்பு வழங்கப்பட்ட கிருஷாந்தி, றீற்றா வழக்குகளின் தீர்ப்புக்கள் கூட வெறுமனே நீதித்துறையின் பலத்தினால் நடைபெற்றவை எனக்கூறிவிட முடியாது. அவற்றுக்கு வேறு அரசியல் பரிமாணங்கள் இருந்தன என்பது வெளிப்படையாகத் தெரிந்த விடயம்.

பாதிக்கப்படும் சாதாரண மக்களுக்கு எட்டாத நீதித்துறையும், அதன் பாரபட்சமான நடவடிக்கைகளும் இத்தகைய குற்றங்களை மேலும் அதிகரிப்பதற்கு உறுதுணையாக இருக்கின்றது என்ற குற்றச்சாட்டும் உண்டு. இவ்வாறான சம்பவங்களைக் கட்டுப்படுத்துவதும் அதற்கான உரிய தீர்ப்பினை வழங்குவதும் ஒரு பக்கம் நீதித் துறையின் கடமையாக இருந்தாலும் மறுபக்கத்தில் எமது சமூகத்தில் மனித மாண்புகளை மதிக்கும் ஒழுக்கத்திற்கான செல்நெறியிலேயே இதன் அடிப்படை தங்கியுள்ளது.

இதற்கு இக்கட்டுரையில் முன்னரே கூறிய சமூகவியல் காரணங்கள் ஆற்றுகின்ற பங்கையும் அதற்கும் ஆணாதிக்கத்திற்கும் உள்ள தவிர்க்கவியலாத பிணைப்பையும் கண்டுபிடித்து அவற்றை துடைத்தெறிவதன் மூலமே எமது பெண்குழந்தைகளை (ஆண் குழந்தைகளையும் தான்) இப்பேராபத்திலிருந்து காப்பாற்ற முடியும்.

-வி.ஜே.கே

**அண்மையில் நீதிமன்றத்துக்கு கொண்டு வரப்பட்ட பாலியல் வன்முறை தொடர்பான வழக்குகள்**

| பெயர் | சம்பவம் நடந்த இடம் | யாரால் | வழக்கு இல. |
|---|---|---|---|
| பா.உதயராணி (16) | 13ம்கொலனி,மண்டூர் | - | 35953/ns/99 |
| சோ.தங்கேஸ்வரி (18) | 13ம்கொலனி,மண்டூர் | - | 35953/ns/99 |
| செ.குமுதினி (9) | கல்மடு,கல்குடா | - | 33136 |
| யோ.சத்தியகலா (14) | பாரதிகிராமம்,சின்னஊறணி | தகப்பன் | 34563/ns/ |
| அ.ஞானமலர் (20) | கொக்குவில்,மட்டக்களப்பு | லோகிதன் | 32695/ns/98 |
| ஜோ.விபுலா (28) | வீச்சுக்கல்முனை | பொலீஸ் | - |
| ரீ.செல்வக்குமாரி (10) | விநாயகர்கிராமம் | சித்தப்பா | 33981/ns/ |
| பாத்திமா பர்ஸானா (13) | ஏறாவூர் | அத்தான் | 32861/ns/ |
| வே.சிறிதேவி | - | - | 33351/ns/ |
| கி.ராகினி | விபுலானந்தபுரம் | இராணுவம் | 31949/ns/ |
| எஸ்.தர்சினி | - | பிரதாபன் | - |
| மீராசாய்பு கைறுநிஷா (10) | சம்மாந்துறை | பொலீஸ் | 10791 |
| ரா.பிரதீபா (7) | அமிர்தகழி | தகப்பன் | - |
| மு.கிருஷாந்தினி | மட்டக்களப்பு | தகப்பன் | - |

# 1999 யுத்தத்தின் போக்கு ஒரு கணக்கெடுப்பும் சில குறிப்புகளும்

# இனப்பிரச்சினை பற்றிய தெளிவின்மையுடன் செயற்பட்ட சமாதான இயக்கங்கள்!

### 4.2 சிவில் சமூகத்தின் வெளிப்பாடு

அரசாங்கத்திற்கும் புலிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தையினாலன்றி இந்நாட்டு இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வை வழங்க முடியாதெனச் சிவில் - சமூக - சமாதான இயக்கங்கள் கருத்தினைக் கொண்டிருந்தன. அதேபோல் இனப்பிரச்சினை மற்றும் தீர்வினூடாக இந்நாட்டுப் பிரதான அரசியல் கட்சிகள் இரண்டுக்கிடையில் பரந்த, விரிவான இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என இவ் இயக்கங்கள் சுட்டிக் காட்டியிருந்தன.

அரசாங்கத்திற்கும், புலிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கும் முகமாக, வெளிநாட்டு மூன்றாவது தரப்பின் தேவை குறித்துப் பொது இணக்கம் சமாதான இயக்கங்களுக்கிடையில் காணப்படவில்லை. அதேபோல், அரசியல் தீர்வின் பரந்த தன்மை எவ்வாறானதாக இருக்க வேண்டும் என்பது குறித்ததான இணக்கம் தென்னிலங்கைச் சமாதான இயக்கங்களிடம் காணப்படவில்லை.

1999 பெப்ரவரி முதல் பகுதியில், பௌத்த மற்றும் கிறிஸ்தவ மதங்களைச் சேர்ந்த மதத் தலைவர்கள் சிலர் வவுனியாவில் மடு மற்றும் மல்லாவிப் பிரதேசங்களுக்குப் பயணம் செய்ததுடன், புலிகளின் அரசியல் பிரிவின் பொறுப்பாளரான தமிழ்ச்செல்வம் மற்றும் பிரதித் தலைவர் கரிகாலன் ஆகியோரைச் சந்தித்தனர். கொழும்புக்கு வந்து பத்திரிகையாளர் மாநாட்டை நடத்திய இந்த மதத் தலைவர்கள், புலிகள் பேச்சுவார்த்தைத் தீர்வுக்குத் தயாரெனத் தெரிவித்துள்ளதாகக் குறிப்பிட்டிருந்தனர். தேசிய சமாதானக் கூட்டமைப்பின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ வித்தாரண இந்தப் பிரதிநிதிகள் குழுவில் இருந்தார். இதன் பின் இரண்டாவது தடவையாகவும், வன்னிப் பிரதேசத்திற்குச் சென்று மருத்துவ முகாம் நடாத்தி, அன்னியோன்னியத்தை ஏற்படுத்த இந்தக் குழு முயற்சித்தது. எவ்வாறாயினும், அரசினால் மேற்கொள்ளப்பட்ட ரணகோஷ நடவடிக்கையைப் புலித் தலைவர்கள் காரணம் காட்டி இவ் மதத் தலைவர்களுடனான பேச்சுக்களை இடை நிறுத்தினர்.



இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது காணாமல் போன படையினர்களின் பெற்றோர், பாதுகாவலர் சங்கம் 1999ல் இரண்டு மூன்று தடவைகள் வன்னிக்குச் சென்று புலிகளைச் சந்திக்க முயற்சித்தது. ஆயிரக்கணக்கான அங்கத்துவத்தினரைக் கொண்ட இச்சங்கம் நாடு முழுவதும் இடம்பெற்ற சமாதான ஆர்ப்பாட்டங்களில் குறிப்பிடத்தக்க பங்காற்றியது. யுத்தத்திற்கு அரசியல் தீர்வு தேவையெனவும் அதற்குப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்த வேண்டும் எனவும் அவர்கள் குறிப்பிட்டிருந்தனர். புலிகளினால் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமது பிள்ளைகளைப் பார்வையிட, களுத்துறைச் சிறைச்சாலையில் உள்ள தமிழ்ச் சந்தேக நபர்களை விடுவிக்குமாறு அரசிடம் விடுத்த வேண்டுகோள்களுக்குச் சரியான பதில் கிடைக்கவில்லை. களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளைப் பார்க்கச் செல்ல அவர்கள் விடுத்த வேண்டுகோளும் நிராகரிக்கப்பட்டது. வன்னியில் புலிப் பிரதானிகளைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தும் நாள் வருட இறுதியில் குறிக்கப்பட்ட போதும் யுத்த நிலைமை இதற்குத் தடையாக இருந்தது.

மோர்ஜ் இயக்கம், தேசிய சமாதானக் கூட்டமைப்பு மற்றும் சமாதானச் செயற்பாட்டாளர்களின் கூட்டிணைப்பான மக்கள் சமாதான முன்னணி 1999 வருடம் முழுவதும் பலதரப்பட்ட சமாதான முயற்சிகளை மேற்கொண்டு வந்தது. 1999 ஒகஸ்ட் மாதத்தில் சர்வோதய இயக்கத்தினால் இலட்சத்திற்கு அதிகமான மக்கள் கொழும்பில் இடம்பெற்ற சமாதானத் தியானத்திற்கு ஒன்று கூட்டப்பட்டனர். அண்மைக் காலத்தில் இடம்பெற்ற பாரிய சமாதான நிகழ்ச்சித் திட்டமான இந்த நிகழ்ச்சியினால் சமாதானம் பற்றிய உள்ளார்ந்த சக்தியை ஏற்படுத்தல் சர்வோதய இயக்கத்தின் குறிக்கோளாகும்.

அதன் பின், ஒக்டோபர் மாதத்தில் புத்தளத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் பங்களிப்புடன் இவ்வாறான சமாதானத் தியானம் சர்வோதய இயக்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டது. 1999 ஏப்ரல் மாதத்தில் சமூக, சமாதான கேந்திரத்தினால் "சமாதான வாழ்வு" என்ற பெயரில் ஆயிரக்கணக்கான இளைஞர், யுவதிகள் பங்குபற்றிய பல்லினச் சமாதானக் கூட்டம் கொழும்பில் இடம்பெற்றது. 1999 யுத்தத்தை நிறுத்திச் சமாதானத்தை ஏற்படுத்துமாறு கட்டாயப்படுத்தும் அறிக்கைகள், சுவரொட்டி இயக்கங்கள் பல 1999ல் இடம் பெற்றன. 1999 டிசெம்பர் 10ம் திகதி மனித உரிமைகள் தினத்திற்காகப் பாடசாலை மாணவர், மாணவியர்களுக்கிடையில் மனித உரிமைகள் நிகழ்ச்சித் திட்டத்தை 05 மாவட்டங்களில் நடாத்திய மோர்ஜ் இயக்கம், நுவரெலியாவில் ஆயிரக்கணக்கான மலையக, கிராமிய மக்களுடன் இணைந்து நாள் முழுவதும் சமாதான நிகழ்ச்சியொன்றை நடாத்தியது. அதேபோல் மக்கள் சமாதான முன்னணி டிசெம்பர் 10இல் கொழும்பில் பிரபல யுத்த விரோத ஆர்ப்பாட்டமொன்றை நடாத்தியது. இதைத் தவிர, நாடு முழுவதும் பிரதேச மட்டத்தில் யுத்த விரோத, சமாதான நிகழ்ச்சித் திட்டங்கள் பல மக்கள் இயக்கங்களால் மேற்கொள்ளப்பட்டன. சமாதானச் சுவரொட்டி இயக்கங்கள் மற்றும் பிற பிரச்சார இயக்கங்கள் இதற்குள் அடங்கும். ஜூலை மாதத்தில் நாடு முழுவதும் யுத்த விரோத ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்ட சமாதானப் பாடல் திட்டமான "சாதுஜன வந்தனாவ" இதில் சுட்டிக் காட்டப்படத்தக்கது.

எனினும், இச்சமாதான நிகழ்ச்சித் திட்டங்களில் பெரும்பாலும் சிங்கள மக்களே கலந்து கொண்டனர். தமிழ் மக்களின் பரந்த பங்களிப்புக் காணப்படவில்லை. யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா ஆகிய பிரதேசங்களைப் போன்று கொழும்பில் தமிழ் மக்களை ஒன்று திரட்டும் தன்மையாக யுத்தம் காரணமாக அன்றாட வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் காணப்பட்டன. அரசியல் தீர்வின் மூலம் சமாதானத்தை ஏற்படுத்தல் குறித்து மக்களை ஒன்றுபடுத்தும் போக்குத் தமிழ் மக்களுக்கிடையில் மேற்கொள்ளப்படவில்லை. அத்துடன் இவ்வாறான செயற்பாடுகளில் பங்குபற்றும் தன்மையும் குறைவாகக் காணப்பட்டது. இந்நாட்டுத் தமிழ்ச் சமூகத்தில் சுயாதீனமான அரசியல் செயற்பாட்டுக்கான வாய்ப்பு யுத்த சூழலினால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அதேபோல் இந்நாட்டுத் தமிழ்ச் சமூகத்தில் யுத்தம் மற்றும் சமாதானம் தொடர்பாக உள்ள கருத்துக்களை அறிந்து கொள்ளக் கிரமம் ஒன்றும் காணப்படவில்லை.

இதற்கு மாறாகப் பிரதானமாகச் சிங்கள மக்களுக்கிடையில் மேற்கொள்ளப்பட்ட பொதுமக்கள் கருத்துக் கணிப்புகள் மூன்று, அரசியல் தீர்வினால் யுத்தப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவரப் பெருமளவான சிங்கள மக்கள் விரும்புகின்றனர் எனத் தெரிவித்திருந்தது. 1999 ஏப்ரல் மாதத்தில் 05 மாகாணங்களில் நடைபெற்ற மாகாண சபைத் தேர்தலின் போது மேற்கொள்ளப்பட்ட மக்கள் கருத்துக் கணிப்பில் 62 சதவீதமான மக்கள் அரசியல் தீர்வினை விரும்புகின்றனர் எனத் தெரியவந்தது. 25 சதவீதத்தினர் யுத்தத் தீர்வுக்கு விருப்பம் தெரிவித்தனர். இதன் பின் ஜூலை மாதத்தில் இடம்பெற்ற தென் மாகாண சபைத் தேர்தல் காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட கருத்துக் கணிப்பின் மூலம் 59 சதவீதத்தினர் அரசியல் தீர்வுக்கும், 39 சதவீதத்தினர் யுத்தத் தீர்வுக்கும் விருப்பம் தெரிவித்தனர். வருட இறுதியில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போது மேற்கொள்ளப்பட்ட இவ்வாறான ஆய்வில் 59 சதவீதத்தினர் பேச்சுவார்த்தை ரீதியிலான தீர்வுக்கும், 28 சதவீதத்தினர் யுத்தத் தீர்வுக்கும் விருப்பம் தெரிவித்திருந்தனர். இந்த மக்கள் கருத்துக் கணிப்பு தேசிய சமாதான சபையின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்டது. இவ் ஆய்வில் பொது மக்கள் கருத்துக் கணிப்பு முறைகள் பயன்படுத்தப்பட்டிருந்தன.




சிங்கள மக்கள் மத்தியில் யுத்தத் தீர்வுக்கு ஆதரவு இல்லையெனச் சமாதான இயக்கங்கள் மற்றும் சமாதான அவதானிகளினால் மீண்டும் மீண்டும் தெரிவிக்கப்பட்டிருந்த கருத்துக்கள் இந்தப் பொது மக்கள் ஆய்வினால் உறுதிப்படுத்தப்பட்டது. எனினும், சமாதானத்திற்கான இந்த விருப்பம் மற்றும் அபிலாஷையை முக்கியமான சக்தியாக மாற்றச் சமாதான இயக்கங்களால் இயலவில்லை.

சமாதான இயக்கங்களுள் தாராண்மை மட்டத்திலான இணைப்புத் தன்மைகள் காணப்பட்டாலும் முக்கியமான இணக்கப்பாடுகள் காணப்படவில்லை. பெரும்பாலும் மக்கள் சமாதான இயக்கங்கள் என்பதை விடுத்துச் சுயமான திட்ட வரையறைகளிலும், எல்லைகளிலும் சமாதான முயற்சிகள் மற்றும் இயக்கங்கள் சிக்கியுள்ளமையைக் காணக்கூடியதாக இருந்தது. தேசிய மட்டத்திலான தலைமைத்துவம் மற்றும் வேலைத் திட்டத்தை நோக்கி முன்னேறிச் செல்லச் சமாதான இயக்கங்களால் முடியாமற் போனது பெரும்பாலும் மேற்கூறப்பட்ட பலவீனங்களினாலேயே ஆகும்.

இரண்டு தசாப்த காலமாக இலங்கையில் சமாதானத்தை உறுதிப்படுத்த முயற்சிக்கும் பல்லினக் குழுக்கள், தொழிற்சங்கள், அரசியல் கட்சிகள், சுயாதீன நபர்களைப் போன்று அரசுக்கும் சமாதானத்தை எவ்விதம் கட்டியெழுப்புவது என்பது பற்றி உறுதியான கொள்கைகள் இருந்ததா என்பது குறித்துச் சந்தேகம் உள்ளது. இது குறித்துக் கவனத்தில் எடுக்க வேண்டிய பிரதான விடயம் இன்று நிலவும் சூழலுக்கேற்ப சமாதானத்தைப் பற்றி அக்கறை காட்டும் அனைவரும் ஒரு தீர்வினை வலியுறுத்தி, அதற்காக முயன்றமையை 1999ல் காணக் கிட்டியமையாகும். அதேபோல், இலங்கை நெருக்கடிகளுக்குப் பங்காளர்களாக இருந்த பிரதான தரப்பார் ஒவ்வொருவரும் வேறு கருத்துக்களைக் கொண்டிருந்தமை காரணமாக முயற்சிகள் வீணாகியுள்ளமையை விளங்கிக் கொள்ள அவர்களால் இயலாதுள்ளது.

உதாரணமாக ஐக்கிய இலங்கை அரசு பற்றிய சிங்கள நிலைப்பாடு, தமிழ் / புலிகள் சமஷ்டி/ ஈழ நிலைப்பாடு போன்ற நிலைப்பாடுகளுக்குள் உறுதியாக இருந்து கொண்டு ஒப்பந்தங்களுக்கு வர முயற்சித்தல் கடந்த வருடம் முழுவதும் அதற்கு முன்னரும் காணக் கிடைத்த யதார்த்தமாகும்.

இதற்குப் பதிலாக இரு தரப்பினரதும் தேவைகளை விளங்கிக் கொண்டு, ஒப்பந்தத்தினை நோக்கிச் செல்லத் தேவையான சூழலைக் கட்டியெழுப்ப மேற்கொள்ளப்பட்ட முயற்சியை 1999 இறுதி வரை காணக் கிடைக்கவில்லை. இந்தக் காரணத்தினால் இருதரப்பாருக்கும் இடையில் நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் செயற்பாட்டினைக் காணக் கிடைக்காததைப் போன்று சமாதானச் செயற்பாடுகளை ஆரம்பிக்கும் வழிகளைக் கூட எப்படி ஏற்படுத்துவது என்பது பற்றிய கருத்து ஏற்படாமையையும் காணக்கிட்டியது.

கடந்த வருடங்களில் இடம்பெற்ற பலதரப்பட்ட இராணுவச் செயற்பாடுகளை நோக்கும்போது மிகத் தெளிவாகத் தெரியும் விடயம் மோதலில் சமமற்ற தன்மை காணப்படுவதே ஆகும். இங்கு இலங்கை அரசு எப்போழுதும் மோதலில் வெற்றி பெறும் நோக்கத்துடன் தமது உத்திகளை, பிரச்சாரங்களை நடைமுறைப்படுத்தியது. புலிகள் எப்பொழுதும் தோல்வியடையாது அரச படையின் இலக்குகளை நிர்மூலமாக்க முயற்சித்தனர். எப்பொழுதும் யுத்தம் நிலவும் சூழலில் இந்த சமமற்ற தன்மை ஆயுதக்குழுவிற்குச் சார்பாக இருந்த போதிலும், சமாதானம் மற்றும் பேச்சுவார்த்தையில் இந்தத் தன்மை ஆயுதக் குழுவின் தோல்விக்குக் காரணமாக மாறும். இவ்வாறு தோல்வியாக மாறுவதனால் ஆயுதக் குழு சமாதானப் பேச்சுவார்த்தைக்கான ஆயத்தங்களைப் பின் தள்ளுவது சாதாரண விடயமாகும்.

இந்தச் சமமற்ற தன்மையைக் குலைக்கும் செயற்பாடு நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் செயற்பாடாகக் கருதப்படுகின்றது. நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் செயற்பாடு, பெரும்பாலும் வெற்றிகரமாகக் கொண்டு செல்லப்படுவது மோதலின் தரப்பாக உள்ள குழுக்களுக்குக் கடினமாக இருப்பதினால் இதற்கு மூன்றாவது தரப்பின் தலையீடு அவசியம். மூன்றாம் தரப்புத் தலையீடு என்பதன் கருத்துத் தலையீட்டாளர், உறுதிப்படுத்துபவர் போன்ற செயற்பாடுகளினால் அர்த்தப்பட்டாலும், இலங்கையில் இவ்விடயம் குறித்துச் சரியான அவதானம் செலுத்தப்படவில்லை. பெரும்பாலும் தலையீட்டாளரின் தேவையை வற்புறுத்தினாலும் கோட்பாடாக எடுத்துக் கொண்டால், இலங்கையில் நிலவும் நெருக்கடியில் தலையீட்டாளர்களால் மேற்கொள்ளப்பட வேண்டிய தலையீடுகள் குறைவு என்பதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். இலங்கை நெருக்கடி பேச்சுவார்த்தைக்குட்படுவது சமரசத்தை ஏற்படுத்தும் முகமாகவே. இப்பேச்சுவார்த்தைக்கு அடிப்படையாக இருப்பது ஐக்கிய / ஐக்கிய இலங்கையை ஏற்படுத்துவது மற்றும் சமஷ்டி / ஈழம் அடிப்படையில் ஒப்பந்தத்தினை ஏற்படுத்தல் பற்றியதாகும். உண்மையில் இவ்வாறு நிலைமைகளுக்கிடையில் இணக்கப்பாடு / ஒப்பந்தத்தை ஏற்படுத்தும் சமாதானச் செயற்பாட்டைக் கட்டியெழுப்புதல் இலங்கைச் சூழலின் கீழ் மிகவும் உசிதமானதாகும். இந்நிலைமையின் கீழ் தரகரின் சேவை செயற்பாடுகளைக் கட்டியெழுப்புதல் வேண்டும். கடந்த வருடங்களைப் போன்று அதற்கு முன்னரும் நீண்டகாலச் சமாதானச் செயற்பாடுகளைக் கட்டியெழுப்ப முடியாமைக்கான ஒரு காரணமாக இந்தப் போக்குப் பற்றிச் சிவில் இயக்கங்களுக்கிடையில் தெளிவற்ற தன்மை காணப்படுவதனைச் சுட்டிக் காட்டலாம்.

**(இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தினால் வெளியிடப்பட்டுள்ள 'இலங்கையின் இன மோதல்கள் 1999 - 2000 வளர்ச்சியும் போக்கும் நூலில் இருந்து எடுக்கப்பட்டது.)**

# பொருத்தமான தீர்வு இரண்டு அரசுகளே!

ஏ.ஜே. வில்சன்


ராஜீவ் காந்தி

அண்மையில் காலமான பேராசிரியர் ஏ. ஜே. வில்சன் அவர்களது நூலான 'இலங்கை உடைவு' (The Break up - of Sri Lanka) என்ற நூலுக்கு அவர் எழுதிய பின்னுரையினை அவரது ஞாபகார்த்தமாக இங்கு தமிழாக்கித் தருகிறோம். இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தாக்கிய சில நாட்களுக்குள் எழுதப்பட்ட இந்தப் பின்னுரையில் பேராசிரியர் சில அடிப்படையான அவதானங்களை வெளிப்படுத்தியுள்ளார். அவை ஒரு தசாப்த காலத்தைக் கடந்து இன்று வரை நடந்து முடிந்த வரலாற்றுச் சம்பவங்கள் குறித்த எச்சரிக்கையாக இருந்திருக்கின்றன.

இந்நூலுக்கு அவர் 1988 மார்ச்சில் எழுதிய முன்னுரையில் இவ்வாறு எழுதினார்.

"என்னுடைய கண்ணோட்டத்தில் இலங்கை ஏற்கெனவே இரண்டு தனித் தனியான பகுதிகளாகப் பிளவுண்டு விட்டது. இன்று அது மனோரீதியான அளவில் நடந்து முடிந்திருக்கிறது. அது பூகோள ரீதியாகப் பிளவுறுவது என்ற அடுத்த நிகழ்வு வெறும் காலத்தோடு சம்பந்தப்பட்டது மட்டுமே. ஒட்டு வேலைச் சமரசங்கள் - அவை புது டில்லியால் பொறுப்பற்றுச் செய்யப்பட்டாலும் கூட வெறும் காலம் கடத்தும் செயல்களாவே அமையும். சிங்கள உயர் குழாத்தினர் மத்தியில், பிரதான இனத்துவச் சிறுபான்மையினரான தமிழர்களுடன் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வதற்குத் தயாரற்ற நிலை நிலவுவதே இதற்கான காரணமாகும்..."

முடிவுரையின் தமிழாக்கம் கீழே தரப்படுகிறது: (-ஆர்.)

இந்தப் புத்தகத்தினை எழுதி முடித்த பின் நான் பல வெளிநாட்டவரையும், இலங்கையைச் சேர்ந்த வெளிநாட்டில் புலம்பெயர்ந்து வாழும் பலரையும் - அவர்கள் இலங்கை சென்று திரும்பியிருந்தார்கள் - சந்தித்தேன். அவர்களது அபிப்பிராயப்படி தமிழர்கட்கும், சிங்களவர்கட்கும் இடையிலான பிரிவானது உருவாக்கப்பட்டு, இன்று அவை இணைக்கப்பட முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. இரண்டாவது உலக மகா யுத்தத்தின் பின்னர் ஆசியாவும், ஐரோப்பாவும் சமாதானமாகிப் போனது போல எதிரிகள் சமாதானமாகப் போகின்ற உதாரணங்கள் இலங்கையில் நடந்து கொண்டிருக்கும் சிங்கள - தமிழ் யுத்தத்திற்குப் பொருந்தி வராது. சிங்கள இராணுவம் முடிவான வெற்றியைப் பெறுவது என்பது ஒரு போதும் சாத்தியமாக அமைய முடியாது. ஏனென்றால் யுத்தம் எந்தக் கணமும், திரும்பவும் தமிழ் நாட்டில் இருந்து ஆரம்பமாகும் வாய்ப்பு இருக்கின்றது.

சிங்களவர்கள் தற்காலிகமாக இராணுவ வெற்றியைப் பெற்றால் என்ன நடக்கும்? நான் முன்னர் சொன்ன காரணத்தினால் இது ஒரு போதும் சாத்தியமாக முடியாது என்பது எனது அபிப்பிராயம். தவிரவும், தமிழர்களைச் சமாதானம் செய்வதற்கு மயான அமைதியை ஒரு போதும் ஈடாகக் கொள்ள முடியாது.

இப்போது செயற்படுவது போலத் தமிழ்ப் போராளிகள் திட்டமிட்ட முறையில் செயற்பட முடியாவிட்டாலும், அவர்கள் அவ்வப்போது தமது இலக்குகள்மீது தாக்குதல்களை நடாத்துவதன் மூலமாகத் தமது நோக்கங்களைத் தொடர்ந்தும் வலியுறுத்திக் கொண்டேயிருப்பார்கள். இலங்கைத் தீவில் இன்னமும் மீந்திருப்பவைகளை அழிவுக்கு இட்டுச் செல்வதற்கான வாய்ப்பு இன்னமும் நிலவவே செய்கிறது. அத்துடன் ஜே. ஆர். ஜெயவர்த்தனவைத் தமிழர்கள் மீது வெற்றிகரமான யுத்தம் ஒன்றை நடாத்தத் திட்டமிட வேண்டாம் என்று இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி எச்சரிக்கை செய்திருந்தார். அவர் நேரடியாகச் சொல்லா விட்டாலும், தமிழ் விடுதலை இயக்கத்திற்கு, இராணுவ சம நிலையைப் பேணுவதற்கேற்ற ஆதரவைத் வேண்டும். அத்துடன் தமிழ் நாட்டைக் கட்டுப்படுத்தவோ, எதிர்க்கவோ முடிந்தால் தமிழ் நாடு வழங்கும் என்று அவர் குறிப்பால் உணர்த்தியிருந்தார்.


ஜே.ஆர். ஜெயவர்த்தன

> ' முக்கியமான கேள்வி என்னவென்றால், நெருக்கடியான நேரத்தில் புதுடில்லி என்ன நிலைப்பாட்டை எடுக்கும் என்பது தான். இந்திய அரசாங்கம், தன்னுடைய தேசிய நலன்களின் அடிப்படையில் மட்டும் செயல்படுமேயன்றி, இலங்கையில் உள்ள தமிழர்களைப் பாதுகாக்கும் நோக்குடன் செயற்படப் போவதில்லை. இந்த விடயத்தில் இலங்கை தொடர்பான ராஜீவ் காந்தியின் கொள்கை, அவருக்கு முன்பு அதிகாரத்தில் இருந்த அவரது தாயார் இந்திரா காந்தி காலத்திலிருந்த கொள்கையின் தொடர்ச்சி என்றே சொல்ல வேண்டும். '

முக்கியமான கேள்வி என்னவென்றால், நெருக்கடியான நேரத்தில் புதுடில்லி என்ன நிலைப்பாட்டை எடுக்கும் என்பது தான். இந்திய அரசாங்கம், தன்னுடைய தேசிய நலன்களின் அடிப்படையில் மட்டும் செயல்படுமேயன்றி, இலங்கையில் உள்ள தமிழர்களைப் பாதுகாக்கும் நோக்குடன் செயற்படப் போவதில்லை. இந்த விடயத்தில் இலங்கை தொடர்பான ராஜீவ் காந்தியின் கொள்கை, அவருக்கு முன்பு அதிகாரத்தில் இருந்த அவரது தாயார் இந்திரா காந்தி காலத்திலிருந்த கொள்கையின் தொடர்ச்சி என்றே சொல்ல வேண்டும். உள்ள ஒரேயொரு வேறுபாடு என்னவென்றால், இந்திரா காந்திக்கும், ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கும் இடையில் தனிப்பட்ட கசப்புகள் இருந்தன என்பது தான். ராஜீவ் காந்தி கூட, அண்மையில் இலங்கை அரசாங்கத்தின் நம்பகத் தன்மை அற்ற போக்குக் குறித்துக் குற்றம் சாட்டியிருந்தார். இலங்கைக்கு இன்னொரு ஜனாதிபதியும், இந்தியாவிற்கு இன்னொரு பிரதம மந்திரியும் வரும் சந்தர்ப்பத்தில் இந்தச் சிக்கலுக்குள்ளிலிருந்து விடுபடுவதற்கான வாய்ப்பு ஏற்படுமா?

இரண்டு அரசுகளதும் தலைவர்கள் அந்தந்த நாட்டின் உள்ளக நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க வேண்டியவர்கள். இந்தியப் பிரதம மந்திரி தமிழ் நாட்டிலுள்ள கோடிக் கணக்கான தமிழ் மக்களது உணர்வலைகளை - இவர்கள் இந்தியச் சனத் தொகையில் 16 சத வீதத்தினர் - கவனத்தில் எடுத்தாக கூட, புதுடில்லிக்குப் பாதுகாப்பு என்ற கோணத்தில் இருந்து இவ்விடயத்தை அணுகுவதும் தவிர்க்க முடியாது. இலங்கை இன்று ஒரு பெரு வல்லரசான அமெரிக்காவுடனும், அதன் ஏவலாளிகளுடனும் சேர்ந்து செயற்பட்டு வருகிறது. இலங்கை ஜனாதிபதியும், அவரது பங்குக்குத் தமிழ் ஆயுதக் கிளர்ச்சிப் பிரச்சினை தீரும் வரை பாராளுமன்றத் தேர்தல்களை நடாத்தப் போவதில்லை என்று கூறிப் பாராளுமன்ற நடைமுறையைத் தடம் புரளச் செய்து விட்டிருக்கிறார். ஆனால், இந்தச் செயற்பாட்டில், இலங்கை வெற்றி பெறுவதற்கு முடிவற்ற நீண்ட காலம் தேவைப்படும். அதேவேளை, ஒரு இடதுசாரி அணி அல்லது இடதுசாரிச் சார்பு அரசாங்கம் ஒன்று வந்து, இலங்கையைப் பழையபடி கூட்டுச்சேரா அமைப்பின் அணிக்குள் கொண்டு வரக் கூடுமாறும், அது கூட இலங்கையின் தேசிய ஒருமைப்பாட்டுக்கு இந்தியாவை ஒரு அச்சுறுத்தலாகவே பார்க்கும்.

இந்தியாவின் தலைவர்கள் அதைத் தடுப்பதற்குச் சரியான நடவடிக்கையில் ஈடுபடாவிட்டால் இந்தியா உடைவுறும் ஒரு சாத்தியமும் நிலவுகிறது. பாகிஸ்தானும், சீனாவும் "பால்க்கன் திட்டம் - 1947"இன் மீதான வேறுபாடு காரணமாக இந்தியாவின் இத்தகைய ஒரு சிதைவுக்காகத் தம்மாலான சகல ஊக்குவிப்புகளையும் செய்யத் தயாராக உள்ளன. பால்க்கன் மயமாகும் இந்தியா, குறுகிய காலத்திற்காவது, சோவியத்தின் செல்வாக்குக்குட்பட்ட நாடாகும் ஒரு நிலைக்குப் போகக் கூடும். அப்போதும் கூட,

இந்தியா தெற்காசியப் பிராந்தியத்தின் ஒரு பெரிய வல்லரசு என்ற நிலையிலிருந்து கீழிறங்குவது தவிர்க்க முடியாமலாகி விடும். அது இப் பிராந்தியத்தினதும், அதன் மூலம் இவ் உலகினதும் உறுதிப்பாட்டுக்கு அச்சுறுத்தலான பெரும் பின் விளைவுகளைக் கொண்டு வந்து சேர்க்கும்.



இந்திரா காந்தி

இந்தியா எவ்வாறு இப்படியான ஒரு அச்சுறுத்தும் அழிவிலிருந்து விடுபட முடியும் ? கடந்த காலங்களில் இதற்குப் பல முன்னுதாரணங்கள் உள்ளன. அத்துடன் சுயாதிபத்தியமுடைய ஒரு நாட்டிற்கு, அது தனது தேசிய நலன்களைப் பாதுகாப்பதன் அடிப்படையில் செயற்படுவதற்கு எதிராகத் தடைகளைப் போடும் முயற்சிகளில் கடந்த காலங்களில் ஐ. நா. ஸ்தாபனத்தினால் வெற்றி பெற முடியவுமில்லை. இந்தியாவுக்குள்ள ஒரேயொரு மாற்று என்னவென்றால், அதனுடைய பிராந்திய ஆதிக்கத்தைச் சிதைக்கும் விதத்தில் செயற்படக் கூடிய, சூழவுள்ள நாடுகளால் தான் சூழப்படும் முன்பதாக, தான் வேகமாகச் செயற்படுவது மட்டும் தான். இது இலங்கையின் தமிழ்ப் பகுதியை இந்திய அரசியல் ஒழுங்கமைப்புக்குக் கீழ் கொண்டு வரக் கூடிய ஒரு ஒழுங்கமைப்பை உருவாக்குவதில் கொண்டு போய்ச் சேர்க்கக் கூடும். இது கீழுள்ள பல்வேறு வடிவங்களில் ஒன்றை எடுக்கக் கூடும்.

> ‘ என்னைப் பொறுத்தளவில் இந்த உடன்படிக்கை ஒரு தற்காலிக இடைவெளியை மட்டுமே தர முடியும் என்று கருதுகிறேன். ஆகவே, ஒரு நிரந்தரத் தீர்வுக்கோ அல்லது நிரந்தர அமைதியை நோக்கிய தீர்வைக் காண்பதற்கான ஒரு நேர்மையான படியாகவோ இது அமையும் சாத்தியம் இருப்பதாகத் தோன்றவில்லை. ’

01. தமிழ்ப் பகுதியை நேரடியாக இந்தியாவின் ஒரு யூனியன் பிரதேசமாக இணைத்தல் - (தமிழர்கள் அவர்களது உயர் கல்வி மற்றும், அரசியல் விழிப்புணர்வு காரணமாக, தமது தனித்துவத் தமிழ் நிலையை அங்கீகரிக்கக் கூடிய ஒரு வரண்முறையான இணைப்பைக் கோரக் கூடுமாயினும்)

02. தமிழ் இலங்கையை, இந்தியச் சமஷ்டியின் ஒரு பகுதியாக ஆக்குதல்.

03. தமிழ் இலங்கைக்கு, இந்திய சமஷ்டியில் காஷ்மீருக்கு அடுத்ததாக விசேட தகமை பெறல். அல்லது

04. ஒரு தனித் தமிழீழ அரசு - அது ஒரு சுயாதிபத்தியத் தொடர்பைப் புது டில்லியுடன் கொண்டிருக்கும். - ஒட்டோவாவிடமிருந்து, கியூபெக்கைக் கேட்கும் கியூபெக்கியர்களது கோரிக்கை போல.

ஜே. ஆர். ஜெவர்த்தன ஏற்கெனவே இத்தகைய போக்குகளை எதிர்பார்த்திருந்தார். இதனால் தான் அவர் தனது நாடு பிளவுறலாம் என்றும், அதனால், உருவாகும் எல்லைப் பிரதேசப் புறங்களைப் பாதுகாப்பதில் ஐ. நா. படையினர் ஈடுபடுத்தப்படலாம் என்றும் அறிவித்திருந்தார். எவ்வாறாயினும், ஏற்கெனவே குறிப்பிட்டது போல, ஜனாதிபதியும், அவரது அமைச்சர் காமினி திசநாயக்கவும், " இந்தியா இலங்கையை ஆக்கிரமிக்குமானால், இங்கே ஒரு தமிழர் கூட உயிருடன் இருக்க மாட்டார்கள் " என்று கூறியிருந்தார்கள். (திசநாயக்க ' ஹீரோஷிமா போன்ற ஒரு குண்டு வீச்சு யாழ். குடாநாட்டில் நடத்தப்படும் ' என்று பகிரங்கமாகத் தெரிவித்திருந்தார்) இவை உண்மையில் ஒரு குறியீட்டு மிரட்டல் என்றாலும் கூட இவற்றை ஒருவர் இலேசாகப் புறக்கணித்து விடவும் முடியாது. பரவலாகச் சிங்களவர்களால், தமிழர்கள் கொல்லப்படுவது என்பது இரு புறமும் கூர்மையுள்ள ஒரு கத்தியைப் போன்றது. ஏனென்றால், இது தமிழ் நாட்டிலுள்ள கோடிக்கணக்கான தமிழர்களிடம் பழிவாங்கும் உணர்வை வளர்த்து விடக் கூடியது.

ஆகவே நடைமுறைச் சாத்தியப்பாடு மிகவும் அதிகமாக உள்ள தீர்வு சிங்களப் பிரதேசங்களில் உள்ள தமிழர்களை 1958 கலவரத்தின் போது செய்தது போலக் கொழும்பினூடாகத் தமிழ்ப் பகுதிகளை நோக்கி அனுப்பி வைப்பது தான். இதன் மூலம் சிங்களவர்கள் தமக்கு என்று ஒரு பிரதேசம், அடையாளம், பூகோள எல்லை அவர்களது மதம் என்பவற்றைக் கொண்டிருக்க முடியும். தமிழர்களும், சிங்கள பௌத்த அமைப்புக்குள் ஒரு வேண்டப்படாத மக்களாக இருத்தல் என்ற ஒரு நிலையில் இருந்து விடுபட்டுக் கொள்ள முடியும். அத்துடன், இந்தியாவும் தனது தென் பிராந்தியம், வெளிச் சக்திகளின் ஆபத்தினால் சூழப்படுவதிலிருந்து விடுபட்டிருத்தலை உறுதிப் படுத்திக் கொள்ள முடியும்.





தமிழ் இலங்கைக்கும் (தமிழீழம்), சிங்கள அரசாங்கத்திற்கும் இடையிலான கூட்டுறவு என்ற மாற்றீடு இலங்கையில் சிவில் யுத்தம் தொடங்கி அதன் கசப்பை அறுவடை செய்யும் நிலை ஏற்படுவதற்கு முன்பு இலங்கையில் இருந்தது. அப்போது இருந்த ஒரே சிவிலியன் கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணியால் மட்டுமே அத்தகைய ஒரு கூட்டு வாழ்வுக்குரிய நிலைமைகளைச் சிங்கள அரசாங்கத்துடன் பேசி ஒழுங்கு படுத்தியிருக்க முடியும். ஆனால், சிங்கள அரசாங்கம் 06வது திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்த தவறை இழைத்ததன் மூலமாகப் பிரிந்து போதலை அமைதியான வழியில் பிரச்சாரம் செய்யும் வாய்ப்பை இல்லாமலாக்கி விட்டதுடன், இந்த நடவடிக்கையூடாக ஜே. ஆர். அரசாங்கம் தமிழ் அரசியல் இயக்கத்தை, ஆயுதமேந்திய தமிழ்ப் போராளிகளிடம் கையளித்தது. தமிழ்ப் போராளிகளோ, இராணுவத்தின் அத்துமீறல் மற்றும் சிங்கள அரசியல் தலைவர்களது நடவடிக்கைகளது சலிப்பூட்டும் வரலாற்றுப் போக்குகள் காரணமாக அவர்களது எந்த ஒப்புதல்களையும் நம்பத் தயாராக இல்லாதுள்ளனர். 1977 - 1983 காலப் பகுதியில் ஒரு இராணுவத் தாக்குதல் நடவடிக்கையை, பாராளுமன்றத்திலிருந்து த. வி. கூவை விரட்டிய கையோடு நடாத்த ஜே.



ஆர். அரசாங்கத்தின் தீவிரவாதப் பிரிவினர் திட்டமிட்டிருந்தனர். 1982 இல் ஜே. ஆரிடம் இப்படியான த. வி. கூவைத் தடை செய்கின்ற ஒரு பாதையை அவர் தெரிவு செய்யப் போகிறாரா என்று கேட்ட போது அவர் சொன்னார் :

" நான் இதைப்பற்றி நினைத்தேன். ஆயினும், அதன் விளைவுகள் பற்றி யோசிக்கிறேன். " என்று சொன்னார். எவ்வளவு உண்மை ! எவ்வளவு துயரம் ! அவரது ஊசலாட்டமும், த. வி. கூவை ஓரங்கட்டும் அவரது திட்டமும் அவர் தவிர்க்க விரும்பிய பின் விளைவுகளை ஏற்படுத்தியே விட்டன.

### முடிவுக் குறிப்பு

இந்த நூல் அச்சில் போய்க் கொண்டிருக்கும் போது ஜூலை 29 1987 அன்று ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கும், இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கும் இடையில் ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்தாகியுள்ளது. அதன் சரத்துக்கள், தமிழ் பேசும் மக்கள் வடக்கு - கிழக்கின் பாரம்பரியக் குடிமக்கள் என்பதை அங்கீகரிக்கப்படுவதுடன், மாகாண அரசுகளுக்கு அதிகாரங்களைப் பகிர்வதையும் (இரண்டு தமிழ் மாகாணங்களும் இணைக்கப்பட்டால், ஓராண்டு காலத்திற்குள் கிழக்கு மாகாணத்து மக்கள் - அங்கு சிங்களவர்களும், முஸ்லிம்களும் பெரும்பான்மையைக் கொண்டிருப்பர் - அந்த இணைப்பு தொடர்வதா அல்லது தனியான மாகாண சபையாக இயங்குவதா என்பதை ஒரு கருத்துக் கணிப்பு மூலம் தீர்மானிப்பர்) தமிழும், ஆங்கிலமும் உத்தியோகபூர்வ மொழிகளாக ஏற்றுக் கொள்ளப்படுவதையும் கொண்டிருக்கின்றன. ஜனாதிபதி ஜெயவர்த்தன, தான் இந்தக் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பில் வெற்றி பெறுவேன் என்று உறுதி தெரிவித்திருக்கிறார்.

அதிகாரங்கள் பகிரப்படுவது தொடர்பான திட்டம் இன்னமும் தெளிவுபடுத்தப்படல் வேண்டும். ஆனால், அதன் இன்றைய வடிவத்தைப் பார்க்கையில் கொழும்பிலுள்ள அரசாங்கமே இது நடைமுறைப்படுத்தல் தொடர்பான மேற்பார்வையைச் செய்யும் என்பதால், இந்த ஒப்பந்தம் குறித்துத் திருப்திப் பட முடியவில்லை. இந்திய அரசாங்கத்தின் 1919ம் ஆண்டுச் சட்டத்தின் கீழ் நடைமுறையிலுள்ள அமைப்பில் சில மேலதிக சேர்க்கைகளைச் சேர்த்துச் செழுமையூட்டுவதானால் அது ஏற்றுக் கொள்ளப்படலாம்.

எவ்வாறாயினும், சிங்கள மனம் இந்த மட்டுப்படுத்தப்பட்ட சட்டகத்தைக் கூட ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. அத்துடன் மிக முக்கியமான பிரச்சினையான அரசாங்க சேவை உத்தியோகங்கள், பல்கலைக்கழகக் கல்வி என்பன பற்றிய பிரச்சனைகள் தீர்க்கப்படாமலே உள்ளன. என்னைப் பொறுத்தளவில் இந்த உடன்படிக்கை ஒரு தற்காலிக இடைவெளியை மட்டுமே தர முடியும் என்று கருதுகிறேன். ஆகவே, ஒரு நிரந்தரத் தீர்வாகவோ அல்லது நிரந்தர அமைதியை நோக்கிய தீர்வைக் காண்பதற்கான ஒரு நேர்மையான படியாகவோ இது அமையும் சாத்தியம் இருப்பதாகத் தோன்றவில்லை. நான் எனது நூலில், இரண்டு அரசுகள் சம்பந்தமாகத் தெரிவித்திருப்பவை - குறிப்பாக வரலாற்றுக் காலகட்டத்துடன் சம்பந்தப்பட்டு யோசிக்கையில் இன்னமும் பொருத்தமானவையாகவே உள்ளன !

# சிங்கள மொழியிலிருந்து தமிழுக்கு வந்துள்ள சில நூல்கள்

### – அறிமுகக் குறிப்புகள்

பல்லின மக்கள் கூட்டத்தைக் கொண்ட, பல மொழிகளைப் பேசும் மக்கள் குழுமங்களைக் கொண்ட ஒரு நாட்டில் மொழிகள் அவர்களுக்கிடையே, சிறந்த தொடர்பாடல் சாதனமாக செயற்படுகின்றன. ஒருவர் மற்றவரின் கருத்தைப் புரிந்து கொள்ளவும், ஒரு இனத்தின் கலை, கலாசாரம், பண்பாடு, பாரம்பரியம், விழுமியங்கள் வரலாற்றுச் சிறப்புக்கள் ஆகியவற்றை அறிந்து கொள்ளவும் மொழிகளே உதவுகின்றன. இவற்றுக்கும் மேலாக உணர்வு பூர்வமாக ஒருவர் மனதை மற்றவர் மனதோடு இணைக்கும் பாசக் கயிறாகவும் மொழி செயற்படுகிறது.

ஒரு நாட்டில் வாழும் ஓர் மொழி பேசும் இனம் மற்ற இனத்தின் மொழியின் வாழ்வுக்கும், வளத்துக்கும், வளர்ச்சிக்கும் கைகொடுத்து உதவ வேண்டும். பரஸ்பரம் ஒன்றை ஒன்று கைதூக்கி விடுவதன் மூலம் இரு மொழிகளும் சிறப்புற்று வளர்ச்சியுற்று வளம் பெற முடியும். ஒரு மொழியிலுள்ள இலக்கிய செல்வங்களை பிறமொழி யாரும் அறிந்து இன்பமும், பயனும் பெறச் செய்ய வேண்டும். இதனையே பேரறிஞர் அண்ணாவும் "மாற்றான் வீட்டு மல்லிகையும் மணக்கும்" என்றார்.

இலங்கையிலே இரு மொழி பேசும் சகோரத இனங்களான தமிழரும், சிங்களவரும் மிக நீண்டகால தொடர்பினைக் கொண்டிருப்பினுங் கூட ஒரு மொழியிலுள்ள இலக்கிய சிறப்புக்களையும், சமூக அறிவியல் உண்மைகளையும் மற்ற இனத்தவர் தம் மொழிமூலம் கற்று அறிந்துகொள்ளக் கூடிய வாய்ப்பு மிகக் குறைவாக இருந்து வருவது உண்மையில் வேதனைக்குரிய விடயமே. ஆயிரம் மைல்களுக்கப்பாலுள்ள அன்னிய மொழியான ஆங்கிலத்திலுள்ளவற்றை அறிந்து பெருமை கொள்ளும் இவ்விருவினத்தினரும் அருகிலேயேயுள்ள சகோரத மொழியின் சிறப்புக்களை அறியாதவர்களாக இருப்பது வெட்கக்கேடான விசயமாகும்.

இலங்கையில் இலக்கியத்துறையைப் பொறுத்த வரையில் சிங்களத்திலிருந்து தமிழுக்கும், தமிழிலிருந்து சிங்களத்திற்கும் சிறுகதைகள், கவிதைகள் போன்றவற்றை சில அன்பர்கள் காலத்திற்குக் காலம் மொழி மாற்றம் செய்து வருகின்றனர். ஆனால், சமூக அறிவியல் துறையில் இந்த செயற்பாடு அருகியே காணப்படுகிறது. ஒரு காலத்தில் இலங்கையில் பல்கலைக்கழகக் கல்வியில் பேராசிரியராக இருந்த முத்துலிங்கம் அவர்கள் கல்வி உளவியல் புள்ளிவிபரவியல் போன்ற நூல்களை மிகவும் சிரமப்பட்டுச் சிங்களத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டார். சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கையில் அவர் மேற்கொண்ட இந்த அரிய பணிக்காகக் கல்வித்துறை சார்ந்த சிங்கள அன்பர்கள் அவரை இன்னும் மறவாது இருக்கின்றனர். இன்றும் கூடச் சிங்கள மொழி மூலம் கற்கும் கல்வியியல் துறைசார்ந்த சிங்கள மாணவர்கள் அந்நூலைத் தேடி வாசிப்பதை அறிய முடிகிறது. தமது இந்த நூல்களைப் பேராசிரியர் முத்துலிங்கம் அவர்கள் இலவசக் கல்வியின் தந்தை சீ. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கர அவர்களுக்குச் சமர்ப்பணம் செய்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

கல்வியியல் நூல்களைப் பொறுத்த வரையில் தமிழில் மிகக் குறைவு. ஆசிரியர்கள் தாம் பெறுகின்ற பயிற்சிக்கு அப்பால் சுயமாகக் கல்வியியலைக் கற்க வேண்டிய விடயங்கள் அதிகமிருக்கின்றன. ஏனெனில், கல்வியியல் சிந்தனைகள் காலத்திற்குக் காலம் மாறிய வண்ணமிருக்கின்றன. கல்வியியல் சம்பந்தமான ஏராளமான ஆராய்ச்சி சஞ்சிகைகளும், நூல்களும் வெளிவந்த வண்ணம் இருப்பினும் இவை யாவும் ஆங்கில மொழியிலேயே வருகின்றன. சிங்கள மொழியைப் பொறுத்தவரையில் அண்மைக் காலங்களில் கல்வியியல் சம்பந்தமான ஏராளமான நூல்கள், வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்க முன்னேற்றமாகும். தமிழில் கல்வியியல் நூல்கள் இல்லாத குறையைப் பேராசிரியர் சந்திரசேகரன் ஆவர்களால் எழுதி, அண்மைக் காலங்களில் வெளிவந்துள்ள 10 நூல்கள், தமிழ்க் கல்வி உலகிற்கு கைகொடுத்து உதவுவனவாக உள்ளமை வரவேற்கத்தக்கதாகும்.

இன்று எல்லாத் துறைகளிலும் பரீட்சைகள் மூலமே தெரிவுகள் நடைபெறுகின்றன. அதிபர்கள், ஆசிரியர்கள், கல்வி அதிகாரிகள் ஆகியோருக்கான பரீட்சைகளுக்கும் கல்வியியல் சம்பந்தமான அறிவு தேவை. அவர்கள் சுயமாகத் தேடிப்படிக்க ஏராளமான நூல்கள் தேவைப்படுகின்றன. இந்தத் தேவைகளை நிறைவு செய்யக் கூடிய முறையில் அதிகமான நூல்களைத் தமிழுலகம் எதிர்நோக்கி நிற்கிறது. இச் சந்தர்ப்பத்தில் எமது தமிழ்க் கல்விமான்கள் மட்டுமல்லாது சிங்கள அறிஞர்கள் பலரும், பல நூல்களை இத் துறையில் வெளியிட்டுள்ளனர். அவற்றுள் சிலவற்றைச் சில சிங்கள அறிஞர்கள் தமது சொந்த முயற்சியாலும், செலவிலும் தமிழாக்கம் செய்து தமிழுலகம் நன்மை பெற அரும் பணியாற்றியுள்ளனர். அந்த வகையில் அண்மைக் காலங்களில் வெளிவந்துள்ள சில நூல்கள் இங்கே அறிமுகம் செய்யப்படுகின்றன.

#### பெற்றோர்களுக்கு

கலாநிதி குடலிகம அவர்களால் 12 அத்தியாயங்களில் பிள்ளைகளை நல்ல பிள்ளைகளாக வளர்த்து, நாட்டுக்கு எவ்வாறு நல்ல பிரஜைகளைப் பெற்றோர் அளிக்க முடியும் என்பதை மிக அருமையான முறையிலே விளக்கப்பட்டுள்ளது. நூலாசிரியர் ஓர் தாய் என்ற வகையிலே குழந்தைகளின் குணாதிசயங்களையும், அவர்களை எவ்வாறு வளர்க்க வேண்டும் என்பதையும், சமூகத்தில் காணப்படும் தவறான முறைகளையும் சுட்டிக் காட்டிச் சரியான வழிகாட்டுகிறார். அதேவேளை ஆசிரியர் ஓர் கல்வியியல் பேராசிரியர் என்ற வகையிலே குழந்தைகளின் வளர்ச்சிப் படிகளில் காணப்படும் உடல், உள, ஆற்றல், திறன், மனப்பாங்குகள் பற்றியெல்லாம் தாம் அறிந்தவற்றையும், ஆய்வுபடுத்தியவற்றையும் கொண்டு பிள்ளைகளை எவ்வாறு நல்வழிப்படுத்தியவற்றையும் கொண்டு பிள்ளைகளை எவ்வாறு நல்வழிப்படுத்த முடியும் என்ற முறைகளையும் பெற்றோருக்கு எடுத்துக்காட்டியுள்ளார். பிள்ளைகளின் ஒழுக்கவியல் சார்ந்த விடயங்கள், சுகாதாரப் பழக்க வழக்கங்கள், பிள்ளை வளர்ப்பில் நவீன சிந்தனைகள், பிள்ளைகள் பற்றிய சரியான கருத்துக்கள் ஆகியன இந்நூலில் இடம் பெற்றுள்ளன. பிள்ளை வளர்ப்புப் பற்றிய முறையான ஒரு வழிகாட்டல் நூல் இது எனலாம்.

#### பாடசாலைக்கூட்ட முகாமைத்துவம்

தேசிய கல்வி நிறுவகத்தின் கல்வி முகாமைத்துவத்துறைப் பணிப்பாளர் ஈ. எஸ். லியனகே அவர்கள் 03 பகுதிகளாகப் பிரித்துப் 10 அதிகாரங்களில் இந்நூலினை எழுதியுள்ளார். முதலாம் பகுதி கூட்ட முகாமைத்துவம் ஏன் அவசியம் என்பதையும், இரண்டாம் பகுதி கூட்ட முகாமைத்துவத்தின் நுட்பங்கள் பற்றியும், மூன்றாம் பகுதி கூட்ட முகாமைத்துவமும் பிணக்குத் தீர்வும் என்பது பற்றியும் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. கல்வி முகாமைத்துவம் இன்று ஒரு விஞ்ஞானமாக மாறிவரும் நிலையில், தமிழில் கல்வி முகாமைத்துவம் தொடர்பான நூல்களின் பற்றாக்குறை காரணமாகத் தமிழ் மொழி மூலம் கற்கும் ஆசிரியர்களும், பயிற்சி பெறுவோரும், பரீட்சைகளுக்குத் தோற்றுவோரும் இத்துறையில் ஈடுபாடுள்ள அனைவருக்கும் பயன் தரும் வகையிலே இம் மொழிபெயர்ப்பு நூல் அமைந்துள்ளது. இந் நூல் கல்வி முகாமைத்துவத்தில் ஈடுபட்டுள்ள, குறிப்பாக அதிபர்களுக்கு மிகவும் பிரயோசனமான நூல் என்பதில் சந்தேகமில்லை.

#### புதுவழி

ஒரு பாடசாலையின் முகாமைத்துவக் குழுவினரில் மிக முக்கியமானவர்களான அதிபர், பிரதி அதிபர், உப அதிபர், பகுதித் தலைவர்கள், பாட இணைப்பாளர்கள் ஆகியோர் அறிந்து வைத்திருக்க வேண்டிய அம்சங்களைக் கொண்டு பயன்பெறும் வகையிலே ஏழு அத்தியாயங்களைக் கொண்டதாக இந் நூல் அமைந்துள்ளது. ஒரு பாடசாலை முகாமைத்துவத்தில் இடம்பெறும் முக்கிய அம்சங்களான நிர்வாகக் கட்டமைப்பு, அபிவிருத்தித் திட்டங்கள், மேற்பார்வை, மதிப்பீடு, நிதி நிர்வாகம் ஆகியவையும், கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளும், இணைப் பாடவிதானச் செயற்பாடுகளும், அதிபர், ஆசிரியர், மாணவர், பெற்றோர் தொடர்புகள், ஆசிரியர், சேமநலன், அதிபர், ஆசிரியர் தொழில்சார் அபிவிருத்தி, பௌதீக வளங்களைச் சிறப்பான முறையிலே முகாமைத்துவம் செய்யும் முறைகள் என அதிபர்கள் அறிந்திருக்க வேண்டிய சகல அம்சங்களும் அடங்கிய அதிபர்களுக்கான கை நூல் போன்று அமைந்துள்ள பயனுள்ள நூல் இதுவாகும்.



#### பாடசாலை முகாமைத்துவம்

கல்வி, உயர் கல்வி அமைச்சில் பணிப்பாளராகக் கடமையாற்றும் பி.விஜேசிறி குணசேகர அவர்களால் எழுதி வெளியிடப்பட்டுள்ள மேற்படி நூல் பாடசாலை முகாமைத்துவம், நிர்வாகம், நிறுவனத் தகவல்களை உள்ளடக்கியதாக அதிபர், ஆசிரியர்களின், வினைத் திறன் மேம்பாட்டிற்கான கை நூலாக வெளிவந்துள்ளது. கல்வித்துறை சார்ந்த சகலருக்கும் ஒரு கைநூலாகப் பயன்படுத்தத் தக்கவகையிலே நூல் அமைந்துள்ளது. 16 அதிகாரங்களைக் கொண்டுள்ள இந்நூல் அதிபர்கள் அறிந்திருக்க வேண்டிய சட்ட ரீதியான தகவல்களை உள்ளடக்கியுள்ளது சிறப்பான அம்சமாகும். அதிபர், ஆசிரியர்களின் உரிமைகள், சலுகைகள், கடமைகள் பற்றியும், இந்நூல் எடுத்துக் கூறுகிறது. ஒரு பாடசாலையின் முகாமையாளர் என்றவகையிலே ஒரு அதிபர் அறிந்திருக்க வேண்டிய தாபனக் கோவை விதிகள், அமைச்சு, திணைக்களச் சுற்று நிருபங்கள், ஆகிய பலவற்றையும் கற்றறிய முடியாதவர்கள் சுருக்கமான முறையிலே அவற்றை இந் நூல் வாயிலாக அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது குறிப்பிடத்தக்கது.

#### ஆசிரியர் சேவையும்; ஆசிரியர் வாண்மையும்

தேசிய கல்வி நிறுவகத்தில் பிரதம செயற்றிட்ட அலுவலராகக் கடமையாற்றும் நூலாசிரியர் ஜயசேன புத்பிட்டிய கல்வித் துறையில் மட்டுமல்ல, சிங்கள இலக்கியத் துறையிலும், ஏராளமான நூல்களை எழுதிப் புகழ் பெற்றவர். இவரது பல இலக்கியப் படைப்புகள் அரச விருதுகளை வென்றெடுத்துள்ளன. "எழுத்தாளர் சிரோன்மணி" எனும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டவர். மேற்படி நூல் ஒன்பது அத்தியாயங்களைக் கொண்டது. இந் நூலில் ஆசிரியர்களின் பண்புகள், கடமைகள், பொறுப்புகள், வாண்மை விருத்திகள் பற்றியும், கல்வியின் குறிக்கோள்கள், கல்வியில் உளவியல் அடிப்படைகள், கலைத் திட்டம், கல்விச் செயற்றிட்டங்கள், பாடசாலையில் கல்விப் பிரயோகங்கள் போன்ற பல்வேறு கருத்துக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. கல்வியியல், மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், கல்வி அலுவலர்கள் அனைவரினதும் கல்வியியல் அறிவுத் தேர்ச்சிக்குப் பயனுள்ள முறையில் இந் நூல் ஆக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

#### பாடசாலைகளில் முரண்பாடுகளை முகாமைத்துவம் செய்தல்

இந் நூலாசிரியரான ஏ. எஸ். பாலசூரிய அவர்கள் தேசியக் கல்வி நிறுவனக் கல்வி முகாமைத்துவ அபிவிருத்தித் துறையைச் சேர்ந்த செயற்றிட்ட அதிகாரியாவார். ஆசிரியராக, அதிபராக நீண்ட கால அனுபவமுடையவர். மேலைத்தேய, கீழைத்தேச தத்துவங்கள், சமயங்கள் பற்றிய கற்கையிலீடுபட்டவர்.

பாடசாலை மட்டத்திலான முரண்பாடுகளைக் கட்டுப்படுத்திக் கையாள்வதற்கான தெளிவான வழிகாட்டல் முறை இதுவரை காலமும் இல்லாதிருந்தது. இந் நிலையில் இத் துறையில் பயிற்சி பெற்று ஆய்வுகள் மேற்கொண்டு, அனுபவங்களூடாகச் சிங்கள மொழியில் இவர் எழுதிய இந் நூல் தமிழில் இப்பொழுது வெளிவந்திருக்கிறது. பொதுவாகத் தமிழ் வாசகர்களுக்குப் பரிச்சயமற்ற புதியதொரு பாடப் பிரிவு தொடர்பான புதிய பல விடயங்கள் தெளிவாகவும், எளிய மொழி நடையிலும் கூறப்பட்டுள்ளது. பாடசாலைகளில் தோன்றும் முரண்பாடுகளின் தன்மை, அவற்றைத் தீர்த்து வைப்பதற்காக அதிபர்கள் பெற்றிருக்க வேண்டிய திறன்கள், அவர்கள் அறிந்து வைத்திருக்க வேண்டிய நுட்ப முறைகள் ஆகியவை அடங்கியிருப்பதால் அதிபர்கள், தமது முகாமைத்துவத்திற்கு ஒரு துணையாக வைத்திருக்க வேண்டிய அரிய நூல் இது என்பதில் சந்தேகமில்லை.

#### பிள்ளைகளுக்குச் சமாதானத்தைக் கற்பித்தல்

தற்போது தேசியக் கல்வி நிறுவகத்தில், கல்வி முகாமைத்துவம் தொடர்பான ஆலோசகராகக் கடமையாற்றும் இந் நூலாசிரியரான ஏ. எல். பாலசூரிய ஏற்கெனவே பல நூல்களை எழுதியுள்ளார். இந் நூல் உயர் இடை நிலை வகுப்புகளுக்கான ஓர் மாதிரிப் பாடத் திட்டமாக அமைக்கப்பட்டுள்ளது. அன்போடு வாழ்தல், நல்ல பக்கத்தை நோக்குதல், விலங்குகள் மீது கருணை காட்டுதல், இம்சையின் தன்மையை விளங்கிக் கொள்தல், இம்சையைத் தவிர்த்தல், பிணக்குகளைப் பரஸ்பர ஒத்துழைப்பு மூலம் தீர்த்துக் கொள்ளுதல், சமூகத்தை மாற்றியமைத்தலில் அஹிம்சை வழிச் செயன்முறைகளைக் கைக்கொள்ளல், சமாதானம் நிறைந்த உலகைக் கட்டி எழுப்புதல் ஆகிய எட்டுப் பிரதான விடயங்களையும் பல சிறு தலைப்புகளையும் கொண்டு அமைந்துள்ளது. பிணக்குகளைத் தீர்த்தல் என்னும் எண்ணக் கரு தொடர்பான நூல்கள் ஆங்கில மொழியில் ஏராளம் வெளிவந்துள்ள போதும் தமிழில் வெளிவந்துள்ள முதல் நூல் எனலாம்.

#### சமாதானக் கல்வி

பிள்ளைகளுக்குச் சமாதானத்தைக் கற்பிக்கும் பரீட்சார்த்த முயற்சிகளிலும், கற்கைகளிலும் ஈடுபட்டுள்ள ஏ. எஸ். பாலசூரிய அவர்கள் ஏற்கெனவே இது தொடர்பான பல நூல்களையும் எழுதியுள்ளார். பிள்ளைகள் சமாதானமான நபர்களாக வளர்ச்சி பெற அவசியமான அடிப்படை அறிவு, மனப்பாங்குகள், திறன்கள், ஆகியவற்றை வழங்கும் சிறந்த கற்றற் செயற்பாடுகள், ஆசிரியர்களுக்கான ஆலோசனைகள் பலவும் நூலில் இடம்பெற்றுள்ளன. ஒரு புறத்தில் சிறார்களின் ஆளுமையை விருத்தி செய்யும் பாட நெறியாகவும், மறுபுறத்தில் வகுப்பு முகாமைத்துவ வழிகாட்டியாகவும் இந் நூல் விளங்குகிறது. மாணவனை ஒரு சமாதானப் பிரஜையாக விருத்தி செய்வதற்குத் தேவையான ஆளுமைப் பண்புகள், மற்றும் ஆற்றல்களை அடைந்து கொள்வதற்குத் தேவையான எண்ணக் கருக்கள், விடயங்கள், செயற்பாடுகள் என்ற படிமுறையாக அமைந்துள்ள இந் நூல் அதிபர், ஆசிரியர்களுக்கு மிகவும் பயனுடைய நூல் என்பதில் சந்தேகமில்லை.

#### பிள்ளைகளின் உரிமைகள் பற்றிய சட்டங்கள்

இந் நூலாசிரியர் சமரசிங்க குணசேகர அவர்கள், ஆசிரியராகவும், கல்வி அதிகாரியாகவும், கல்வி முகாமைத்துவ ஆலோசகராகவும் பணியாற்றிக் கல்வித் துறையில் அவர் பெற்றுக் கொண்ட அனுபவங்களுக்கூடாகவும், சட்டப் படிப்பின் மூலம் பெற்றுக் கொண்ட சட்ட அறிவுக்கூடாகவும், இந் நூலினைச் சிறந்த வகையிலே ஆக்கியுள்ளார். இலங்கையில் இதுவரை வெளியிடப்பட்டுள்ள பிள்ளைகள் உரிமைகள் பற்றிய தகவல்கள் யாவற்றையும் தொகுத்தளித்துள்ளார். அதிபர்கள், ஆசிரியர்கள் தெரிந்து வைத்திருக்க வேண்டிய ஏராளமான விதிமுறைகளை உள்ளடக்கிய இந் நூல் அவர்கள் தமது கைகளில் வைத்திருக்க வேண்டிய ஒரு அத்தியாவசியமான நூல் என்பதில் சந்தேகமில்லை.

**வே. சண்முகராஜா**

### ஒரு வாய் மட்டுமல்ல

# இரண்டு கைகளும், இரண்டு கால்களும்!

'முப்பது கோடி முகமுடையாள் - எனில் மொய்ம்புற ஒன்றுடையாள்'

என பாரதியார் வர்ணித்த பாரத மாதாவுக்கு இப்போது நூறுகோடி முகங்கள் என்றாகி விட்டது.

தாமஸ் ராபர்ட் மால்தூசு (1766-1834) என்ற பொருளாதார மேதையின் 'Malthusian Theory of Population' பொருளாதாரக் கல்வியின் அரிச்சுவடிப் பாடங்களில் ஒன்று. 1798 - இல் மக்கள் தொகை பற்றிய கட்டுரை ஒன்றை அவர் எழுதினார். மக்கள் தொகைக்கும் உணவு உற்பத்திக்குமிடையே உள்ள உறவுகள் பற்றிய கோட்பாடு ஆகும் அது.

மனிதர்களின் உணவு உற்பத்தித் திறனை விட மக்கள் தொகைப் பெருக்கத்தின் வேகம் மிக அதிகமானது. உணவு உற்பத்தி ஏறு வரிசையில் 1, 2, 3, 4 என அதிகமாகும் போது; மக்கள் தொகையே Geometric ratio-வில் (வடிவ கணிதம்) 2, 4, 8, 16 என அதிகரிக்கும் என்று கூறினார் அவர். அதாவது உணவு உற்பத்தி நான்கு மடங்கு அதிகரித்தால் மக்கள் தொகை பதினாறு மடங்கு அதிகரிக்கும். உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டு மக்கள் துயரப்படுவார்கள் என்பது அவர் கொள்கை. இதைத் தடுக்க திருமணங்களை ஒத்திப் போடுவது, ஒழுக்கலாறு ஒழுகுதல் மூலம் பிறப்பு விகிதத்தைக் குறைத்தல் என்ற தடுப்பு முறைகளையும் இயற்கையில் ஏற்படும் பஞ்சம், கொள்ளை நோய், யுத்தம் இவற்றால் சாவு விகிதம் அதிகமாகி மக்கள் தொகையில் சம நிலை எட்டலாம் என்பதும் இவர் கொள்கை.

மகாத்மா காந்தியின், இல்லறத்தில் துறவறம், டாக்டர் முத்துலட்சுமியின் பால்ய விவாக எதிர்ப்பு, பூமி பாரம் குறைப்பதற்கான பாரத யுத்தம் நடந்ததாக கிராமத்து மக்கள் கூறும் நாட்டார் வழக்கு இவையெல்லாம் சிந்திக்கத் தக்கனவாகும். கூடவே சஞ்சய் காந்தியின் கட்டாயக் கருத்தடைப் போரையும் டெல்லியில் நெருக்கடி நிலையில் நடந்த அக்கிரமங்களையும் நினைவு கூரலாம்.

மால்தூசின் இந்தக் கோட்பாட்டைப் பெரிய அளவில் மிருக உலகத்துக்குப் பொருத்திப் பார்த்துதான் டார்வின், 'வாழ்க்கைப் போராட்டத்தில் வலிமை உள்ளதுதான் வெல்லும்' என்ற கருத்தை உருவாக்கியதாக, தானே சொல்கிறார்.

மால்தூசுக்கு முற்பட்ட எல்லாப் பொருளாதார விதிகளும் மற்றவற்றில் மாற்றமில்லாத போது (other things being equal) என்ற (Rider) முன் நிபந்தனையுடன் தான் எழுதப்பட்டு வந்தன. இந்த முன் நிபந்தனை இப்போது வலுவிழந்து விட்டது.

ஆனால், உலகத்தில் ஒரு வாயோடும் வயிற்றோடும் பிறக்கும் ஒவ்வொரு மனிதனும் இரண்டு கைகளையும் சேர்த்தே கொண்டு வருகிறான் என்பதையும், அவன் இயற்கையோடு பிணைக்கப்பட்ட விலங்கு (பசு) அல்ல, இயற்கையோடு உறவாடி உற்பத்தி செய்யவும் கருவிகள் செய்யவும் உணவைச் சேகரித்து வைக்கவும் திறமை பெற்றவன் என்பதைக் கணக்கிலெடுக்கத் தவறி விட்டார் அவர்.

'வானத்திலிருக்கும் பறவைகளைப் பாருங்கள்; அவை விதைப்பதுமில்லை அறுப்பதுமில்லை' என்ற விவிலிய வாசகம் நினைவுக்கு வருகிறதா?

ஆனால் எறும்புகளும் பறவைகளும் எலிகளும் மழைக் காலத்துக்காகச் சேமிக்கின்றன. இவை வட்டிக்கு விடுவதாகவோ, நாடு பிடித்துக் காலனி ஆதிக்கம் உருவாக்குவதாகவோ, I.M.F. W.T.O. போன்ற அமைப்புகளை ஏற்படுத்தி நவ காலனியத்தை வளர்ப்பதாகவோ இதுவரை தகவல் இல்லை.

மனிதன் மட்டும் தனது சொந்த உழைப்பால் வருத்தப்பட்டு சம்பாதித்த சேமிப்பைக் கொண்டு சக மனிதனைச் சுரண்டுகிறான். If a capitalist can explit another man with his hard earned money, why not a decoit exploit another with his hard earned pistol? என்று ஒரு அறிஞர் கேட்டார். கத்தி மருத்துவரின் கையிலிருந்தால் அறுவை சிகிச்சையைச் செய்யும். கொள்ளையன் கையிலிருந்தால் கொலைத்தொழிலை மேற்கொள்ளும். கருவி ஒன்றுதான்; காரணம்தான் வேறு.

மால்தூசின் கோட்பாடு கிட்டத்தட்ட ஒரு நூற்றாண்டு காலம் பிரபலமாகக் கோலோச்சியது. பல அரசுகள் அவரது கொள்கையைப் பின்பற்றின. அவரது கொள்கைப்படி வறுமைக்கு ஏழை மக்களே பொறுப்பாளிகள். இன்றும் கூடப் பல கற்றுத் துறை போகிய அறிஞர்களும் இவ்வாறு நம்புகிறார்கள் தானே!

1834 இல் Poor Laws amendment என்ற சட்டங்கள் மூலம் ஏழைகளுக்கு எந்தச் சலுகையும் வழங்கக்கூடாது என்ற சட்டம் வந்தது போல் அதே கொள்கையைத் தானே இன்றைய மத்திய அரசு கடைப்பிடித்து எல்லா மானியங்களையும் வெட்டிக் குறைத்து அத்தியாவசியப் பண்டங்களின் விலையை ஏற்றி விட்டது.

மால்தூசு நினைத்த மாதிரி நடந்திருந்தால், பாரதி பாடிய 30 கோடி முகம் 60 கோடியாகி 60 கோடி 120 கோடியாகி 120 கோடி 240 கோடியாகியிருக்க வேண்டும்.

இவர் கவனிக்க மறுத்த மற்றொரு விஷயம் தொழில்நுட்பத்தில் ஏற்படும் வளர்ச்சியின் காரணமாக உற்பத்தி அதிகரிப்பின் அளவு கூடும் என்பது.

நம்மை விட இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பே நூறு கோடி மக்கள் தொகையைத் தாண்டி விட்ட உலகின் மிகப் பெரிய நாடான சீனா உற்பத்தியில் பல சாதனைகளைப் புரியவில்லையா? சீனாவில் குழந்தைப் பிறப்பு விகிதம் குறைந்து விட்டதால் குழந்தைகளுக்கு விளையாடத் தோழர்கள் இன்றி மனநோய் முற்றி வருவதாக சமீபத்திய செய்திகள் சொல்லுகிறதே!

மால்தூசின் கொள்கை அந்தக் காலத்திலேயே மறுக்கப்பட்டது. 'உழைக்கும் கைகளே உருவாக்கும் கைகளே உலகைப் புது முறையில் உண்டாக்கும் கைகளே' என்ற பாடலைப் போல, இரண்டு கைகளுடன் பிறக்கும் ஒற்றை வாய் உற்பத்தியைப் பெருக்குவதோடு உல்லாசமாகப் பாடவும் செய்யும். உடைத்து நொறுக்கிப் புரட்சிகர மாற்றங்களையும் ஏற்படுத்தும்.

ஒருவன் ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்தினால் நிலம் - தொழிலாளர் - முதலீடு - நிர்வாகம் என்ற நான்கு அங்கங்களையும் பயன்படுத்துகிறான். இதில் தொழிலாளரின் உழைப்பு மட்டும்தான் (ஓரளவு நிர்வாகமும்) போட்டதைப் பன்மடங்காக ஆக்குகிறது. மூலப்பொருளின் மேல் மிகை மதிப்பை ஊட்டுவது உழைப்பு ஒன்றுதான். மற்றவை தேயும் குறையும் வளராது -வளர்க்காது. இப்படிப்பட்ட உழைக்கும் கரங்களை வழங்கும் மனித சக்திதான் மகத்தான சக்தி. தொழில்நுட்ப வளர்ச்சியிலோ, மனித மூளைதான் மகத்தான பங்கு வகிக்கிறது.

- புதுவை ஞானம்

நன்றி : ஆறாம்திணை





# வெற்றி இயக்குநரின் கையில் தான் உள்ளது

-திலகவதி ஐ.பி.எஸ்

ஒரு படைப்பாளி, தன் கதையை மட்டும் சினிமா அல்லது டி.வி. சீரியல்காரர்களுக்குக் கொடுத்துவிட்டு நகர்ந்து கொள்வது நல்லதா? அல்லது அதன் திரைக்கதை வசனம் ஆகியவற்றிலும் பங்கேற்பது சரியா?

எல்லா விஷயங்களிலுமே உத்தமம், மத்திமம், அதமம் என்ற மூன்று உண்டு. ஒரு படைப்பாளி, தன் கதையைக் கொடுத்துவிட்டு நகர்ந்து விடாமல், அதன் திரைக்கதை, வசனம் பொறுப்புகளையும் ஏற்பது உத்தமம். அப்பொழுதுதான், தன் கதா பாத்திரங்கள் சிதைந்து போகாமலும், தன் கதையின் மையக் கரு பாதிக்கப்படாமலும் பார்த்துக் கொள்ள இயலும். அப்படிச் செய்ததனால்தான் ஜெயகாந்தனின் படைப்புகள் நல்ல படங்களாகவும் விளங்க முடிந்தது. ஆனால் என்னைப் போன்றவர்களுக்கு அதற்கெல்லாம் நேரமோ, அரசாங்க அனுமதியோ கிடைப்பது அரிது. இது ஒரு துரதிருஷ்டம்தான்.

வங்க மொழியிலும், அதைவிட அதிகமாக மலையாளத்திலும், நல்ல இலக்கியப் படைப்புகள் - அதாவது ஆழமான சிந்தனைத் தளத்தில் இயங்கும் படைப்புகள் அதிகம் சினிமாவாக எடுக்கப்படுகின்றன? தமிழில் அந் நிலைமை இல்லாமைக்கு என்ன காரணம்? - படைப்பாளியின் மேன்மையைப் புரிந்து கொள்ளாத சினிமாக் காரர்களா? தன் படைப்பின் மீதான மற்றவர்களின் ஆதிக்கத்தை அனுமதிக்க இயலாத படைப்பாளியின் உணர்வா? அல்லது படைப்பின் ஆழத்தையும் கலை நுட்பத்தையும் ஜீரணிக்க முடியாத ரசிகர்களா?

ரசிகர்களின் மீதான குற்றச்சாட்டை நான் முதலிலேயே நிராகரிக்கிறேன். நல்ல சினிமாக்களில் ஐம்பது விழுக்காடு வெற்றியும் ஐம்பது விழுக்காடு தோல்வியும் அடையும் என்பது தமிழுக்கு மட்டும் அல்ல, நீங்கள் சொல்கிற வங்கமொழி, மலையாள மொழிப் படங்களுக்கும்கூட பொருந்தும். உதாரணம்: ஹிந்தியில் மிகச் சிறந்த எழுத்தாளர் முன்ஷி பிரேம்சந்த். அவரது கதைதான் 'ஷட்ரஞ்சகி கிலாடி' ('The chess players') . அந்தக் கதையை, வர்த்தக மதிப்புமிக்க சஞ்சீவ் குமாரைக் கொண்டு சத்யஜித்ரே படமாக எடுத்தார். அந்தப் படம் கேரளாவில் 3 நாள் கூட ஓடவில்லை.

சத்யஜித்ரே இதை தன் வரலாற்றிலேயே குறிப்பிட்டுள்ளார். - முதன்முறை 'பதேர் பாஞ்சாலி'யை வெளியிட்டபோது அதைப் பார்க்க ஆள் இல்லை. அந்தப் படத்திற்கு நிதி கேட்டு NFDC போன்ற அமைப்புகளை அணுகிய போதும் அவருக்கு நிதி கிடைக்கவில்லை. கடைசியில், சாலைகளை அமைப்பதற்கான நிதி அமைப்பிடமிருந்துதான் அவருக்கு நிதி கிடைத்தது. காரணம், 'பதேர் பாஞ்சாலி' என்ற வார்த்தைக்கு 'சாலையோர பாட்டு' என்று அர்த்தம். எனவே, அது ஏதோ ரோடு போடுவது பற்றிய படம் என்று நினைத்து நிதி கொடுத்தார்கள் என்று வேடிக்கையாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஷேக்ஸ்பியரின் 'ரோமியோ அண்ட் ஜூலியட்' மூன்று முறையும், டால்ஸ்டாயின் 'அன்னா கரீனா'வும், 'வார் அன்ட் பீஸ்' -உம் இரண்டிரண்டு முறை எடுக்கப்பட்டிருக்கின்றன. ஒரு டைரக்டர் இயக்கியது நன்றாக ஓடியது. மற்றொன்று ஓடவில்லை. எனவே, ஒரு படைப்பை, ஓர் இயக்குநர் சினிமாவில் எப்படிக் கையாள்கிறார் என்பதைக் கொண்டு தான் வெற்றி தோல்விகள் அமையும் என்பது என் அபிப்ராயம். இதிலே தமிழ் மொழி, மலையாளம், வங்கம் போன்றவற்றுக்கிடையில் வித்தியாசம் இருப்பதாக நான் நினைக்கவில்லை !

''தமிழ்நாட்டு வாசகர்கள் மேலோட்டமானவர்கள். அவர்களுக்குப் பிரச்சினைகள் ஏதுமில்லை... எனவே இங்கு கலை இலக்கிய விஷயங்களும் ஜாலியாகத்தான் இருக்கும்" என்று ஒரு வாரப் பத்திரிகைப் பேட்டியில் பாலகுமாரன் சொல்லியுள்ளார். இதுபற்றி..?

இந்தக் கருத்தில் எனக்கு உடன்பாடில்லை. தமிழ் மக்கள் சந்திக்காத எந்தச் சோதனையையும் கேரள மக்கள் சந்தித்து விடவில்லை. 1947ஆம் ஆண்டில் நடந்த இந்தியப் பிரிவினையின்போது அதிகப்படியான பாதிப்புக்குள்ளானவர்கள் வங்காளிகளும். பஞ்சாபிகளும்தான். அதற்கு முன்னரும்கூட, பலவித படையெடுப்புகளால் அதிகம் பாதிக்கப்பட்டது பஞ்சாபியர்கள்தான். இதைக் கொண்டு, பஞ்சாபிய மொழிதான் நல்ல இலக்கியங்களையும், திரைப்படங்களையும் தரவல்லது என்று சொல்லிவிட முடியாது. பாலகுமாரன் சார் சொல்வது, பெருவணிகப் பத்திரிகைகளில் வரக்கூடிய கதைகள், நாவல்கள், இவற்றைப் படிக்கிற வாசகர்களுக்குப் பொருந்துவதாக இருக்கலாம். எனக்குத் தெரிந்த அளவில், தமிழ்நாடு முழுவதும் பரவியிருக்கக்கூடிய பல இளைஞர்களும், இளம் பெண்களும் நல்ல இலக்கிய தாகத்தோடு தரமான சிற்றிதழ்களை பல சிரமங்களுக்கு மத்தியில் நடத்தி வருகிறார்கள். தங்களின் ஒரு வேளைச் சாப்பாட்டைக் கூட தியாகம் செய்துவிட்டு அந்தச் சிற்றிதழ்களுக்காக சந்தா சேர்ப்பவர்கள் இருக்கிறார்கள். பிறமொழியின் நல்ல இலக்கியங்களைத் தமிழில் மொழி பெயர்த்துத் தருவதில் ஆர்வமுள்ளவர்களை எனக்குத் தெரியும். தமிழில் இன்றைக்கு ஆண்டொன்றுக்கு 2500 கதைகள் படைக்கப்படுவதாக வைத்துக்கொண்டால், அதில் 500 கதைகள் உலகத் தரம் வாய்ந்தவையாக இருக்கின்றன. இலக்கியச் சிந்தனை, ஜோதி விநாயகம், திருப்பூர் தமிழ்ச் சங்கம், திருப்பூர் தமிழ்ப் பேரவை, லில்லி தேவசிகாமணி பரிசு, ஸ்ரீராம் பரிசு, கலைமகள் பரிசு, அமுதசுரபி பரிசு போன்ற பல இலக்கிய அமைப்புகள் அப்படியான நல்ல எழுத்தாளர்களை இனம் கண்டு பாராட்டிக் கொண்டுதான் உள்ளன. எனவே, உலகத் தரத்துக்குச் சற்றும் தாழாத கதை, கவிதை, நாடகங்கள் தமிழிலும் வந்து கொண்டுதான் உள்ளன. அவற்றை வரவேற்கின்ற மிகத் தரமான வாசகர்களும் தமிழில் நிறையவே உண்டு.

சந்திப்பு : வித்தகன்

நன்றி : ஆறாம்திணை

# பிளக் & வைட் ரொபி ஆடுகளுடன் பார்த்தையாடுதல்

முகத்துக்கு கிட்டவாக வானமா, முகிலா என்று ஊகிக்க முடியாத ஊத்தை வெண்ணிறத்தில் பிரமாண்டமான ஒளிப் பரப்பொன்று கிட்ட வருவதும் பின் விலகிச் செல்வதுமாய் இருந்தது. பின் பால் வெள்ளை முகில்கள் காற்றில் தவழ்ந்து வந்தன. ஊத்தை வெண்பரப்பு எங்கோ தொலைவில் ஒளிந்து கொண்டது. திடீர் என்று தமக்குள் கச முச... கசமுச... என்று சர்சித்த வண்ணம் வேகமாய் வந்த எண்ணைப் பாண்டு கரு முகில்கல் வெண்முகிலுடன் கலந்தது. அடி வானில் இருந்து வந்த செம்மை எண்ணைப் பாண்டு கருமுகில் மீது படர்ந்தது.

எண்ணைப் பாண்டு முகில்களில் தீப்பற்றிக் கொண்டது. வானத்தில் இருந்து சிறிதும் பெரிதுமாய் தீக்கங்குகள் விழத் தொடங்கின. வீடுகள் மீதும், மரங்கள் மீதும் தீக்கங்குகள் வீழ்ந்து எரிந்தன. அவன் குரலெடுத்து கத்த முனைந்தான். தொண்டைக்குள்ளேயே அமிழ்ந்து போயிற்று அவன் குரல். அனலின் வெப்பத்தால் தொண்டை வரண்டு தாகமெடுத்தது. வெம்மை கூடக் கூட தொண்டை வரண்டு கயர் கட்டிக்கொண்டு மூச்சு விடச் சிரமம் தந்தது. கயர் கட்டிக் கொண்ட தொண்டை செருமத் தொடங்கியது. செருமல் இருமலாக மாறி நெஞ்சுக் கூடு வலிக்குமாறு இருமியது. இரும இரும கண்கள் கலங்கிப் போனது. கலங்கிய விழிகளுக்குள் இருள் சலனப்பட்டது. எழுந்து உட்கார்ந்தான். சுவரில் ஒளிக்கீற்று ஒன்று ஓடி அறுந்தது. அவன் வெளிச்சத்துக்காய் காத்திருந்தான். கடைக் கண்ணுக்குள் ஒளிப் புள்ளி ஒன்று அசைந்து உடைந்தது. போர்வையை இழுத்து கடைக்கண்ணைத் துடைத்தான். புளிக்சுப் போன வியர்வை நாற்றம் எரிச்சல் படுத்தியது. அடித்தொண்டைக்குள் வறட்சி நோவாக மாறி இருந்தது. எழுந்து இருளுக்குள் துளாவி நின்றான். செம்பின் களிம்பு வெடுக்குடன் தொண்டைக்குள் தண்ணி இறங்கத் தொடங்கியது. அவனுக்கு பரீட்சயமான பழைய துவாய் கதவில் இருள் போர்த்தி புதிய பரிமாணம் பெற்றுக் கிடக்கிறது. கீச்சிட்டு அலறும் இடப் பக்க கதவை திறக்க அஞ்சி நின்று பின் வலப் பக்க ஒற்றைக் கதவை ஓசை எழாது திறந்தான். மெல்லிய கீசல் ஒலியுடன் கதவு திறந்தது. விறாந்தையில் போர்வையின் உதறலும், பாயில் புரழ்வதும் கேட்டது. சிரத்தையற்ற சலன உருக்களில் சித்தப்பாவோ அண்ணனோ வந்து போனார்கள். வெளிர் இருளாகக் கிடந்த பாய்களின் இடைவெளி இருளில் கால் ஊன்றி அலங்கோலமான அசைவுகளுடன் வெளிக்கதவை ஓசைப்படத் திறந்து வெளியேறினான். தொண்டைக்குள் குளிர்ச்சி இருந்தது. ஆனால், தொண்டை வரண்டு தாகம் எடுப்பது போல் சினம் தந்தது. தாகத்துடன் சுமக்க முடியாத பாரத்துடன் எதுவோ மனதில் கனமாய் அழுத்துவதை உணர்ந்தான். மனதில் மூண்டு கிடக்கும் சுமை தன் சக்திக்கு அப்பாற்பட்டது என்பது போல் சஞ்சலப்படுத்துவதை உணர்ந்தான். அதிகம் கவலைப்பட்டு சோர்ந்து போனான். காலை மடித்து துடைக்குள் வைத்து படிக்கட்டில் கை ஊன்றி அமர்ந்தான்.

காலை ரம்மியமானது. குளிர் வாடை வீசி சுகம் தரும். அவன் விரல்கள் இயல்பாய் தலை கோதி மீண்டது. தென்னோலைகள் காற்றில் சலசலக்கும், புல்லிற்குள் சில்வண்டுகள் சிலம்பும். அவனை அறியாமலே பார்வை கற்குவியலுக்குள் போனது. மெல்லியதாய் ஆனால், வீரியமாய் துர்நாற்றம் அவன் நாசிக்குள் ஏறிக்கொண்டிருந்தது. அந்த கல் இடுக்கிற்குள், சம்பல் நிறத்தில் சிவப்பு மூஞ்சியுடன் மூஞ்சூறு எட்டிப் பார்த்து விட்டு உள்வாங்கிக் கொண்டது போல் இருந்தது. பார்வையை திருப்பிக் கொண்டான். தொண்டைக்குள் வரட்சியும் நோவும் கூடித்தான் இருந்தது.

காலை இதமற்று வரட்சியாய்க் கிடக்கிறது. மனதை அழுத்தும் சுமையின் வலிவு கணத்துக்கு கணம் கூடுகிறது. சுமை எதுவோ...? தேங்கிக் கிடக்கும் அலுவலக வேலைகளாக இருக்குமோ... சீய் அதுவாய் இருக்காது. இப்படி எத்தனையோ தரம் தேங்கிக் கிடந்து பின் முகில்கள் போகிற போக்கில் கரைந்து, புது உருவங்கொள்வது போல் அதன் போக்கில் கரைந்து புதுப்புது வடிவம் எடுக்கும்... அது சுமையே அல்ல. இப்படி இருக்குமோ..., அந்த கிறவல் வீதியில் அவனுக்கு முன்னே, கம்பியுடன் கம்பி உரசி..., பொறி காற்றில் விசுக்கென்று வந்து... தரையில் மோதி..., செம்புழுதி கிளப்பி..., சுருண்டு விழுந்த மின்சாரக் கம்பியாய் இருக்குமோ..., வேட்டையாடப்படும் விலங்கின் துர்மரணம் அதற்கு விடுதலை அழிக்குமோ அத்தகையதோ இத்தகைய மரணமும்..., எண்ணமும் தொடர்பற்று அறுகிறது....

இவற்றை எல்லாம் புறம் தள்ளிவிட்டு சுமை மனதில் கனதியாகக் கிடக்கிறது. நேற்று..., அதிகாலையிலேயே..., பாயில் புரண்டு கொண்டு கிடக்கும் போதுதான் அந்தச் செய்தி அவன் காதில் விழுந்தது.

"பீச்சில்..., சைக்கிள் மட்டும் தனியாக கிடக்கிறது..."

உணவு செரிக்காதவன் போல் ஆர்ப்பாட்டமின்றி புரண்ட இடத்திலேயே திரும்பத் திரும்ப புரழ்கிறது. கடலலை... தார்றோட்டை அண்டி புல்வெளியில் தனியாகக் கிடக்கிறது சைக்கிள். அந்த வெளியில் குழுமி நிற்கும் சிறு கும்பலுக்குள் தன்னை ஐக்கியப் படுத்திக் கொண்டு கும்பலுக்குள்ளால் எட்டிப்பார்த்தான். அந்த சைக்கிளிற்குள் மர்மம் புதைத்து கிடக்கிறது. நிறையப் புதிர் போடுகிறது. ஒவ்வொருவராய் விடுவிக்க முனைகிறார்கள். மலை இடுக்கின் வழியாக கீற்றாய் விழும் அதிகாலை சூரிய ஒளியில் கறள் கட்டிப் போன கம்பிகள் கூட அர்த்தத்துடன் மினுங்குவதாக அங்கிருப்பவர்களுக்குப்பட்டது. சாதாரண கறுப்பு நிற சைக்கிள் சீற். புதுசு மங்கிப்போன சைக்கிள். அதைத் தவிர அவனுக்கு அதில் மர்மம் எதுவும் பிடிபடவில்லை. ஆனால், அவனைச் சுற்றி மர்மத்தை விடுவித்துவிட ஒவ்வொருவரும் சைக்கிளை வெறித்து வெறித்துப் பார்க்கிறார்கள்.

"கடையைப் பூட்டிற்று போகேக்க பத்தரை இருக்கும்..."

"போகேக்க ஏதும் சொல்லிற்றுப் போனவனா...?

"ஒண்டும் சொல்லயில்ல வழமையா போறமாதிரித்தான் போனவன்..."

"வழமையா நேரத்தோட தானே பூட்டிற்றுப் போறவன்..."

"விடியக் குடுக்கிறதுக்கெண்டு சொல்லி டி.வி. ஒண்ட வைச்சு குடஞ்சு கொண்டு இருந்திற்று பத்தரைக்குத்தான் போனவன்"



"மசிரப் புடுங்கினான்..., காலம் கெட்டுக்கிடக்கெண்டு தெரியும் நேரத்தோட போக வேண்டியது தானே...."

இவனுக்கு அவனுடன் நெருக்கமான நட்பு உண்டு. சட்டென்று சிரிப்பான். பின்புறமாய் இடுப்பை வளைத்து தூக்கிச் சுற்றுவான். சட்டென்று வயிற்றில் குத்திவிட்டு சிரிப்பான். அகால வேளையில் நீச்சலடிக்கப் போய் மாண்டு போயிருக்கலாம். வாயில் நுரைதள்ள ஏதோ ஒரு முகாமுக்குள் பாதி சயனட் குப்பியுடன் கிடக்கலாம். உயிர் அணுக்கள் சிதைக்கப்பட்ட முனகலுடன் ஆஸ்பத்திரியில் கிடக்கலாம். எல்லோரையும் போல் அவனும் வாழ்ந்ததற்கான தடயம் எதுவுமில்லாமல் போவது போல் அவன் உடலும் தடயமற்றுப் போகலாம். இன்னும் செய்தி எதுவும் இல்லை.....

தரையில் மோதி ஒலி எழுப்பி பார்த்தடியின் ஓசையுடன் கதவு அலறித்திறந்தது. கறுத்து மெலிந்த உருவத்தின் மீது இருள் போர்த்தி அம்மா வெளியே வந்தாள். அம்மா அவனைத் தாண்டிப் போனாள். ஒட்டி உலர்ந்து போன ஒடிசலான தேகம். தொலைந்து போன எதையோ தொலைவில் தேடுவது போல் இடுப்பில் கை ஊன்றி அடி வளவை வெறித்து நின்றாள். இடுப்பில் கட்டி இருந்த துண்டை அவிழ்த்து உதறிக் கட்டினாள். வலக்கையை தூக்கி ரவிக்கைக்கு மேலால் கமக்கட்டை வரட்டு..., வரட்டென்று சொறிந்தாள். பின் தலையை சாய்ந்து துப்பினாள். எச்சிலோ... வெத்திலைச்சாறோ..., இருளில் துலக்கமின்றி மண்ணில் ஊறியது. வெத்திலை போட்டுப் போட்டு அவிந்து போன அம்மாவின் கடைவாய்கள் அவன் மனதில் சலனமாய் வெளுத்தது. ஆட்டுக்கொட்டிலை நோக்கி அம்மா போனாள். அவளது உலகம் ஆடுகளுடனானது. மெல்ல...., மெல்ல..., ஆட்டு மொச்சையின் மனம் நாசியில் ஊர்கிறது.

தொண்டைக்குள் நோவும் வரட்சியும் இன்னமும் இருந்தது. மனச்சுமையின் அலுப்பு இன்னமும் வடியாமல் கிடந்தது. இந்த கனவின் மிரட்டல் நீண்ட தெலைவில் இருந்து என்று சொல்ல முடியாத இடத்திலிருந்து அவனுடன் கூட வருகிறது.

அந்த காவலரனில் இருந்தவர்களின் முகத்தில் சற்றுபயம் கலந்த சுறுசுறுப்பு..., அவன் மூச்சுவிடும் வேகத்தை அதிகப்படுத்துகிறது... முகாமுக்குள் இருந்தும் சிலர் ஆயுதங்களுடன் காவலரணை நோக்கி ஓடி வந்தார்கள். அந்த பஸ்ஸில் வந்தவர்களில் இருந்து அவர்கள் அவனைத் தனிமைப்படுத்தி அழைத்துப் போனார்கள். அவன் நெஞ்சுக் கூட்டுக்குள் மூச்சு தடம் மாறித் திணறியது. அஞ்சல் அடையாள அட்டையில் இல்லாத பயங்கரத் தன்மையை தன் முகத்தில் வரைய முற்படும் அவர்கள் கண்களை அவன், பயப் பீதியால் வெளிறிப் போன கண்களால் பார்த்து நின்றான். அந்த பழுப்பு நிறக் காகிதத்தில் என்ன தான் கிடக்கிறது. கையை உயர்த்தி சுடலை மதிலுடன் அவனை குப்புற சாத்தினார்கள். அவன் கண்களுக்குள் இருள் சூழ்ந்து வெளுப்பதை உணர்ந்தான். அந்த பழுப்பு நிறக் காகிதம் பல வடிவங்களில் அவன் புத்தியைச் சுரண்டுகிறது எங்குமே அது தட்டுப்படவில்லை.

நோட்டிஸ்கள் அவன் வாசித்திருக்கிறான் தான். ஆனால், புத்தகத்துள் மடித்து வைக்கும் அளவுக்கு அவனுக்கு தைரியம் இருந்ததில்லை. அந்த பழுப்பு நிறக்காகிதம் மண்டைக்குள் சிறகு கட்டி அடித்து, வலிக்கச் செய்கிறது.. அவன் உடல் முழுவதும் அவர்கள் கைகள் ஊர்ந்தது... தடவியது.. தட்டியது.. அவர்கள் புத்தகப் பைக்குள் மிக மெதுவாக கை விட்டார்கள். ஒவ்வொரு புத்தகமாய் பக்கம் பக்கமாய் துருவித் துருவித் தேடினார்கள். பஸ் இன்னமும் காத்து நிற்கிறது. தான் அதில் ஏறிப்போய் விடுவேன் என்ற நம்பிக்கையும் இருந்தது. அவன் நினைவுச் சுருளின் ஒவ்வொரு படிவுகளிலும் பழுப்பு நிறம் முட்டி மோதி அலைந்தது வந்தது. பள்ளிக்கூட லைபரரி மேசையின் வழவழப்பில் வழப்பான ஆங்கில சஞ்சிகைகளின் பக்கங்கள் காற்றில் படபடத்தது. ஒன்றன் மீது ஒன்றாக விழுவது அவன் நினைவடுக்குகளில் கிளர்ப்படுகிறது. "ஓடிசூப் பேப்பர்," ஆங்கில சஞ்சிகைகளில் இருந்து பிரதி எடுத்தது. சேர்த்து வாசிக்க முடியாத ஆங்கில உச்சரிப்பை அவன் பிரதி பண்ணி அம்புக்குறி இட்டு வரைந்திருந்தான். அவன் மிகப் பெருமையுடன் பிரதி எடுத்த பாகம் குறித்த கைத்துப்பாக்கி. அவன் கண்கள் நம்பிக்கை ஒளி இழந்தது. முகம் வெளுத்தது. எல்லா உருவங்களிலும் அவனுக்கு நம்பிக்கை அற்று வெளிறி, பின் இருள் சூழ்ந்து போனது.

அது பற்றி தனக்கு எதுவுமே தெரியாது என சாதித்திருக்கத் தேவை இல்லை என்று பின்னர் உணர்ந்து கொண்டான். உதடு தடித்து ஊமைக் காயங்களின் அழுகையினூடே, இரத்த வாடையும் எச்சிலும் கலந்த சொற்களில் சஞ்சிகையில் பிரதி எடுத்ததைச் சொன்னான். அவர்கள் நகைச்சுவையைக் கேட்டது போல் வயிறெக்கிச் சிரித்தார்கள். பின் அவர்கள் அவனிடம் ஐஸ்கட்டியின் உறைநிலை பற்றிச் சிரித்தபடி கேட்டார்கள். அதுபற்றி உண்மையிலேயே தனக்கு ஒன்றும் தெரியாது என்று சொன்னான். பல்லாயிரக்கணக்கான நுண்ணிய கூர் முனைகள் அவன் உடல் முழுவதையும் துளைத்தெடுத்தது. சுண்டிப்போன இரத்தத் துணிக்கைகளின் கூர் முனைகள் முதுகுத் தோலைப் பிய்த்துக் கொண்டு ஐஸ்கட்டிக்குள் இறங்குவதை உணர்ந்தான். புருவத்துக்கும் உச்சந்தலைக்கும் இடையில் கனதியான எதுவோ உருள்வதும்... பின் குத்துவதும்... உருள்வதுமாக இருந்தது. தலைக்குள் பல உருட்டுக் கட்டைகள் உருண்டன. உதடுகள் பிடுங்கப்பட்டு பற்கள் வெளித்தெரிவது போல் உணர்ந்தான். விதைகள் விறைத்துக் கொண்டு அடிவயிறு வலித்தது. உடல்சூடு தணியத் தொடங்கியது. மூச்சு அவஸ்தைப்பட்டது. தொண்டைக்குள் சளி கரகரப்புடன் இழுபட்டு அறுகிறது. பாட்டியினுடையதோ..., வேறு யாருடையதோ..., சேடம் இழுக்கும் ஒலி செவிப்பறைக்குள் இரைகிறது. திடீர் மரண அவஸ்தை அவர்கள் திடுக்கிட்டு உறைந்து போனார்கள். ஒருவன் மண்டைக்குள் "பள்ளி-மாணவன்", "பள்ளி மாணவன்" என்ற சொற்றொடர் திரும்பத் திரும்ப வந்தது. இன்னொருவன் நினைவுத் தடத்தில் கூட்டிய குப்பைகளும், எரிந்த சாம்பல் மேடுகளும் மின்னி மறைந்தது.

ஆச்சரியமாகவும் துள்ளிக்குதிக்குமளவுக்கு சந்தோஷமாகவும், இருந்தது. வீட்டு முற்றந்தான். ஆனால், பனை நிற்கிறது. பனைக்கு முன்னால் வட்டு வரைக்கும் மேடாய் குவிந்து கிடக்கிறது. உமிப்பரப்பு. உமியை விட பெரிய... பெரிய.. அரிசித் துணிக்கைகள் அதிகமாய் கிடக்கிறது. சுண்டி வில்லில் கல் சரியாக பொருத்திக்

கிடக்கிறது. ஒரு புறாக் கூட கண்ணில் படவில்லை. உமிரப்பரப்புக்கு பின்னே இருக்கலாம். காற்றில் தாவி வேகமாக உமி உச்சிக்குப் பாய்ந்த போது... உமி சரியத் தொடங்கியது. நிலை குலைந்து தடுமாறி... தப்பிப்பதற்காய் காற்றில் மிதந்த போது.. பின்புறமாய் பெரும் நிழல் பரப்பொன்று நெருங்கிவந்தது. திடுக்கிட்டு அண்ணாந்து பார்க்க... வேகமாய் வந்து உச்சந் தலையில் மெல்லிய கீறலாய் அழுத்திவிட்டு மெல்லப் பறந்து போனது காக்கை.... உமி கால்களை உள்வாங்கத் தொடங்கியது. கொஞ்சம்... கொஞ்சமாய் உமிக்குள் அமிழ்ந்து... பின் முற்றாக அமிழ்ந்து போக.. உமியின் சுனையும் மூச்சுத்திணற வைத்தது. மேலும் மேலும் அமிழ்ந்து போக..., உடலில் வெப்பம் கூடிக்கொண்டு வந்தது. உடலில் உஷ்ணம் அதிகரித்த வண்ணம் இருந்தது... மூச்சுத் திணறல் குறைந்திருந்தது. அமிழ்ந்த உமிக்குள் வெக்கையின் சுகத்தை அனுபவிக்கத் தொடங்கினான். சூட்டில் தொண்டை கட்டிக் கொண்டது. மெல்லத் தொண்டை வரண்டு தாகமெடுத்தது. காற்றை வேகமாய் வாயால் சுவாசித்தான். சட்டென்று எதுவோ..., பூச்சி போல் தொண்டைக்குள் ஒட்டிக் கொண்டு செருமத் தொடங்கியது. செருமல் புரக்கேறி இருமத் தொடங்கியது. தொடர்ந்து விடாமல் இருமிய போது சலமனமில்லாமல் கிடக்க முனைந்தான். அதிகம் மூச்சு வாங்கியது.... விழித்துப் பார்த்தான். இருள் சூழ்ந்து கிடக்கிறது.. நாசியை எதுவோ அழுகிப் போன நாற்றம் வேகமாய் வந்து தாக்குகிறது. தவக்களைகளின் விடாத அறல்களும், சில் வண்டுகளின் சிலம்பல்களும், இனம் புரியாத இரைச்சல்களும் தன்னைச் சூழ ஒலிப்பதைக் கேட்டான். கையை ஊன்றி எழ முயற்சித்தான். எதுவோ அழுகிப் போன கூழம், கையில் பிசுபிசுத்தது. விறைத்துப்போன முதுகும், கதகதப்பில் இருக்கும் வயிறும் அவனை இரண்டு மனிதர்களாக்கி விட்டிருப்பதை உணர்ந்தான். அழுகல் நாற்றம் தலையை கிறுகிறுக்க வைத்தது. பார்வை மழுங்கிப் போன கண்களுக்குள் இருள் உருவமாய் நின்ற கன்னா மரங்களும், துலங்கும் அமைதியான உப்புநீர் எரியும், மின்சார கம்பங்களும் இடம்மாறி சலனப்பட்டது. அதிகமாக மூச்சு வாங்கியது. தொண்டை வரண்டு கிடந்தது. தாகமும், இருமலும் கூடிக்கொண்டே வந்தது.

அவன் செருமினான். எங்கோ மிகத் தொலைவில் இருந்து மணி ஓசை மெல்ல எழுந்தது. மாதா கோயில் மணி ஓசையாக இருக்கலாம்.. நேரம் ஐந்தாகி விட்டது.... அவன் நினைப்பு முற்றுப் பெறும் முன்னே கிட்ட இருந்தும் மிகப் பெரும் ஓசையுடன் மணி ஒலிக்கத் தொடங்கியது. ஆட்டுக் கொட்டிலில் இருந்து மொச்சை நெடியுடன் கலந்து அம்மாவின் புறு... புறுப்பும் வந்தது. சல.. சலத்த தென்னை, வானத்தில் முகில்களை சுத்தப் படுத்த அங்கும் இங்கும் அலைகிறது. கிளுவையும் தன் பங்குக்கு சுத்தப்படுத்த முனைகிறது.

அன்றும் அப்பிடித்தான். பொழுது நன்றாக இருண்டு கொண்டு வந்தது. மழை எல்லா இடங்களிலும் இருளைப் பிரகடனப்படுத்தியிருந்தது. தூறலுக்காய் பஸ் கோல்டில் கால் குத்தி நின்ற அவன், மெல்ல காலை உன்னி சைக்கிளை தெருவுக்கு கொண்டு வந்தான்.

தூறல் வலுக்க முன்னர் வீடு போய் சேர்ந்து விடலாம். முகத்தில் தூறல் விழுகிறது. குளிரில் உடல் சிலிர்த்து உதறியது. பல்லை இடுக்கிக் கொண்டு சைக்கிளை இறுக்கி மிதிக்கத் தொடங்கினான். காதடியிலும், புருவத்திலும் குளிர்ச்சி ஈரமாய் நனைகிறது. மக்காட்டில் மோதும் சிறு கற்துணிக்கைகளின் ஒலியும், நனைந்து போன தார் றோட்டில் உருளும் சில்லு தொடர்ந்து ஏற்படுத்தும் சர.. சரக்கும் இரைச்சலும் அவனுக்குள் குதூ-

# ஷி.கௌரிபாலன்

கலத்தை ஏற்படுத்தியது. இன்னும்... இன்னும்.. வேகத்துடன் சைக்கிளை மிதித்தான். வந்த வேகம் குறையாமலே பழக்கப்பட்ட முடக்கில் இயல்பாய்த் திருப்பினான். மம்மலாய் இருந்த இருளை மீறிக்கொண்டு கார் இருளாய் ஓர் உருவம் தன்னை மிக விரைவாக நெருங்குவதை உணர்ந்தான். பெருத்த ஓசையுடன் இடறி விழுந்தான். நீள இரும்புக்கேடர் தெருவில் விழுந்து தெறித்தது. பெரல் இன்னும் உருண்டு கொண்டிருந்தது. பாருக்குள் கால் ஊன்றி..., சரிந்த சைக்கிளின் கென்டியை பிடித்தபடி காத்து நின்றான். மிகப் பயங்கரமான அமைதியுடன் சில வினாடிகள் போனது. மெல்ல..., ஆனால், துல்லியமாய் "கோல்சர்" உடலுடன் உரசும் ஒலி கேட்டது. இரும்புடன் இரும்பு உரசி ரவை, நாணில் ஏறும் இழுவிசை பல தொனியில் அவனைச் சூழ ஒலித்தது. தன் இச்சையின்றி தசைகள் அதிர்வதை உணர்ந்தான். உடல் கருகி சாம்பல் துகள்கள் நெருப்பில் பறப்பது நினைவுத் தடங்களில் உரசியது. இருளுக்குள் மரணத்தை தேடினான்.

இறுக்கமாய்..., உறுதியாய்...., அவன் கழுத்து.. பிடிச்சிராவிக்குள் அகப்பட்டது போல் உணர்ந்தான். கண்ணைக் கூசும் ஒளி எதிரில் அருளை இன்னும் பயங்கரப்படுத்தியது. முகத்தசைகள் இழுப்பட்டுக் கோணியது. மிக நீண்ட நேரம் போல் தோன்றிய குறுகிய நேரத்தில் சொன்னார்கள். <u>"சலோ... சலோ..."</u> இந்த வீதியில் தன்னிச்சை இன்றியே சைக்கிள் தடம் பார்த்து போவதாக பல தடவை கருதி இருக்கிறான். ஒவ்வொரு பள்ளமும்... இடறி நிற்கும் கல்லும்... மாறி மாறிப் போகும் தடமும் அவனுக்கு அத்துப்படி இருளில் தோன்றப் போகும் கரும்புள்ளிகளை வீதி முழுவதும் தேடிக் கொண்டு போனான். பள்ளத்திலும் கல்லிலும் ஏறி விழுந்து தடம் மாறிப் போனது சைக்கிள். அன்றிரவும் அப்படித்தான்.

மிகப் பிரமாண்டமான பள்ளமாய் கடல் வரண்டு போய்க்கிடக்கிறது. பாளம்... பாளமாய் பிளந்து கிடக்கிறது உவர் தரை. நடுவில் கருப்பாய்.. வினோதமாய்... சிறுபுள்ளி. அது வர வர பெருத்து வந்தது. தலை மயிர் காது..., தோல்... பக்க வாட்டில் பார்வை இறங்கி வந்தது. ஓ... மனிதனின் பக்கத் தோற்றம், தானே.. தான் அந்த பிரமாண்டமான பள்ளத்தில் தன்னந்தனியனாய். கடல் எங்கே போயிற்று. திடீர் என்று அலை புரளும் ஓசை கேட்டது... உடல் வெடவெடத்து நடுங்கியது. மிகப் பிரமாண்டமான நிழல் துரத்தத் தொடங்கியது. பெரிய பெரிய அலைகள் இரைச்சலுடன் சூழ்ந்து வந்தது. கரை கண்ணில் படுவதாய் இல்லை... உயிர் மூச்சு அறுபட ஓடி கரை தட்டுப்பட முன்னே... ஆர்ப்பாட்டமாய் வந்த அலைகள் இவனை மூழ்கடித்தது.... அலைகளுக்குள் இழுபட்டு மூச்சுத் திணறிப் போனான். மூக்குக் குள்ளாலும் வாய்க்குள்ளாலும் உப்பு நீர் புரைக்கேறியது.

தொண்டைக்குள் இன்னும் குளிர்ச்சி இருக்கிறது. ஆட்டு மொச்சையின் மனம் தொடர்ந்து விடாமல் வருகிறது. அம்மாவும், ஆடுகளும் பேசுகின்றன. அம்மாவின் உலகம் ஆடுகளுடனானது. ஆடுகள் அவளுடன் பேசும், செல்லம் பொழியும். அவளும் செல்லம் பொழிகிறாள். அவளுடைய உலகம் அவளுக்கு உவப்பானது. திருப்திகரமானது. அவனுக்கு நினைவு தெரிந்த நாளில் இருந்து அப்படித்தான். பிள்ளைகளைவிட அவளுக்கு ஆடுகள் மீது பற்று. அப்படியும் சொல்ல முடியாது தான். சில நாட்களில் ஆடுகளையும் மறந்து இருப்பாள். உறவுகள் மீது அவளுக்கு நம்பிக்கையற்றுப் போயிருக்கலாம். தன் உலகத்தை தனக்குள் அலசிப் பார்க்க ஆடுகளைப் பயன்படுத்துகிறாளோ..? செல்லம் பொழிந்த படியே ஆட்டுக் குட்டியைத் தூக்கி கொஞ்சுகிறாள். நல்லா நினைப்பிருக்கிறது. லீவு நாள்.. நாள் முழுவதும் விளையாடித் தீர்ப்பதென்பது எழுதாத விதியாக அவன் அமைத்துக் கொண்டிருந்த காலம் அது. உச்சி வெயில் கடுப்பேறி, மைதானத்துக்கு அம்மா வந்தாள். பின் புறமாக கிட்டிக்கு வாய் பார்த்து நின்ற அவனை குடுமியில் பிடித்து இழுத்துப் போனாள். வீட்டு முற்றத்து வாதராணி நிழலில் குந்த வைத்தாள். விளையாட்டு பாதியில் நின்று போன எரிச்சலில் இருந்தான். வீட்டுடன் பத்தியாய் இறக்கி இருந்த குசினிக்குள் அம்மா போனாள். ஆடும் பின்னால் குசினிக்குள் போய் செல்லம் பொழிந்தது. வாய் கிழிந்து போன சருவப் பானையில் பாண் கருகலும், களனியும் சேர்த்து முற்றத்தில் வைத்தாள். பானைக்குள் மறைந்து போன பாதிக் கண்ணுடன் அவனைப் பார்த்தபடி ஆடு உறிஞ்சியது. அவன் ஆத்திரத்தின் உச்சிக்குப் போனான். எழுந்து போன வேகத்தில் சருவப் பானையை எட்டி உதைத்தான். பானை நகர்ந்து தளம்பியது. பெருவிரல் அதிர்ந்து விறைத்தது. ஆடு வெருண்டு.. பின் கத்தியது. ஆட்டின் கன்னத்தில் இரத்தம் கீறலாய்த் துளிர்த்துக் கிடந்தது. அம்மா வெளியே வந்தாள். அம்மாவின் கண்களுக்குள் இரத்தம் கீறலாய்க் கிடந்தது. ஆத்திரத்துடன் திரும்பி விறகுக் கட்டையை தூக்கினாள். அவன் தெருப் படலையை நோக்கி ஓடினான். காற்றில் விசிறி வந்த விறகுக் கட்டை நிலத்தில் மோதி தகரப் படலையில் சத்தத்துடன் தெறித்தது. படலையைத் திறந்து தெருவுக்கு வந்தான். காற்றில் அம்மாவின் வார்த்தைகள் அவனைத் துரத்தி வந்தது.

"தவிச்ச வாய்க்கு தண்ணி ஊத்த பெண்டாட்டி கூட இல்லாமத் தான்டா செத்துப் போவாய்..."

அவன் எழுந்து கிணத்தடிக்குப் போனான். மனதில் சுமை மெல்லிய கீறலாய்க் கிடந்தது. கனவு பற்றி பலரிடம் கூறி இருக்கிறான். ஆனால், அவர்கள் அதைப் பற்றி அசண்டையாய் இருப்பதாகப்பட்டது. பின் அவன் தன் கனவு பற்றி சொன்ன போது அதை விடப் பயங்கரமான கனவுகளுடன், கற்பனைகளுடனும் அவர்கள் இருப்பதை உணர்ந்து கொண்டான்.

## மலை ஆட்டின் பிரார்த்தனை

வ.ஐ.ச. ஜெயபாலன்



ஒரு மலை ஆடு நான்.
கற் காடு தான் ஐயா.
எனினும் இது என் தாய்க் கல்.
இந்தப் பாறை இடுக்கின்
முள்ளும் அமுதம்.
ஈடோஅச்சுவைக்கு
வேற்று மண்ணின்
புற்சுவைபுதர்ச் சுவை.

வெடிப்புகளில் எனது இனிய நீரூற்று.
சுனைக்கரைச் செடிகளிடை
கவி புனையும் குயில்கள்.
சிங்கங்களைமுறியடித்த
எனது முன்னோரின் கொம்புகள்
புதைந்து கிடக்கும் புனிதம்.
இது என் பரம்பரைக்கென
பால்நிலாமுலைக் கடவுள்
தன் கொம்புகளை அசைத்து
வாக்களித்தபூமி.

வழுக்குப்பாறைகளில்,
கல் முகடுகளில் ,
தூரத்துப்பச்சை என்னும்
மோகினிஆடு திரிகிற புல்வெளிகளில்,
சிறுத்தைகள் பசித்திருக்கும்
ஓடைகளுக்கும்
எனது தாய் குன்றத்துக்கும் நடுவில்,
விதியின்பகடைக் காய்கள் உருளும்.

கற் குன்றின் கீழ்ப் பரந்த
புல்வெளிகள் பற்றியதே
எங்கள்பரம்பரையின் புராணங்கள்.
முன்னர் அது எமதாய் இருந்தது.
பின்னர் அங்கு பசியும் நலிவுமாய்
நான்கு கால்களில்
மனிதப் பிசாசுகள் வந்ததாம்.
கருணையினாலே எனது முன்னோர்
தாகம்தீரப் பால் ஊட்டினராம்.
தின்னக் கொடுத்த
காய்கிழங்குகளை தீயினில் இட்டு
தணலையும் கரியையும்
தின்றனராம் மூடர்.
குறிகளைக்கூட தீயில் சுட்டே
புணருவர் போலும்.

அந்த மனிதப் பேய்களை
நமது குகைகளில் படுக்க விட்டோம்.
புத்துயிர்த்த அவர்களது
புழுக்கையும் சாணமும் போலவே
நாறியதாம் அவர்களின் மனசும்.

வளர் பிறைக் கொம்பும்
மின்னல்த் தாடியும்
சூரியக்கண்ணுமாய்
இலங்கும்எம் வள்ளலை மறுத்து
தமது சாயலை தெய்வம் என்றனர்.
கொம்பைஅசைத்து
காற்றைப்புயலாக்கி
வானையேஉடைத்து
மழையெனவடிக்கும்
எங்கள்இறைவனையே
எதிர்த்தெழுந்தார்கள்.
இறைவனோஅவர்களை
இரண்டுகாலிற் திரியச் சபித்தார்.

அன்று கற்களை வீசிய
அவர்கள்முன்னம் கால்களிலிருந்து
இன்று இடியும் மின்னலும்.
ஆனால்அது சிறியது.
இறுதிவெற்றி
மலை ஆடுகளின் கடவுளுக்கே.

முன்பு அவர்களும்
ஆசீர்வதிக்கப்பட்டிருந்தார்கள்.
அவர்களும் நான்கு கால்களால் நடந்தது
கற்குகைகளுள் வசித்தவர்களே.
எம்போல்தாவரம் உண்டவர்தாம்.
எமது பெண்கள் ஆண்கள் போல
அவர்களின் பெண்களும் ஆண்களும்
சரிநிகராக வாழ்ந்தனர் அன்று.
விளையாடினரே அவர் பிள்ளைகளோடு
எம் குட்டிகள்.

ஒரு விடி காலையில்
எங்கள் ஆதி அன்னையின் மடியில்
பால் குடித்தார்களாம்.
மதியம் அவளை அமுக்கிப் புணர்ந்து
மாலையில் அவளையே
கொன்றுதின்றார்களாம்.
இரவு அவளது தோலில்
மத்தளம்தட்டிப் பாடி ஆடினார்களாம்.

பிழைபொறுக்கும் இறைவன்
தன் கொம்புகளை அசைத்தார்.
அன்று காலையே பள்ளத்தாக்கை
ஓலம் நிறைத்தது.
ஈனத்தில் அவர்கள் அழுகை.
அவர்கள் விழுங்கிய
எங்கள் ஆதித் தாயின்
கண்ணீரும் இரத்தமும்
பாவியர் வாயாலும் வயிற்றாலும்
வெளியேபாய்ந்ததாம்..
அந்த மனிதப் பட்டியில் செத்ததோ
இரண்டுலட்சத்து ஆயிரத்தொன்று.
தப்பியதுஒரு மனுக் கடாவும் மறியுமே.

மீண்டும்மனுக்கள் பெருகின.
மீண்டும்மனுக்கள் பாதம் செய்தன.
ஆண்டவன்மனுக்களை முட்டி
குகைகளால்விரட்டினார்.
வாக்களித்தபடி
கன்மலைகளைஎமக்குத் தந்தார்.
புல்வெளிகளையேபெற்றிருக்கலாம்
மன்னிப்பும்இரக்கமுமே எம் முன்னோர்கள்.

நிலாஇரவுகளில்
கற் சிகரங்கள் ஏறி
வானைநோக்குவேன்.
கடவுளின்முலை சிந்தியதே
பால்வழிஎன்கிற பேராறு.
அப்பேராற்றின்
கரைகளில்மேயும்
நமக்காய்வீழ்ந்த மாவீரர்களே
நட்சத்திரங்கள்.

மனிதன்இறுதியில்
நம் குன்றையும் அபகரித்தான்.
நமது கடைசிக் கோட்டையையும்
தாக்கினான்.
நாம் ஐந்து பாறைகள் கேட்டோம்.
இறுதியில்ஐந்து கல் கேட்டோம்.
அவன் ஓநாயையும்விடக் கொடியவன்.
கொல்வதற்க்காகவேகொல்கிறான்.

தேவமாஆடே
எதிரியின்காலடியில் வீழ்ந்ததே
எமக்குவாக்களிக்கப் பட்ட கல்வரை.
போரில்எம் பால் மணக்கும் குட்டிகள்.
இருப்பதற்க்கும்இல்லாததற்க்கும்
இரங்கும்உன் மனம் கல்லாகியதோ.

பால்வெளிக்கரையில்
உன் பாடல் கேட்கிறதே.
தேவ மறிகளின் பின்னே
நீட்டிக்கொண்டு திரிகிறாயா.
உன் கருணை நெஞ்சுக்கு
வாலிலும்குளம்பின் அடியிலும் கூட
உதவும்கைகளும்
கண் காதுகளும் என்று
பாடப்பட்ட திருமொழி பொய்யா.

நாம் போராடுவோம்.
அந்தப்புல் வெளிகளுக்காகவல்ல.
நறும் நீர்ப் பள்ளத்தாக்கிற்குமல்ல.
எமது மூதாதையர்
எமது குட்டிகளுக்காய்த் தந்த
இந்தக் கல்லுக்காக.



## 'ஜாலிலோ ஜிம்கானா என்றால் என்ன என்ற கேள்வியும் வேறும் சிலதும்'

அண்மைய காலச்சுவடு இதழ்கள் பார்த்தாய் தானே? நிச்சயமாய் என்னைப் போலவே உனக்கும் ஒரு விடயம் கவனத்தை ஈர்த்திருக்கும். ஓமோம் நான் அந்த ரமேஷ்-பிரேம் நேர்காணலையும், அதற்குப் பிறகு வெளியான சாரு நிவேதிதாவின் :ஜாலிலோ ஜிம்கானா: (எனக்கு மண்டை வெடிக்கிறது அப்படீன்னா என்ன என்பதை உனக்குத் தெரிந்தால் சொல்லிவிடு) என்ற விமர்சனத்தையும், அதற்குப் பின் வந்த முன்னவர்களின் மறுப்பறிக்கையையும் தான் சொல்கிறேன். வேறும் ஒரு கட்டுரை. ரமேஷ்-பிரேமினது. உயிர் நிழலில் நொன்லீனியர் பற்றி எழுதியிருக்கிறார்கள். எனக்கு அண்மையில் மிகவும் சுவாரஷ்யமாய் இருந்த எழுத்துக்கள். நிறைய இலக்கிய விஷயங்களையும், இலக்கியத் தில்லு முல்லுகளையும் அறிய முடிந்த எழுத்துக்கள்.

எனக்கு ரமேஷ்-பிரேம் முதலில் பிரேதா-பிரேதன் என்ற பெயர்களில் தான் அறிமுக-மானார்கள். அவர்களின் "புதைக்கப்பட்ட பிரதிகளும், எழுதப்பட்ட மனிதர்களும்" என்ற நாவல்-எதற்கும் நூலென்றே பாவிக்கிறேன் - வசந்தம் புத்தக நிலையத்தின் புத்தக அடுக்குகளிடையே வித்தியாசமான வடிவத்துடனும், அழகுடனும் இருந்தது. அதன் அமைப்பே எந்த மேலோட்டப் பார்வையுமின்றி என்னை வாங்க வைத்தது. கொழும்பு மத்திய சந்தைத் தொகுதியிலிருந்து பம்பலபிட்டியிலிருந்த எனது அறை வரைக்குமான பஸ் பயணத்தில், மூலையிருக்கையில் இருந்து கொண்டு அதை வாசிப்பதற்கான ஆரம்ப முயற்சியில் ஈடுபட்டேன். பத்துப் பன்னிரெண்டு பக்கங்களிருக்கும் வாசித்துக் கொண்டே போனேன். (தமிழ் எழுத்துக்களை என்னால் வாசிக்கக்கூட முடியாதா?) ஒரு மண்ணும் மண்டைக்குள் ஏறவில்லை. அன்று மூடிய புத்தகம் இன்னும் திறபடாமல் அடுக்குகளுக்குள் கிடக்கிறது. இன்னொரு புறம் கவலையும் தான்.. தமிழில் வந்த எழுத்துக்களைக் கூட வாசித்து விளங்க முடியாத ஒருத்தனாய் இருக்கிறேனே என்று.

சரி...அது கடந்த காலம். நிகழ்காலத்தில், அந்த நூலின் விளங்காத் தன்மை பற்றி அவர்களே ஒத்துக் கொண்டிருப்பதோடு அது மாதிரியானவைகளை விளங்க வைக்கும் முயற்சியாக 'நொன்பிக்ஷன்' எழுதவாரம்பித்ததாகவும் (இருந்தாலும் ஐந்து நாவல்கள் கைவசம் வைத்திருக்கிறார்களாம்) தெரிவித்திருக்கிறார்கள். ஆக அது ஒட்டுமொத்தத்தில் தமிழ் வாசக உலகுக்கே புரிபடாத ஒன்றாய்த் தானிருந்திருக்கிறது ஒரு சிலரைத் தவிர! (அதுதானே பார்த்தேன்..இல்லாட்டி எனக்கு விளங்காதா என்ன?) அவர்களின் (ஆச்சரியப்படத்தக்க இன்னொரு விடயம் அவர்கள் இருவருக்காகவுமே ஒரே மூளை இயங்குவது) நேர்காணலில் கூட என்னால் விளங்கிக் கொள்ள முடியாத அளவுக்கு சில விடயங்கள் இருப்பினும், அவை நவீன இலக்கிய உலகில்-தமிழிலக்கிய உலகிலும்- முக்கியம் பெற்ற விடயங்களாய் இருப்பது என்பது என்னவோ உண்மை.

அவர்களின் அந்த நேர்காணலுக்குப் பின்னர், ஸீரோ டிகிரி புகழ் சாரு நிவேதிதா ஜாலிலோ ஜிம்கானா (என் கேள்விக்கு விடை சொல்வாய் தானே?) எனும் தலைப்பில் பல சுவாரஷ்யங்கள் உள்ளடங்கிய விமர்சன, அபிப்பிராய, எதிர்க் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார். இங்கு சாரு நிவேதிதாவை ஈழத்து, புலம்பெயர் தமிழிலக்கிய செயற்பாடுகளுடன் தொடர்பு படுத்தி சில விஷயங்கள் சொல்ல வேண்டும். அண்மைய எக்சில் இதழொன்றில் கடிதப் பகுதியில் றயாகரன் பற்றி 'யார் இந்த புல்ஷிட் றயாகரன் அவருக்கு ஒவ்வொரு இதழிலும் பக்கங்களை ஒதுக்குகிறீர்களே..' என்று சினந்து கொண்டிருக்கிறார். றயாகரன் அவருக்கு புல்ஸிட்டாக, புல் சையாக ஏன் ஒம்லெட்டாகக் கூட இருந்து விட்டுப் போகட்டும். இங்கு நான் சொல்ல வருகிற விடயம் என்னவென்றால். பொதுவாகவே பரந்துபட்ட தமிழிலக்கிய, அரசியல் உலகோடு அக்கறையான தேடல் கொண்ட ஒருவருக்கு றயாகரனை கட்டாயம் தெரிந்திருக்கும். இதற்கு தமிழகம், ஈழம், புலம்பெயர் என்ற பிரிப்புகள் தேவையேயில்லை.

றயாகரன் தனது அதிரடி எழுத்துக்களுக்காகப் பெயர் போனவர். சமர் எனும் சஞ்சிகையை ஒரு வேள்வியாக நடத்திக் கொண்டிருப்பவர். ஈழ, புலம்பெயர் முக்கிய வெளியீடுகளில் இவரின் எழுத்து இல்லாமல் போனால் ஏதோ விடுபட்ட மாதிரியிருக்கும். வொல்யூம் கணக்கில் எழுதிக் கொண்டிருப்பவர். விமர்சனங்களுக்கப்பால் இவர் எழுத்துலகில் நன்கே அறியப்பட்டவர்.

இங்கு நான் சொல்ல வருகிற விடயம் என்னவென்றால் சாருவிடம் பிற எழுத்துக்கள் குறிப்பாக ஈழ, புலம் பெயர் எழுத்துக்கள் பற்றிய அக்கறையான தேடல் இல்லை என்பதையே. அத்துடன் இன்னொன்று. ரமேஷ் பிரேமுக்கான எதிர்வினையில் சில ஈழத்துப் படைப்பாளிகளை பின் நவீனத்துவ எழுத்தாளர்கள் என்று சொல்லியிருக்கிறார். இதற்கான அவரின் வாசிப்பு மூலாதாரங்கள் இவர் உண்மையில் தேடிப்பெற்றதா? அல்லது வெளியீட்டாளர்கள் இவரின் முகவரிக்கு கட்டாக அனுப்பிய பின் கிடைத்த வாசிப்பின் பின்னானதா? என்பது எனக்கெழுகிற கேள்வி. எனது இந்த எடுகோள் சரியாயின் வெளியீட்டாளர்களே அனுப்பிவைக்காவிடின் இந்த எழுத்தாளர்களை இவர் எவ்வாறு அடையாளம் கண்டிருப்பார்? றயாகரனையே தெரியாத போது!

இவைகளையெல்லாம் நாம் ஒரு புறம் வைத்துவிட்டு ரமேஷ்-பிரேம் எதிர் சாருநிவேதிதா விவாத, எதிர்வினைகளுக்கு வருவோம். ஸீரோ டிகிரி எந்தளவுக்குப் பேசப்படுகிறது என்பது பற்றி உனக்குச் சொல்லத் தேவையில்லை தானே. சலசலப்பை ஏற்படுத்திய அந்த நாவல் சாருவின் சொந்தச் சரக்கல்ல என்றும் ஒரு சில பக்கங்களைத் தவிர மற்றையவை ரமேஷால் எழுதப்பட்டதென்றும், முந்தைய நூலான 'எக்சிஸ்டென்ஷியலும் பென்சி பெனியனும்' பிரேமால் எழுதப்பட்டதென்றும், வரவிருப்பதாக சாரு பிரசாரப்படுத்தும் நூல்கள் கூட ஆப்தீன் என்கிற ஒருவர் எழுதியவை என்றும் சில அடிப்படையான உண்மைகளை வெளிக் கொணர்ந்துள்ளார்கள்.

என்னால் நம்பவே முடியவில்லை. இப்படியெல்லாம் சாரு அங்கிள் ஜில்மால் (ஜாலிலோ ஜிம்கானா மாதிரி ஒரு பதம் என்று எடுத்துக் கொள்) விட்டிருப்பாரா என்று! சரி இதுபற்றிய தன் பக்க நியாயப்படுத்தல்களை அடுத்த காலச்சுவட்டில் சொல்வார் தானே பொறுத்திருந்து பார்ப்போம் என்றால், காலச்சுவட்டினர் இரு மாத இதழாக வெளிவரவிருப்பதைக் காரணம் காட்டி தற்போதைய விவாதங்களையெல்லாம் நிறுத்திவிடப் போகிறார்கள் என்று சொல்லியிருக்-கிறார்கள். அப்படியென்றால் இறுதியானவை அறுதியானவையா? இருக்கலாம் போல் தான் படுகிறது. கூடவே அவர்கள் இந்த உண்மை தெரிந்தவர்களாக இன்னும் சில எழுத்தாளர்களையும் குறிப்பிட்டுள்ளார்கள். இது இப்படியிருக்க எனக்கு இன்னொரு கேள்வி எழுகிறது. அதாவது எப்போதோ இவர்களுக்குத் தெரிந்த உண்மைகள் இப்போது தனிப்பட்ட பொருதல்கள் என்று வந்த போது வெளிக் கொணரப்பட்டிருக்கிறது. அவர்களின் நேர்காணலுக்குப் பிறகு சாருநிவேதிதா சீண்டத்தக்கதான எதிர்வினை எழுதியிருக்காவிடின் இந்த உண்மை கக்கப்பட்டிருக்காது. அப்படியானால் அவர்களும் கூட வாசகர்களை முட்டாள்களாக்கிய கைங்கரியத்துக்கு இவ்வளவு காலமும் உடந்தையாயிருந்திருக்கிறார்கள் என்று தானே அர்த்தம்.

எழுத்துலக நேர்மையிருந்திருந்தால் இதை அவர்கள் எப்போதோ சொல்லியிருக்க வேண்டுமல்லவா? அவர்கள் குறிப்பிட்டிருக்கிற முரண்பட்ட சந்தர்ப்பங்கள் கூட முற்றிலும் தனிப்பட்டதல்ல.

தமிழிலக்கிய உலகு என்ற பொது மட்டம் சார்ந்தது. ஆக மொத்தத்தில் நானும், நீயுமாக உள்ளடங்கிய மிகப் பெரும் வாசகர்களுக்கு பூச்சுற்றல் நடந்திருக்கிறது தானே !?

போ..போய் கண்ணாடியில் பார். காதில் பூவும், நெற்றியில் முட்டாள் பட்டமும் ஒட்டி வைத்திருக்கிறார்கள் இந்த பின்நவீனத்துவ இலக்கிய ஜாம்பவான்கள்.



கவிதை எழுதுகிற ஆர்வம் விடுபட்டுப்போன
பத்தாண்டு கால இடைவெளிக்குப் பிறகு
நேற்றைய தினம்
அந்த அருட்டலை நான் உணர்ந்தேன்.

கைவிட்டுப் போன காதலியை
நினைந்து நினைந்து நிதம்
நினைவிலே புணர்வுச் சுகம் காண்பதற்கும்
எரிந்து முடித்தவர் எறிந்துவிட்டுப் போன பின்னர்
எஞ்சிப்போயுள்ள சாம்பர் மேட்டின் மீது நின்று
சாவோலம் போடவும்
வெட்டியெறியப்பட்ட உடலங்களிலிருந்து
வீசித் தெறித்த இரத்தத் துளிகளை
நடை பாதையில் தெறிபட்ட சேற்றுநீர்
திவலைபோல்
துடைத்துவிட்டு
வண்ணத்துப் பூச்சியின் உடைந்த சிறகுக்காய்
ஏங்கியழவும் மட்டுமே
தமிழ்க் கவிதை என்றாகிப் போனதற்காக
அந்த அருட்டலை நான் உணரவில்லை.

பதில் தேவைப்படாத
கடிதம் ஒன்றை எழுதுவதற்கான தேவையை
நான் உணர்ந்த போது
அந்த அருட்டலை நான் உணர்ந்தேன்.
சின்னவனே,
நேற்றைய தினம் எமது கிராமத்தில்
அவர்கள் நுழைந்தார்கள் என்ற செய்தி வந்த
போது
நான் உன்னை நினைத்தேன்.
நீ அப்போது என்ன செய்து கொண்டிருப்பாய்
என்பதை
என்னால் ஊகிக்கவும் முடியாதளவுக்கு
அன்னியமாகிப் போனோம்.....
உன் முகத்தில் ரோமம் வளர்ந்திருக்கும்.
உடலிலும், மனதிலும் கடுமையான உரம்
ஏறியிருக்கும்

எதிரியை வரவேற்பதற்காக,
உன் துப்பாக்கிகளுக்குள்
தோட்டாக்களைநிரப்பியபடியோ
அல்லது
உன் நண்பர்களின் குழாமோடு புதிய
முகமொன்றை
நிர்மாணித்தபடியோ
நீ இருக்கக் கூடும்.
எனக்குத் தெரியவில்லை.
உனது வழியும்
எனது வழியும்
வேறு வேறாகிப் போனதில்
நான் கவிதையை மறந்தேன்.
நீ கவியை மறந்தாய்.
"பூச்சிக்கும், பூரானுக்கும்
புற்றில் உறங்குகிற பாம்புக்கும் இரங்குகிற
கவிமனத்தின் பெருமைகள் பற்றிப்
பேசிக்கொள்வதில்
எனக்கொன்றும் ஆட்சேபனை இல்லை
ஆயினும்
காரியார்த்த மௌனம் சாதிக்கின்ற
கவியுள்ளங்களைப் புரிந்து கொள்ள
எனக்கு முடியவில்லை" என்ற உனது
பத்தாண்டுக்கு முந்திய வார்த்தைகள்
என்னை மௌனமாக்கின.
ஆயினும் எம்மால் ஒட்ட முடியவில்லை.
எங்கள் வழிகள் வேறுவேறாகவே இருந்தன.
அப்போது நீ சிறுவன்
வளரிளம் பருவத்து
அலட்சியமும், ஆவேசமும்
செருக்கும் கலந்த மொழியில்
ஒளிவீசும் உனது கண்களும்
இன்னமும் கருமை படரா உதடுகளும்
படபடக்கும் துடிப்புடன் பேசுகின்ற
சிறியவன் நீ.
இப்போது.....?

எங்கள் கிராமத்தின்
புல் வெளிகளையும் வயல் வாய்க்கால்களையும்
இரும்புச் சக்கரங்கள் பூட்டிய வாகனங்களால்
பிளந்தபடி
அவர்கள் நுழைகையில்
உன் வார்த்தைகள் என் நினைவில் எழுந்தன.
மீண்டும் கவிதை எழுகின்ற
உணர்வினால் நான் உந்தப்பட்டேன்—
எங்களது வீடு
வீட்டின் பின்னே நாம்
கொடி கட்டி ஏற்றுகிற
நொங்குருத்திச் சிலிர்த்து நிற்கும்
இரட்டங்காலிப் பனை மரங்கள்
முற்றத்து வேம்பு.....
வேப்பம் பூ மணம் சுமந்து
வீசுகின்ற சோழகத்தின் வேகத்தில்
அள்ளுண்ணும்
வெள்ளை மணற்பரப்பு.....
வெட்ட வெட்டக்குறையாமல் விளைந்து
துளிர்க்கின்ற
உயில மரம். ஒளித்து விளையாடுகையில்
நிலத்தோடு நிலமாய்
ஒண்டிப் படுத்தபடி உண்ணப் பழக்குலைகள்
ஈகின்ற நாவல்.....
மாரி வெள்ளம் நிறைய வயல்
வளம் காட்டும் புன்னையடி
பிள்ளையார் கோயில் பெருங்காடு
பாறி விழுந்தும்நிமிர்ந்து நிற்கும்
மருதமர நிழலிருளில்
சில்லிட்டிருக்கும் கேணி, அதில் மிதக்கின்ற
புன்னை விதை..... பொறுக்கி விசிலூதி
நடந்தாலோ
தண்ணீர் தளதளக்கத் தாவிக்குதிக்க வைக்கும்
பாலையடிக்குளம்..... பறக்கின்ற ஆலாக்கள்.
ஓடையிலே காத்திருக்கும் கொக்கு ஒரு கோடி.
ஓடுகிற வாய்க்காலில்
கொட்டிக் கிழங்கு, கோரை, பனங் கீரை
தாமரையாய்க் கோதுருத்தும் கோமட்டியங்காய்.....
வௌவால்
சப்பித் துப்புகின்ற இலுப்பை இவைதாண்டில்
கண்டல் பொற்பத்தை கினியா என வளர்ந்து
தில்லையிலே தெப்பம் நகர்த்துகிற சேற்று
மண்டான்

எல்லாம் அவர் காலில் மிதிபட்டுப் போயிடுமோ?
நாங்கள்
பள்ளிவிட்ட பிறகு வந்து பந்தடிக்கும்
வெட்டையிலே
நட்டிருந்த
கல்லிருக்கோ ? அதிலே காகம் இருக்கிறதோ ?
வெள்ளைக் கொழும்பானைக்குத்தித்
தின்பதற்காய்
அள்ளிவந்து நாங்கள் அங்கு வைக்கும்
உப்புத் தூள் போத்தல் வைச்ச உறிதாங்கும்
கள்ளிப் பற்றையும் இருக்கிறதோ ?
இன்னும்
பாலியார் தோட்டத்துப் பக்கத்தால் போகிற
ஒழுங்கையிலே செவ்விளநீர் நவசி
மரமிரண்டும் நிற்கிறதோ
இன்றும்
குரங்கு வருகிறதோ ? குத்துகிற
நெருஞ்சி, தொங்கட்டான் கொட்டை
காஞ்சோண்டி
பிறகந்த தொட்டாற் சுருங்கி யெல்லாம்
நிற்கிறதோ ?

நிற்கிறதோ எல்லாம் ? காலத்தின்
தேவைக்கு ஏற்றாற்போல் தினந்தோறும்
நிறம்மாறும்
மனிதப் பதர்கள் போல் மாறிற்றோ
அன்றி
நெஞ்சு நிமிர்த்தி நின்று நீறாகிப் போயினவோ ?
சின்னவனே.....
என்னதான் நடந்தாலும் இவர்க்கென்ன
என்கின்ற
எள்ளல் சிரிப்பொன்று உள்ளடத்தில் எழக்கூடும்.
அல்லது,
கவிஞன் உணர்வுகளை உன் மனதால்
காண்கின்ற
பக்குவம் வந்ததனால் எனைநினைத்து
பரிதாபப்படக் கூடும்.
போகட்டும்.
உன்னுடைய பதிலைஎதிர்பார்த்து
எழுதவில்லை நான் இதனை.
நீ அறிவாய்
கிராமத்தின் கோடியிலே
சுமைதாங்கிக் கல்லுக்குப் பின் புறமாய்
ஆழக் கிடங்கு கிண்டி நாம் அடக்கம் செய்த
எங்கள்
வெள்ளாட்டுக் குட்டியின் நினைவாக
நட்டுவைத்த பனங்கொட்டை
வளர்ந்திப்போ வடலியாய் நின்றிருக்கும்.
சொல்லதற்கு :
நான் இன்னமும்
இருக்கின்றேன் என்று.....
கையிலே பேனாவும்
நெஞ்சிலே ஈரமுமாய்
மனிதம் விலை போகிற தெருக்களில்
விலை போகாமல் இருப்பதற்காக
முயன்றபடி.....
" வரலாறு ஒரு பத்தாண்டுடன்
முடிந்துவிடுவதில்லை.
அது தொடரும்.
மானுடத்தின் இறுதி மூச்சு உள்ள வரை
அது தொடரும் ! "
என்றபடி—

# வேர்களை இனங்கண்டு கிளைவிடும் தமிழரங்கு

**கிழக்குப் பல்கலைக்கழக உலக நாடகதின விழாவூடு ஓர் பார்வை**

(சென்ற இதழ் தொடர்ச்சி)

இன்று காண்பதற்கு மிகவும் அரிதாகிவிட்ட, பாரம்பரியக் கூத்துகளுக்கும், நவீன நாடகங்களின் தோற்றத்துக்கும் இடைப்பட்ட காலகட்டத்தில் எம்மத்தியில் அறிமுகமான 'விலாசம்' ஒன்று நான்காம் நாள் விழாவில் ஆற்றுகை செய்யப்பட்டது. 'அரிச்சந்திர விலாசம்' எனப் பெயரிடப்பட்ட இதில், பயன்படுத்தப்பட்ட மெட்டுகள், அடிப்படையான பாதடிக் கோலங்கள் என்பவை வடமோடிக்கூத்துக்குரியவை போன்றே தென்பட்டன. சில பாடல்களில் தென்பட்ட கர்னாடக இசைச்சாயலே இதனை ஓரளவு வேறுபடுத்துகிறது.

பொதுவாகவே இந்தப் பாரம்பரியக் கூத்து ஆற்றுகைகளின் போது, பார்வையாளர் எண்ணிக்கை குறைந்து செல்கின்ற ஒரு போக்குக் காணப்பட்டது. பழைய தலைமுறைகளின் பக்திசார்ந்த கலையாகப் பயிலப்பட்ட கூத்து, மீள மீள ஒரே கதைகளை, ஒரே விதமாக ஆற்றுகை செய்யும் மரபினைக் கொண்டது. இத்தகைய அதன் அம்சங்களால் கூத்துக்கள் பயிலப்பட்டு வரும் சூழலிலிருந்து என்றோ விடுபட்டுவிட்ட சமூகம் சார்ந்தவர்களுக்குக் கூத்துச் சலிப்பூட்டும் ஒன்றாய்த் தெரியக்கூடும். கூத்துக் கலைக்கும், இன்றைய இப்புதிய சமூகத்தினருக்குமிடையே காணப்படக் கூடிய இந்தத் தலைமுறை இடைவெளிகள் தாண்டப்படும் போதே புதிய காலம், அதன் தேவைகள் சுவைத் தராதரங்களுக்குரிய ஒன்றாகக் கூத்து மலர முடியும், இதற்குச் சாத்தியமான இரு வழி முறைகளைக் கூறலாம்.

01. தலைமுறை தலைமுறையாய்க் கூத்துப் பயிலப்பட்டு வரும் சமூகத்துள் ஏற்படும் சிந்தனை மாற்றத்தினால் கூத்துப் புதிய பரிமாணங்களை எட்டல்.

02. பாரம்பரியமாகக் கூத்துப் பயிலப்பட்டு வரும் சமூகத்துக்கு அதிகம் அன்னியமாகிவிட்டவர்கள், கூத்துப் பயில்விலீடுபட்டு, புதிய காலம் தேவைகளுக்குப் பொருந்தக்கூடிய ஒன்றாக அதனை வடிவமைப்புச் செய்தல்.

முதலாவது வழிமுறைக்கு உதாரணமாக, விழாவில் மூன்றாம் நாள் ஆற்றுகை செய்யப்பட்ட 'இருளும் விடிந்தது' எனும் கூத்தைக் குறிப்பிடலாம். பாரம்பரியக் கூத்துக் கலைஞரினால், படச் சட்ட அரங்கிலேயே ஆற்றுகை செய்யப்பட்ட இதில் ஓர் கிராமத்தைச் சேர்ந்த விதானை, மனைவி, அவர்களது வேலையாள் ஆகியோர் கிராமத்து வாழ்வை விடுத்து நகர்ப்புறம் செல்வதாகக் கதை நகர்த்தப்பட்டிருப்பது கவனிக்கப்பட வேண்டிய சுவாரஷ்யமான அம்சம். கூத்து மரபில் விதானை, மனைவி, வேலையாள் எனச் சம காலச் சமூகப் பாத்திரங்கள் கூத்து மரபில் பாத்திர அறிமுகம் செய்யப்பட்டுக் கதை நகர்த்தப்பட்டது. கதைச் சூழ்நிலைகளுக்குப் பொருத்தமாக வடமோடி, தென்மோடி ஆடல், பாடல், மெட்டுக்களை இவர்கள் கலந்து பயன்படுத்தியிருந்தனர். இத்தகைய ஓர் புதியமோடி உருவாக்கம், பாரம்பரியக் கூத்துக் கலைஞர்களிடையே ஏற்பட்டு வருவதை நாம் கவனிக்க வேண்டும்.

இரண்டாவது வழிமுறைக்கு உதாரணமாக விழாவில் ஆற்றுகை செய்யப்பட்ட "நம்மைப் பிடித்த பிசாசுகள்", "மட்டு. நகர்க் கண்ணகைகள்", "நவீன பஸ்மாசுரன்" என்பவற்றைக் குறிப்பிடலாம். "நம்மைப் பிடித்த பிசாசுகள்" 1980களில் பேராசிரியர் மௌனகுரு அவர்களால் எழுதப்பட்டு, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவிகளைக் கொண்டு ஆற்றுகை செய்யப்பட்ட ஒன்று. சாதி, மத, இன வெறிப் பிசாசுகள் மக்களைப் பிடித்து உலுப்புவதை இது கூறுகிறது. பண்புகளைப் பாத்திரங்களாக்கிக் கூறப்படும் கதை, கூத்து வடிவத்துள் இலகுவாகப் பொருந்தியமைகிறது. கூத்தின் தாளக் கட்டுக்களும், ஆடற் கோலங்களும் சாதி, மத, இன வெறி அரக்கர்களைப் புலப்படுத்தப் பொருத்தமாகப் பாவிக்கப்பட்டிருந்தது. திருக்கோணமலை, கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மாணவர்கள், இங்கு இதனை ஓரளவு சிறப்பாக அளிக்கை செய்தனர். அதிகளவு கூத்து, ஆடல், பாடல்களுக்கு இடமளிக்கக் கூடிய இக்கூத்துள் அந்தளவுக்கு அவை பயன்படுத்தப்பட்டிருப்பின் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும்.

சூரியா கலாசாரக் குழுவினரின் மட்டு. நகர்க் கண்ணகைகள், கண்ணகையம்மனைச் சாந்தப்படுத்தப் பாடப்படும் குளுத்திப் பாடல்களை அடிப்படையாகக் கொண்டு, ஆண் துணைகளை இழந்த இன்றைய மட்டு. நகர்ப் பெண்களின் அவல நிலையை வெளிப்படுத்தியது. சில பெண்கள் மேடையில் வந்திருந்து அழுதபடியிருக்க, ஒவ்வொரு பாத்திரத்தையும் வித்தியாசமான முறைகளில் திரை பிடித்து அறிமுகப்படுத்தி, அவர்களின் துயர் பாடி, ஈற்றில் துயரங்களிலிருந்து மீண்டெழுவதாய்க் கதை நகர்த்தப்பட்டது. கருப்பொருள் ரீதியாகவும், வடிவ ரீதியாகவும் குளுத்திச் சடங்குக்குக் கொடுக்கப்பட்ட, ஓர் பொருத்தமான வியாக்கியானம் இதுவெனலாம். நடுத் தெருவில் கணவரை அநியாய உயிர்ப் பலி கொடுக்கும் கண்ணகைகளும், கணவர் பார்த்திருக்கத் துகிலுரியப்பட்டு மானபங்கப்படுத்தப்படும் திரௌபதைகளும், இன்றைய நடப்புலக யதார்த்தங்களல்லவா?

உலகம் முழுவதையுமே பல தடவைகள் அழிக்கப் போதுமான இராட்சதமாக வளர்ந்துள்ள அணு ஆயுதச் சிக்கலை நுண் கலைப்பீடத்தினரின் நவீன பஸ்மாசுரன் பேசியது. பல்வேறு அன்றாடப் பிரச்சினைகளின் நெருக்குவாரங்களினாலும், நாம் கவனிக்கத் தவறிவிடுகின்ற இப்பிரச்சினை பற்றிய விழிப்புணர்வைத் தூண்டுவதாடாக நவீன பஸ்மாசுரன் தமிழ் அரங்குக்கு ஓர் புதிய அலைவரிசையைத் தொடக்கி விட்டுள்ளது எனலாம்.

காட்சிகளைக் குறியீட்டுப் பாங்காக வெளிப்படுத்துவதாக நாடகம் நகர்ந்தது. மிகைப்படுத்தப்பட்ட நடிப்பு, பாத்திரங்கள் அதிகம் பார்வையாளரை விளித்துப் பேசியமை என்பன நாடகத்தின் இயல்பான கதை வெளிப்பாட்டை இடையூறு செய்வதாயமைந்து விட்டன.

சூழ்நிலைகளாலும், தமது தொழில் பற்றிய தாழ்வு மனப்பான்மையினாலும் ஒரு சீவல் தொழிலாளியின் குடும்பத்துக்கு ஏற்படும் பாதிப்புக்களை, 'நிவாரணம்' வெளிப்படுத்தியது. இயல்பான நடிப்பம்சத்துடனும், எளிமையான காட்சியமைப்புகளுடனும் நாடகம் உருவாக்கப்பட்டிருந்தது. எளிமையாக அமைக்கப்பட்டிருந்த ஒரு வாயில் படலை வீட்டையும், வீதியையும் மேடைவெளியில் பிரித்தினங் காட்டுவதில் வெற்றி பெற்றது. அரங்கின் தேவை, கிடைப்பனவாயுள்ள வளங்கள் என்பவற்றுடன் நடிகரது உடல்மொழியையும், பார்வையாளரது கற்பனைத் திறனையுமிணைத்து அவர்களது மனதுள் காட்சியை விரிக்கும் கீழைத்தேயப் பாரம்பரிய அரங்குகள் பலதிலும் காணப்படும், இம்முறைமை இன்றைய எமது அரங்குக்கு மிகப் பொருத்தமானது.

நுண் கலைப்பீடத்தின் தயாரிப்புகளான "அவளுக்கென்று", "தீர்வு", "நவீன பஸ்மாசுரன்" என்பவை இறுதி நாள் விழாவில் அரங்கேறின. நுண் கலைத்துறை விரிவுரையாளர் விமல்ராஜின் நெறியாள்கையில் உருவான 'அவளுக்கென்று" ஒரு

கூத்து', 'தம்மதுவீபத்தின் கதை' என இதற்கு ஓர் நீண்ட வரலாறே உண்டு. இவற்றில் யாழ். பல்கலைக்கழகத்தின் பங்கும் கணிசமானது. ஈழத்தில் விடுதலைப் போராட்டம் கூர்மையடையத் தொடங்கிய காலகட்டத்தில், மக்களது விழிப்புணர்வைத் தூண்டுவதில் மண் சுமந்த மேனியர் வகித்த பங்கு முக்கியமானது.

விழாவின் ஆரம்ப நாள் உரையில் பேராசிரியர் தில்லைநாதன் கூறியதுபோல, அரங்கின் தோற்றமே மனிதனின் எதிர்ப்பியல்பிலிருந்தே அமைந்தது. அதாவது தடைகளை எதிர்கொண்டு வெற்றி கொள்வது. இவ்வகையில், தொடர்ச்சியாக இன ஒடுக்குமுறையைப் பல வடிவங்களில் சந்தித்து வரும் கிழக்கு மாகாணத்திலே அரங்கு ஆற்ற வேண்டிய பணி நிறையவேயுள்ளது. கிழக்குப் பல்கலைக்கழகம் இதனை உணர்ந்து செயற்பட வேண்டியது, அதன் சமூகப் பொறுப்பு.

மட்டக்களப்புப் பிரதேசத்திலே பயில்நிலையிலுள்ள ஆங்கில நாடக அரங்கச் செயற்பாடுகளும், ஒவ்வோர் விழாவிலும் அறிமுகப்படுத்தப்பட்டே வருகிறது. இம்முறை Othello, Chalk Circle, Death is a Dream ஆகிய வேறுபட்ட தலைமுறைகளின் நாடகப பாரம்பரியங்கள் அரங்கேறின.

Othello, ஷேக்ஸ்பியரின் அற்புதப் படைப்புக்களில் ஒன்று. சந்தேகத் தீயால் தன் மனைவியையே கொன்றுவிடும் ஒருவனின் கதை இது. கீழைத்தேயப் பண்பாட்டின் இராமனுக்கு எவ்விதத்திலும் சளைக்காதவனாக, தன் மனைவி விடயத்தில் செயற்படுகிறான் Othello. சீதையைக் காட்டுக்கனுப்பி அவளது ஆன்மாவைக் கொல்கிறான் இராமன். Othello தன் மனைவியைக் கொன்றே விடுகிறான். தன் தவறை அவன் உணர்ந்த போது தடுமாறிப்போகிறான். அதன் பின் அவன் பேசும் ஒவ்வோர் சொல்லும் ஆழமானவை. ஈற்றில் அவன் தன்னைத்தானே மாய்த்துக் கொள்வதாகக் கதை முடிகிறது. அவன் இங்கு 'மகான்' ஆக்கப்படவில்லை.

நேர்த்தியாக, ஷேக்ஸ்பியரின் நாடகங்கள் இயல்பாகக் கோரி நிற்கும் நடிப்பூடாக, நாடகம் சிறப்பாக நகர்த்தப்பட்டது. மேடையமைப்புகள், வேட உடைப்புனைவுகள் ஷேக்ஸ்பியர் காலத்தைக் கண்முன் நிறுத்துவதாய் எளிமையாய் அமைக்கப்பட்டிருந்தன. இந்நாடகம் புனித மிக்கேல் தேசிய பாடசாலை மாணவர்களால் நிகழ்த்தப்பட்டது.

Chalk Circle அன்றைய ரஷ்ய அரசியலுக்கு, ஒரு பிள்ளை - இரு தாய் என்ற நாடோடிக் கதையூடு Brecht கொடுத்த வியாக்கியானம் பிள்ளையைப் பெற்று விடுவதால் மட்டும் ஒருத்திக்குக் குழந்தை

## அரசியல் யதார்த்தத்தைத் தொட்ட நாடகங்கள் !

உலகுக்கே வரமாகக் கிடைத்த அணு சக்தி துஷ்பிரயோகம் செய்யப்படுவதை, தொட்டதெல்லாம் சாம்பராகும் வரம் பெற்று ஈற்றில் தன்னையே அதனால் மாய்த்துக் கொண்ட பஸ்மாசுரன் கதையூடு வியாக்கியானித்து, பரிச்சயமான எமது ஐதீகத்துடாக இப்பிரச்சினை இலகுவாக மக்களைச் சென்றடைய வைக்கப்படுகிறது. கூத்து வடிவம் இக்கதையை இலகுவாக வெளிப்படுத்தக்கூடிய வகையில் சிறப்பாகக் கையாளப்பட்டிருந்தது. உள்ளடக்க ரீதியாகவும், வடிவ ரீதியாகவும் நிகழ்கால அனுபவங்களை வெளிப்படுத்தக்கூடிய கூத்தின் சாத்தியப்பாடுகள் இதனால் புலப்படுத்தப்படுகிறது. ம. நிலாந்தனால் எழுதப்பட்டு, யாழ்ப்பாணத்தில் தான் பல தடவை மேடையேற்றிய இக்கூத்தை, இன்னும் நாடகத் தன்மையுடன் வளர்த்தெடுத்து சி. ஜெயசங்கர் இதனை அரங்கேற்றினார். கூத்தில் பங்கேற்ற அனைவருமே நுண் கலைத்துறை விரிவுரையாளர்களும், மாணவர்களுமென்பது இங்கு குறிப்பிடப்பட வேண்டியது.

இரண்டாம் நாள் விழாவில் நிகழ்த்தப்பட்ட மட்டக்களப்பு வை. எம். சி. ஏயினரின் 'நஞ்சினில் விளையவோ' வீதி நாடகமும், எமது ஓர் பாரம்பரிய ஆற்றுகை வடிவமேயெனில் தவறல்ல. ஊரூராகச் சென்று வீதிகளில் கூத்தாடும் மரபு, சங்க காலக் கூத்தர் குழாம்களுடனே அறிமுகப்பட்டு விட்ட ஒன்று. மேற்குலகில் இது ஓர் காத்திரமான தொடர்பூடகமாக வளர்த்தெடுக்கப்பட்டது. எமது அரசியல் போராட்டம் கூர்மையடையத் தொடங்கிய காலம் முதல் எம்மிடையே ஓர் பலமான சாதனமாக இது பயிலப்பட்டு வருகிறது.

'நஞ்சினில் விளையவோ' இரசாயன உரங்களால் உணவிலேற்படும் நஞ்சூட்டம், சுய பொருளாதார வளர்ச்சி பற்றிய சிந்தனைகளைத் தூண்ட முயல்கிறது. பெரும்பாலும் கூத்து மெட்டுக்களிலேயே பாடல்கள் பாடப்பட்டன. மக்கள் மத்தியில் ஏலவே பிரபலமான மெட்டுக்களூடு, புதிய விடயங்கள் பேசப்படுவதால், அவை இலகுவில் மக்களைச் சென்றடையும், இதனை நெறிப்படுத்தியவரும் விரிவுரையாளர் சி. ஜெயசங்கரே.

விழாவில் அரங்கேறிய இப்'புதிய வகை'க் கூத்துக்கள் யாவுமே, கூத்துப் பயிலப்படக் கூடிய இன்றைய சாத்தியமான சில வடிவங்களைப் பட்டியலிட்டுக் காட்டுவது போன்றே அமைந்துள்ளன. இத்தகைய முயற்சிகள் நிறையத் தொடர வேண்டும்.

தமிழ் நாடகங்கள் என்ற வகையில், திருமலை கீழைத் தென்றல் கலா மன்றத்தினரின் "இலட்சுமி", மட்டிக்கழி நுண் கலைக்கழகத்தினரின் "நிவாரணம்", பல்கலைக்கழக நுண் கலைத்துறையினரின் "அவளுக்கென்று", "தீர்வு" என்பன மேடையேற்றப்பட்டன.

இலட்சுமி, இன்றைய யுத்த சூழ்நிலையில் ஒரு பெண் இராணுவத்தின் பாலியல் துன்புறுத்தல், கணவனின் சந்தேகம் என மாற்றாராலும் அதைவிட அதிகமாகத் தம்மவராலும் படும் துயரை வெளிப்படுத்தியது. இயல்பான கதையோட்டத்துடன் இடப் பெயர்வு, பாலியல் வதை போன்ற

பெண்ணின் வாழ்வு, காதலனின் சந்தேகத்தாலும், பின் அவனை ஒதுக்கித் தன்னைப் புரிந்து கொண்டவனென அவள் மணம் முடித்தவனின் சந்தேகத்தாலும் அலைக் கழிக்கப்படுவதைக் கூறியது. ஈற்றில் அவள் Doll's House இன் Nora போல வீட்டை விட்டுப் புறப்பட்டு விடுகிறாள்.

நாடகத்துக்கான சம்பவங்களின் தெரிவு, தொகுப்பு, செறிவிலும், அவற்றைச் சரியாக



அருகருகே அடுக்கும் முறைமையிலுமே (Juxta position of incidents) கதைப் பின்னலின் வெற்றி தங்கியுள்ளது. 'நிவாரணம்', 'அவளுக்கென்று' ஆகிய இரு நாடகங்களிலும் இந்த விடயத்தில் சற்றுக் கூடுதலான கவனம் செலுத்தப்பட்டிருக்கலாம் போலத் தெரிகிறது.

'தீர்வு' எமது அரசியல் வரலாற்றின் ஒரு பகுதியைக் குறியீட்டுப் பாங்காய் வளர்த்துச்சென்றது. 1948ல் 'சுதந்திரக் குழந்தை' பிறந்து, அரண்மனையில் வளர்ந்து வருவதாகக் கனவு காணச் செய்யப்பட்ட மக்களுக்கு, அப்படி ஓர் குழந்தையே இல்லையென்பதை உணர்த்துவதாக நாடகம் நகர்ந்தது. இந்திரா பார்த்தசாரதியின் நாடகத்தை இங்கு நமது அரசியலுக்கேற்ற வகையில் வியாக்கியானித்திருந்தார், நுண் கலைத்துறை விரிவுரையாளர் சிவரெத்தினம்.

**- ருஷாங்கன்**

கடந்த நாடக விழாவை விட இம்முறை அரசியல் ஒடுக்குமுறை பற்றியும், அதன் விளைவுகள் பற்றியதுமான நாடகங்கள் மேடையேறியமை ஓர் முக்கியமான விடயமாகும். ஈழத் தமிழர்கள் மீதான இன ஒடுக்கல் சிக்கல்களையும், அதற்கெதிரான குரலையும் ஆரம்ப காலம் முதல் துணிவுடன் வெளிப்படுத்தி வருவதில், அரங்குக்கு ஓர் முக்கிய பங்குண்டு. 'மண் சுமந்த மேனியர்', "உயிர்த்த மனிதர்

சொந்தமாகி விடுமா? அல்லது குழந்தையைச் சிரமப்பட்டு வளர்த்தவளுக்கு அது சொந்தமா? என்ற எளிமையான கதை விவாதத்துாடு, நாட்டுரிமை பற்றி விவாதிப்பது இந் நாடகம்.

குழந்தையைப் பராமரிக்க. அதனைக் காப்பாற்றிய பெண் Grusha படும் கஷ்டங்களைக் கூறும் நாடகத்தின் 02வது அங்கமே இங்கு, மட்டு. புனித சிசிலியா பாடசாலை மாணவியரால் நிகழ்த்திக் காட்டப்பட்டது. குழந்தையைக் காக்கப் பெரும் பள்ளத்தாக்கைக் கடந்து, அறுந்த தொங்கு பாலத்துாடு Grusha நடக்கும் பதட்டமான காட்சி எளிமையாகச் சிறந்த நடிப்பூடாகச் 'செய்து காட்டப்பட்டது. 'ஹென்றி ஜயசேனவின் (Henry Jeyasena) சிங்கள மொழி ஆற்றுகை ஒருமுறை மனக்கண்முன் தோன்றி மறைந்தது.

தன் மனைவியைத் தான் கொன்றுவிடுவதாக ஒருவன் அடிக்கடி கனவு காண்கிறான். அவனுக்கு வைத்தியம் செய்த வைத்தியர், அவனை குணப்படுத்தி விட்டதாகக் கூறும் வேளையில், அவன் தனது மனைவியைக் கொன்று அலுமாரியில் பூட்டிவைத்திருப்பது தெரிய வருகிறது. இதுவும் அவனது கனவா? அல்லது நிஜமா? Death is a Dream இன் சூழ்வு இதுதான். அல்பியோன் அவைக் காற்றுக் கழகத்தினரின் தயாரிப்பான இந்நாடகத்திலும் மாணவர்களின் நடிப்பு சிறப்பாக அமைந்திருந்தது. பெண் பாத்திரமேற்றவர்களின் நடிப்பு முக்கியமாகக் குறிப்பிடப்பட வேண்டியது. அவர்கள் ஆண்கள் என்பதைக் கண்டுபிடிக்க நீண்ட நேரம் எடுத்தது.

அடுத்த இதழில் முடியும்



அமரதாஸின்

## இயல்பினை அவாவுதல்

### கவிதைத் தொகுதி

'எனது முகம்
அசிங்கமான தென்றோ
ஓரளவு அழகான தென்றோ
பேரழகான தென்றோ
நீ சொல்லக் கூடும்

அது பற்றி எனக்கு
பிரமைகள் எதுமில்லை.

தினமும் என் சுத்தக் கண்ணாடி
விகாரங்களின்றித் தெளிவாக
அந்தரங்கமாய்ச் சொல்கிறது
என் முகத்தைப் பற்றி.'

அண்மையில் வெளிவந்த அமரதாஸின் 'இயல்பினை அவாவுதல்' என்ற கவிதைத் தொகுதியில் காணப்படும் 'முகம் பற்றி' என்ற கவிதையின் இறுதி வரிகளே மேற்காணுபவை.

மேற்காணும் வரிகள் ஒருவித விமர்சனப்பாங்கான தன்மை உள்ளோடும் உருவங் கொண்டவை. இவ்வரிகள் அவர் தனது சிருஷ்டிகள் பற்றி எவ்வாறு அறிவு பூர்வமாகவும் அணுகிறார் என்பதற்குச் சான்று பகர்பவை.

அவரிடம் 'அதுபற்றி (தன் முகம் பற்றி) பிரமைகள் இல்லை" காரணம் அவரிடமுள்ள ''சுத்தக்கண்ணாடி" என்கிற விசாரம், "விகாரங்களின்றி தெளிவாக அந்தரங்கமாய்ச் சொல்கிறது என் முகத்தைப் பற்றி" என்கிற தரிசன பலம் அவருக்கு.

இவ்வாறே 'புத்தகம் பற்றி' அவர் எழுதியுள்ள கவிதையும் வாசகனை நோக்கி பல விஷயங்கள் பற்றி அறை கூவுகிறது. இதிலும் அறிவோடு செயல்படும் விமர்சன இழைகள் கோடிழுத்துச் செல்வதை நாம் காண்கிறோம்.

இதையே இக்கவிதைகள் பற்றி முன்னுரை எழுதியுள்ள கவிஞர் கருணாகரனும் கூறுகிறார்.

"ஏற்கெனவே பரிச்சயங் கொண்ட வாசிப்பு முறையினூடாக ஒரு புதிய கவிதையை அணுகமுடியுமென எதிர்பார்ப்பது முற்றிலும் பொருத்தமானதல்ல. இங்கே அமரதாஸ் தன் கவிதைகளுடனான உறவை வாசகன் கொள்வதற்குப் புதிய விரிந்த அனுபவத்தை வாசகனிடத்தே கோருகின்றார். சுருங்கிய வட்டத்துள் உறவைக் கொண்டிருக்கும் ஒரு வாசகன் அமரதாஸின் இந்தக் கவிதைகளை உணரமுடியாமல் தவறிவிடுவான்.

இந்தத் தொகுதியில் 'புத்தகம் பற்றி' என்ற கவிதை மிக முக்கியமான சவால்களை வாசகனிடத்தே எழுப்புகின்றன. வாசகன் தன் அனுபவங்களுடனும், சிந்தனையுடனும், இக்கவிதையினை எதிர்கொள்ள வேண்டியதாகிறது" என்று கருணாகரன் கூறுவது மிக முக்கியமானது.

இங்கே கருணாகரன் கூறும் "அனுபவங்களுடனும் சிந்தனையுடனும்" என்பது ஒரு கவிதை ரசனைக்கு உணர்வும் அறிவும் தேவையென்பதை சுட்டுகிறது எனலாம். அவ்வாறே கவிஞனும் கவிதையை உணர்வின் வயப்பட்டு எழுதும் போதும் அறிவின் சிற்றிழை அவனுக்கு வழி காட்டியே செல்கிறது.

இத்தகைய கவிதைகளே அமரதாஸின் தொகுப்புக்கு அழகூட்டுவனவாய் உள்ளன. 'காட்சி ஒன்று' என்ற கவிதை எவ்வாறு குளந்தள்ளும் அலைகளால் நிலவு நொறுங்கிப் போகிறது என்பதை அழகுறக் காட்டுகிறது:

'அலையடித்து நொறுங்கிப் போகிறது
குளக்கரையில் உதிர்தொளிர்ந்த
அழகிய நிலவு'

'எரியும் பறவைகள்' என்னும் கவிதை மாலை நேரத்தை இவ்வாறு கவிதையாய் வார்க்கின்றன.

'அழிவானில்
சூரியன் வீழ்ந்தழியும் தருணங்களில்
சிவப்பாய் தீமூண்டு பரவுகிறது

பிறகு
பறக்கும் பறவைகளை பற்றியிழுத்து
துடித்துக்கதற
எரித்துக் கருக்குகிறது தீ
இருட்டுச் செறிகிறது பிறகு
இருட்டுச் செறிகிறது'

'அவஸ்தை' என்ற கவிதை,



இவ்வாறு தமிழரின் அகதி வாழ்க்கையை கோடிட்டுச் செல்கிறது.

'அருமையறியா கரம் தீண்டி பிய்த்துதறி
வெய்யிலில் வதங்கும்
அன்றலர்ந்த மென்பூவின் இதழ்களென
திக்கொன்றாய் விசிறுண்டு
அவஸ்தையுற்றோம்'

2

தொண்ணூறுக்குப் பின் ஈழத்துத் தமிழ்க் கவிதைக்கு வளமூட்டும் கவிஞர்களின் கவிதைகள் மிக எளிமையான சொற்றொடர்களின் தொடுப்புகளால் ஆனவையாகவே பெரும் பாலும் வெளிவருவது கவனிக்கத்தக்கது. மேலும் இவை சோலைக்கிளி கையாலும் உருவக எளிமைகளின் பாற்பட்டவையல்ல என்பதும், கவனிக்கத்தக்கது. அத்தோடு சிறு விசாரம் தொக்கிய அறிவின் இழையோட்டமும் சேர்ந்தவையாகவும் இருப்பது மற்றொரு அம்சமாகும்.

இதோ றஷ்மி 'நா' இழைத்த துயர் பற்றியதான கவிதையில்,

'என்னைத் தனியே விடுக
இந்தப் பிணி தொற்றி உன்னையும்
பீடித்தல் தகா'

என்னும் போது இவ்வாறு ஒரு எளிமையான வார்த்தைகளால் கவிதையை ஆக்கிச் செல்கிறார். இவ்வாறே அறபாத்தின் நடைப்பிணங்கள் என்ற கவிதை இவ்வாறு ஆரம்பிக்கிறது.

'நிலா மெலிந்து போன நேற்றிரவு
முற்றத்தில் உறங்கிப் போனேன்'

இன்னும் 'கடற்கரையில் நான் நின்ற பின்னேரம்' என்ற கவிதையில் கருணாகரன் பின்வருமாறு தொடங்குகிறார்:

'ஒரு பின்னேரம் பாழடைந்து போவதைக்
கண்டு
தலைகுத்தி விழுந்தேன் கண்ணீருக்குள்'

இவ்வாறு 90க்குப் பின்வரும் கவிதைகளில் எளிமையும் கூடவே அதனோடு ஒண்டிவரும் அறிவின் தேடலும் இழைவது முக்கிய பண்பு.

இத்தகைய பண்புக்கு இலக்கணமாகவே அமரதாஸின் கவிதைகளும் உள்ளன. இக்கவிதைகளின் இன்னொரு அம்சம் என்னவெனில், தனித்தனியே வரும் வரிகள், சொல்வதை விட கூட்டு மொத்தமாக சொல்வதிலும் அவை விழுத்த முயலும் படிமங்களிலுமே கவித்துவம் இழைவதைக் காணலாம். அமரதாஸின் 'முகம் பற்றி', 'புத்தகம் பற்றி', 'குற்றம் பற்றி' ஆகிய கவிதைகள் இவற்றுக்கு நல்ல உதாரணம்.

அமரதாஸின் 'இயல்பினை அவாவுதல்' கவிதை நூல் விமர்சனத்தை வோல்ட்விட்மன் தன் கவிதைகளை ஆரம்பத்தில் வெளியிட்ட போது எழுதிய கவிதையை மேற்கோள்காட்டி முடிக்கலாம்:

'பெருமை மிக்க நூலகங்களோ, எனக்கு
நின்
கதவுகளை மூடாதீர் ஏனெனில்
எல்லாம் நிறைந்த உங்கள் நூலடுக்குத்
தட்டுகளில்
நான் கொணருபவையும் மிக
அவசியமானவையே.....'

*மு.பொ*

திருகோணமலை:

வலயக் கல்விப் பணிமனையின்

## தமிழ் மொழித்தின சிறப்பு மலர்

திருகோணமலை வலயக் கல்விப் பணிமனையின் "தமிழ் மொழித்தினம் சிறப்பு மலர் 2000" நாற்பத்திரண்டு பக்கங்களில் மிக நேர்த்தியாக மலர்ந்திருக்கிறது. அட்டைப் படத்தை ஆசிரியர் ச.அருண் பாஸ்கரன் வரைந்திருக்கிறார்.

வலய மட்டத்தில் தமிழ் மொழித் தினப் போட்டிகளில் முதலிடம் பெற்ற மாணவர்களது ஆக்கங்கள் மலரை அலங்கரிக்கின்றன. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மாணவன் செல்வன் அ.டிலான் ஜெயந்தனின் கரையும், 'தொடாத அலைகள்' என்ற சிறுகதையும் புனித சூசையப்பர் கல்லூரி மாணவன் செல்வன் சி.அப்துல் பாரிஸின் "கர்ணன்" என்ற கவிதையும், அதே கல்லூரி மாணவன் செல்வன் சி.சோபனின் "தமிழ் மொழிவளர்ச்சியில் கணனியின் பங்கு" என்ற கட்டுரையும், விவேகானந்தா கல்லூரி மாணவன் செல்வன் தர்மராஜா தனுவிந்தாவின் "உண்மை" குறு நாடகமும் "தமிழ்ப் பணியாற்றிய சுவாமி விபுலானந்தர்" என்ற ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரி மாணவி செல்வி மைதிலி விவேகானந்தனின் கட்டுரையும் படிப்போர் வியக்கும் வண்ணம் அமைந்திருக்கின்றன.

தமிழ் மொழித்தின வலயப் போட்டிகளில் வெற்றி பெற்றோர் பட்டியலும் தமிழ் மொழித்தினச் செயற்குழு உறுப்பினர்கள் மலர்க்குழு உறுப்பினர் ஆகியோரின் பெயர் விபரங்களும் மலரில் இருக்கின்றன.

அதேபோல் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு வழங்குவதற்கென கிண்ணங்கள், கேடயங்கள், அன்பளிப்புச் செய்தோர் பட்டியலும் காட்டப்பட்டிருக்கின்றது.

ஆனால், நன்றி கூறவந்த தமிழ் மொழித்தின அமைப்புக் குழுவின் செயலாளர் எஸ்.சிவநிர்த்தானந்தா நடுவர்களாகப் பணிபுரிந்தவர்களை மட்டும் விட்டு விட்டு வேறு எங்கோ-



வெல்லாம் துருவிச் சென்று நன்றி கூறியிருக்கிறார்கள். நடுவர்களைக் கவனத்தில் எடுக்காமல் செயல்படும் கடந்த காலத் தவறை சிவநிர்த்தானந்தாவும் தொடர்ந்து வருகிறாரா என்று கேட்கத் தோன்றுகிறது.

"கற்க கசடறக்கற்க" என்ற வாக்கியத்தைத் தாரக மந்திரமாகக் கொண்டு அமைக்கப்பட்ட மலரில் வெற்றிடங்கள் ஏற்படாவண்ணம் பயன்தரும் பொன் மொழிகள், கவிதைகள் இணைக்கப்பட்டிருப்பது பாராட்டுக்குரியது.

பாடநூல்களின் பிழைகளைச் சுட்டிக்காட்டும் ஆசிரியப் பெருந்தகைகள் தங்கள் நூலில் அதுவும் தமிழ் மொழித்தின விழா மலரில் பிழைகள் விட்டிருப்பது கவலை தருவதாக இருக்கிறது.

எவ்வாறாறெனினும் மாணவர்கள் ஆக்கங்கள் சுமந்து வருகின்ற மலர் என்ற வகையில் மனநிறைவாய்ப் பாராட்ட முடிகிறது.

**– விவேகி**

பலவீனமான

## 'காலத்தின் குரல்'

'காலத்தின் குரல்" எனும் பெயருடன் "நவீன தமிழ் இலக்கியத்தின் ஒரு நூற்றாண்டு காலப் பயணத்தின் சுவடுகளைப் பதிவு செய்யும் படைப்புகளும் விவாதங்களும் எனத் தன் நோக்கை முன் வைத்து வெளி வந்திருக்கிறது இந்தியா ருடேயின் இலக்கிய மலர்.

இம்மலர் பிரபுசாவ்லாவை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்திருக்கிறது.

இம்மலரில் "தமிழ் இலக்கியம் சாதனைகளும், போதாமைகளும்" எனும் தலைப்பில் இந்திய தமிழ் இலக்கியத்தின் பிரபல்யமான எழுத்தாளர்களான சுந்தரராமசாமி, பிரபஞ்சன், ராஜம் கிருஸ்ணன், சாரு நிவேதிதா, ரவிக்குமார் ஆகியோர் வாஸந்தியின் ஒருங்கிணைப்பில் நடாத்திய விவாதம் முன் இடத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றது. இந்தியாவின் பிரபல்யமான எழுத்தாளர்களும், சர்ச்சைக்குரியவர்களாய் இருந்த எழுத்தாளர்களும் பங்குபற்றியிருந்தாலும் கூட விவாதம் தலைப்பிற்கு ஏற்றளவுக்கு போதாமையாகவும் நிறைவின்மையாகவுமே உள்ளது. விவாதம் குறுகிய வட்டத்தினுள் சிக்குண்டு போனது ஒரு காரணம். இதனால் விவாதத்திற்குள் கடந்த நூற்றாண்டின் முக்கிய பல எழுத்தாளர்களும் அவர்களது படைப்புகளும் பற்றிய கருத்துகள் அப்பொக்குகள் குறித்த அபிப்பிராயமும் எழாமலேயே போயுள்ளது.

சிறுகதைகள் பகுதியுள் பல பிரபல்யமான எழுத்தாளர்களின் சிறுகதைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஜெயமோகன், பிரபஞ்சன், வாஸந்தி, அசோகமித்திரன், பொன்னீலன், இமையம், வண்ணநிலவன், தர்மன், சாரு நிவேதிதா , தமயந்தி, திலகவதி போன்ற எழுத்தாளர்களின் சிறுகதை-



கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

தமயந்தியின் - ஒரு பேனாவின் அல்லது பெண்ணின் கதை, இமையத்தின் - உறவு, பொன்னீலனின் - மந்திரம், வாஸந்தியின் - ஜீவரேகை போன்ற சிறுகதைகள் ஓரளவு குறிப்பிடும் படியான சிறுகதைகளாக உள்ளன.

கவிதைகளிலும் கலாப்ரியா, பாவண்ணன், மனுஸ்யபுத்திரன், எம்.யுவன் சுகந்தி சுப்பிரமணியம், போன்ற பல கவிஞர்களின் கவிதைகள் வெளிவந்துள்ளன.

அதே போல் நாடகத்தில் இந்திரா பார்த்தசாரதியின் - தர்மம், கே.டி.குணசேகரனின் - பவளக் கொடி அல்லது குடும்ப வழக்கு ஆகிய இரண்டு நாடகங்கள் வெளிவந்துள்ளன. இவை பழையதை வெள்ளையடித்து புரட்டிப் போட்டதைப் போன்று கருவில் புதுமையோ சிறந்ததென்றோ சொல்ல முடியாதவையாகவே உள்ளன.

சினிமாவில் சென்ற நூற்றாண்டின் தமிழ் சினிமா - ஒரு பின்னோக்கிய பயணம்- ராண்டர் கையின் கட்டுரை ஒன்றும் வெளிவந்திருக்கிறது. கடந்த நூற்றாண்டில் தமிழ் சினிமா கண்டிருக்கும் வளர்ச்சி தொழில் நுட்பத்தில் தான் மட்டும் தான் என்பதை கடந்த காலகட்டங்களை ஆராய்வதன் ஊடாக நிரூபித்திருக்கிறார். உண்மை தான். வண்ணத் திரையின் முகங்கள் பல கால கட்டங்களில் சினிமாவை தமது தனிப்பட்ட ஆளுமைகளின் மூலம் எம்.ஜி.ஆர்., சிவாஜி, இளையராஜா, ஏ.ஆர் ரகுமான் என்று கட்டிப் போட்டிருந்த பலர் பற்றியும் நோக்கியிருக்கும் இக்கட்டுரை ஓரளவு சுருக்கிய வரலாற்றைக் கொண்டு எழுதப்பட்டுள்ளது. கடந்த நூற்றாண்டின் தமிழ் சினிமாவின் முக்கிய காலகட்டங்களை ஆராய்வதோடு கருத்தாக்கத்தில் தமிழ் சினிமாவின் பூச்சிய நிலையை வரலாற்றின் மூலம் சுட்டிக்காட்டியுள்ளார். ஓரளவு சிறப்பாக எழுதப்பட்டுள்ளது. ஆனாலும் ஆக்க பூர்வமான விமர்சனத்தை இன்னும் சேர்த்திருக்கலாம் என்று தோன்றுகின்றது.

மொத்தத்தில் இலக்கிய மலரை பார்க்கும் போது தமிழ் இலக்கிய வளர்ச்சி இவ்வளவு தானா என்று எண்ணத் தோன்றுவதை தவிர்க்க முடியாதுள்ளது.

இத்துடன் இங்கு எழும் முக்கிய கேள்வி தமிழ் இலக்கியம் என்பதற்குள்

⊃19

# படையினர் கைவிரிப்பு!

இரத்மலானை - மொறட்டுவை எல்லைப் பகுதியில் உள்ள மாளிகாவை வீதிக்கு அண்மையில் 07. 06. 2000 அன்று நடைபெற்ற குண்டு வெடிப்பை அடுத்து அருகேயுள்ள தமிழ், முஸ்லீம் மக்கள் அதிகமாகச் செறிந்து வாழும் சொய்சாபுர வீடமைப்புத் திட்டத்திலுள்ள தமிழ் மக்கள் மீதும், அவர்களுக்குச் சொந்தமான வீடுகள் மீதும் கட்டவிழ்த்து விடப்பட்டு நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவங்களும் நாம் அறிந்தவையே.

இச் சம்பவங்களின் போது சொய்சாபுர, காலி வீதியில் அமைந்திருந்த சைவக் கடை ஒன்றும், அதன் உரிமையாளரது உறவினர் ஒருவருக்குச் சொந்தமான அதன் அருகே இருந்த சலூன் ஒன்றும் அதன் யன்னல், அலுமாரி கண்ணாடிகள் அனைத்தும் கத்தி, பொல்லு, கோடரிகள் போன்றவற்றுடன் வந்த காடையர் கும்பலால் அடித்து நொருக்கப்பட்டன.

குண்டு வெடிப்புச் சத்தம் கேட்டவுடன், விபரீதம் ஏதோ நடைபெற்றுள்ளதை அறிந்து தனது சலூனைக் காடையர்களின் தாக்குதலிலிருந்து பாதுகாப்பதற்காக மூடினார் சொய்சாபுரவிலுள்ள இன்னொரு சலூன் உரிமையாளரான வைரமுத்து பாலசிங்கம். வைரமுத்து பாலசிங்கம் சலூனை மூடியது ஏன் என்று கேட்டுச் சந்தேகத்தின் பேரில் இவர் கைது செய்யப்பட்டுள்ளார். ஆனால் இப்போது இந்தப் பெயர் கொண்ட எவரையும் தாம் கைது செய்வில்லை என்று கைவிரிக்கின்றது படைப்பிரிவும் பொலிஸ் தரப்பும். இரு பிள்ளைகளின் தந்தையான இவரது உயிருக்கு ஆபத்து ஏதாவது ஏற்படலாம் என இவரது மனைவியும், உறவினர்களும் அஞ்சுகின்றனர். இவர் நீண்ட காலமாகவே சொய்சாபுரப் பகுதியில் வாழ்ந்து வருபவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

. எஸ். எஸ்.

# படையதிகாரி

தற்போது அரசாங்கத்தினால் செய்திகளை தணிக்கை செய்யும் அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ள ஸ்ரீபதி சூரிய ஆராய்ச்சி வடக்கில் கடற்படை சேவையில் ஈடுபட்டிருந்த வேளை, அங்கு வாழும் மக்களை துன்புறுத்தினார் என்ற குற்றச்சாட்டு சுமத்தப்பட்டவர் என கடற்படை சட்டப்பிரிவு தகவல்களிலிருந்து தெரிய வருகின்றது.

கடற்படையின் மேற்குப் பிரதேசத்திற்கு பொறுப்பான தற்போதைய கட்டளையிடும் அதிகாரி ரியர் அட்மிரல் றசீக் அவர்கள், வடக்கில் கட்டளையிடும் அதிகாரியாக இருந்தபோது தமிழ் மக்களிடமிருந்து கிடைத்த முறைப்பாடுகளின் பேரில் அவர் கடற்படை நீதிமன்றத்தில் ஆஜராக்கப்பட்டதுடன் குற்றம் நிரூபிக்கப்பட்டு அவரது பதவியுயர்வு இடைநிறுத்தப்பட்டது என மேலதிக தகவல்கள் தெரிவிக்கின்றன. பின்னர் அவர் கடற்படையிலிருந்து விலகிச் சென்றுள்ளார்.

# உலகத் தமிழர் ஆவணக் காப்பகம்

கண்டியில் அமைந்துள்ள உலகத் தமிழர் ஆவணக் காப்பகத்தில் 31.12.1999 வரையான காலத்திற்குட்பட்ட சுமார் 7500 கட்டுரைகள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றை விட தமிழரின் புலம் பெயர் சஞ்சிகைகள் மற்றும் பத்திரிகைகளும் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. இச்சேகரிப்புக்களை ஆய்வுக்காக பயன்படுத்த விரும்புவோர் வரவேற்கப்படுகின்றனர். உதிரியாக ஒரு சில புலம்பெயர் சஞ்சிகைகள், பத்திரிகைகளை வைத்திருப்போர் விரும்பின் அவற்றை இக்காப்பகத்திற்கு அனுப்பி வைக்குமாறும் வேண்டுகோள் விடுக்கப்படுகின்றது.

புலம்பெயர் சஞ்சிகைகள், பத்திரிகைகள் மற்றும் நூல்களை புதிதாக வெளியிடுவோர் ஒவ்வொரு பிரதியை கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

128|8.HETTIYA WATTE,
MULGAMPOLA
KANDY
PHONE - 08-233547

# இறுதி நம்பிக்கைக்கும்....

எதுவும் செய்ய முடியாத நிலையில் அமைதியாகவே இருந்தார்கள்.

அவர்கள் எதிர்பார்த்ததுபோல் இரவு மாணவர் விடுதிக்குள் பொலிசார் நுழைந்தார்கள். அவர்களுக்கு உதவியாகச் சிங்கள மாணவர்களும் செயல்பட்டார்கள். நூற்றுக்கு மேற்பட்ட தமிழ் மாணவர்கள் விடுதிகளில் தங்கியிருந்தாலும் பொலிசார் தொகை குறைவாக இருந்தாலும் சிங்கள மாணவர்கள் "மச்சான் மச்சான்" என்று உரையாடிமகிழ்ந்த தமிழ் மாணவர்களுக்கெதிராக பொலிசாரைக் காட்டிலும் வேகமாகச் செயல்பட்டார்கள்.

ஊர்க்காவல் படை போன்று நடந்துகொண்ட சிங்கள மாணவர்களின் ஒரு பகுதியினர் தமிழ் மாணவர்கள் தப்பியோடி விடாதபடி விடுதியைச் சுற்றிலும் காவல் நிற்க வேறு சிலர் தமிழ் மாணவர்களின் அறைகளைப் பொலிசாருக்கு அடையாளம் காட்டியதோடு, பூட்டப்பட்டிருந்த தமிழ் மாணவர்களது அறைகளையும் உடைத்துச் சோதனை செய்தார்கள். நன்றாகப் பழகிய நண்பர்களிடமே அடையாள அட்டைப் பரிசோனை செய்து மல்லமால் கேள்வி மேல்கேள்வி கேட்டுத் துளைத்திருக்கிறார்கள்.

இறுதியாண்டுப் பரீட்சை எழுதிக்கொண்டிருக்கும் சிங்கள மாணவர்கள் கூட அடுத்த நாள் நடைபெறவிருக்கும் பரீட்சைக்கு ஆயத்தப்படுத்துவதை விடுத்து பொலிசாரிடம் இணைந்து அதிகாலை 3 மணிவரை துணைப்படையாகச் செயல்பட்டிருக்கின்றார்கள் என்றால் இவர்கள் எந்தளவு தூரம் இனவாதத்துக்குள் ஊறியுள்ளார்கள் என்று சொல்லாமலே புரியும்.

இந்த நாடகத்தின் முடிவில் 58 தமிழ் மாணவர்கள் புலியென குற்றச்சாட்டுடன் மொறட்டுவைப் பொலிஸ் நிலையம் கொண்டு செல்லப்பட்டார்கள். இவர்கள் அனைவரும் அதே பொலிஸ் நிலையப் பதிவு பெற்றுத்தான் தங்கியிருக்கிறார்கள் என்பதோ பல்கலைக்கழக மாணவர்கள் என்பதற்காக அவமானங்களைச் சரிவர நிருபிக்கக்கூடியதாக இருக்கிறார்கள் என்பதோ பொலிசாரின் கவனத்திற் கொள்ளப்படவில்லை.

பின்னர் பல்கலைக்கழக நிர்வாகத்தின் தலையீட்டாலும், பாராளுமன்ற உறுப்பினர்களின் பரிந்துரைகளாலும் 3 கட்டங்களில் இம் மாணவர்கள் விடுவிக்கப்பட்டபோதும் இறுதியாண்டுப் பரீட்சை எழுதிக்கொண்டிருந்த தமிழ் மாணவர்கள் இந்தக் கைது நடவடிக்கைகளால் கற்கும் முனைப்பையிழந்து மனமுடைந்து போயிருக்கிறார்கள்.

விசாரணையின் போது அதிகாரிபொருவர் "உங்கள் பல்கலைக்கழக மாணவர்கள் தாம் உள்ளே புலி தங்கியிருப்பதாகக் கூறினார்கள். அது தான் உங்களை இங்கே கொண்டுவர வேண்டியதாயிற்று" என்று கூறியமை தமிழ் மாணவர்கள் மத்தியில் ஒரு வித விரக்தி நிலையைத் தோற்றுவித்திருக்கிறது.

கொழும்பில் இனிமேல் எங்கு பொறிவிழுந்தாலும் அது தங்கள் மேல் தீயாகப் பற்றிக் கொள்ளக்கூடும் என அஞ்சும் மொறட்டுவைப் பல்கலைக்கழகத் தமிழ் மாணவர்கள் இத்தகைய விஷமச் சம்பவங்கள் தொடருமானால் தாங்கள் பொறியாக மாறினால் என்ன என்று சிந்தித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

திரிபுரன்

# முஸ்லிம் மக்களின்...

தமிழ் மக்களின் தாயக பூமி என்றும், விடுதலைப் புலிகள் தனித் தமிழீழம் என்றும் உரக்கச் சொல்லும் முஸ்லிம்களை எதை நோக்கித் தள்ளி விடும் என்பதை தமிழ் தரப்பு சற்று சிந்திக் வேண்டும்.

### ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்

இந்தப் பிரச்சினையில் முஸ்லிம்கள் தவறு இழைக்கவில்லை என்றோ ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எப்போதும் தீர்க்கமான அரசியல் முடிவுகளை எடுத்து வந்திருக்கிறது என்றோ சொல்வதற்கில்லை. அதனுடைய அரசியல் நடவடிக்கைகள் சிங்கள பேரினவாத அரசாங்கத்திற்கு பல தடவைகள் சார்பு நிலை எடுத்துத் தான் வந்துள்ளது. இந்த நிலைப்பாடுகள், அடிப்படையில் வடக்கு கிழக்கு முஸ்லிம்களின் அரசியல் அபிலாசைகளை புறம்தள்ளி பாராளுமன்ற அரசியலின் சீர்கேட்டின் வடிவங்களின் செயற்பாடாக மாறி நின்றிருப்பதையும் நிற்பதையும் காண்கின்றோம். தமிழ் அரசியல் தலைமைகள் முஸ்லிம்களை அங்கீகரிப்பதன் ஊடாகவும் அவர்களின் அதிகாரத்திற்கான நியாயமான கோரிக்கைகளை ஏற்றுக் கொள்வதன் ஊடாக முஸ்லிம்களை வென்றெடுப்பதன் மூலமுமே முஸ்லிம் காங்கிரஸை இந்த பேரினவாத சார்புநிலைப்பாட்டிலிருந்து விலக்கி எடுக்க முடியும் என்பதை தமிழ் அரசியல் தலைமைகள் உணர்ந்தால் சரி. இல்லையேல் இன்னுமின்னும் முஸ்லிம்களின் அரசியலை நிராகரித்து, அவர்களின் அரசியல் நியாயப்பாட்டுத் தன்மைகளை ஏற்காதவரை முஸ்லிம்களின் அரசியல் தலைமை வழி தடுமாறுவதையும் எதிர்காலத்தில் முஸ்லிம்கள் போராடுவதைத் தவிர வேறு வழியில்லை என்பதை உணர்வதையும் தடுத்து நிறுத்த முடியாது போய்விடும்.

இப்பத்தி எழுதும் போது விடுதலைப் புலிகள் பிரசுரம் ஒன்றின் ஊடாக முஸ்லிம் மக்களுக்கு ஒரு செய்தியினை விடுத்துள்ளார்கள் என இணையச் சேவை ஒன்று தெரிவிக்கின்றது. "தமிழர்களுடன் இணைந்து இலங்கை ஆதிக்க அரசுக்கெதிராக போராட வருமாறும் தமிழீழம் என்பது முஸ்லிம்களுக்கும் உரியதே" எனவும் வெறும் இராணுவப் பார்வையுடனான செய்தியினை அறிவித்துள்ளனர். இச் செய்தியின் பெறுமதி என்ன? இது எதனைச் சொல்ல வருகிறது? முஸ்லிம்கள் பயன்படுத்தப்படுவார்கள் என்பதை சொல்ல வருகின்றது என்றே நான் கருதுகிறேன். சிங்கள தலைமைகள் காலத்துக்கு காலம் முஸ்லிம்களை பயன்படுத்துகிறார்கள். தமிழ்த் தலைமைகள் பயன்படுத்தினார்கள் பின்பு கொல்வார்கள், வெளியேற்றுவார்கள். பின்பு பயன்படுத்துவார்கள் இதுதான் முஸ்லிம்களின் தலைவிதியா? கறிவேப்பிலைக்கு ஒப்பான மக்கள் கும்பலா முஸ்லிம்கள்? முஸ்லிம்களை அங்கீகரிப்பது என்பது அவர்களின் அரசியல் அபிலாசைகளை, அவர்களின் மதத் தனித்துவத்தை கலாசாரத்தை, அவர்களின் மண்ணை அங்கீகரிப்பதுடன் தொடர்புடையது. இன்னும் இந்த விடயத்தில் விடுதலைப் புலிகள் மேம்போக்காக செயற்படுவது வரலாற்றின் மிகப்பெரும் அவலத்திற்கும் சோகத்திற்கான முதல் அத்தியாயமாக உள்ளது.

வரலாறு தான் முஸ்லிம்களின் அரசியல் நிலைப்பாட்டினை தீர்மானிக்கும்.

# பிள்ளையையும்...

தான் இந்தச் சபை. இச் சபைக்கு இன்றுள்ள அதிகாரங்களை விட விஷேடமாக எந்த அதிகாரங்கள் இருக்கப் போகின்றன?

அப்படி மேலதிக அதிகாரம் ஒன்றும் இல்லை என்றால் மாகாண சபை தேர்தலை நடாத்தி மாகாண சபையை இயங்க வைக்கலாமே? மாகாணசபைத் தேர்தலை நடாத்துவதில் என்ன சிக்கல் இவர்களுக்கு? ஜனாதிபதி தேர்தலை நடாத்த முடியும் என்றால் ஏன் மாகாணசபை தேர்தலை வடக்கு கிழக்கில் நடாத்த முடியாது? பெட்டிகளை நிரப்ப தொகுதிகளுக்கு போக வேண்டிய அவசியம் ஏதும் இல்லையே?

உலக நாடுகளுக்கும் தமிழ் முஸ்லிம் மக்களுக்கும் மீண்டும் ஒரு முறை காதில் பூவைக்க அரசாங்கம் முனைகிறது. அதற்கு விலையாக இந்த தமிழ்க் கட்சிகட்கு கொடுக்கப்பட உள்ளது தான் இந்த 'இடைக்கால நிர்வாக சபை'.

கொலைக் கலாசார புலிகளுக்கு அதில் இடமில்லை என்று அம்மையார் அறிவித்திருப்பதை வரவேற்கலாம். கொலைக் கலாசாரத்தை அவர் உண்மையில் எதிர்ப்பதாக இருந்தால் முதலில் வரதரையும், ஈ.பி.டி.பியையும் வெளியேற்றிவிட்டு பிறகு இடைக்கால நிர்வாக சபை பற்றிப் பேசட்டும் அப்படிப் பேசினால் அது அர்த்தமுள்ள பேச்சாக இருக்கும்.

அல்லாவிட்டால் அவர் எதிர்ப்பது கொலைக் கலாசாரத்தை அல்ல, புலிகளை மட்டுமே என்ற உண்மை மட்டுமே அம்பலமாகும். அவ்வளவு தான்!

# தவறிற்கு வருந்துகிறோம்

## கொக்கக்கோலாவின் இன ஒதுக்கல்!

– 197வது இதழில் விடுபட்ட பகுதி

பூகோள மயமாக்கலின் விளைவாக இன்று தொழிலாள வர்க்கத்திற்கும் முதலாளி வர்க்கத்திற்கும் இடையில் கூர்மை குறைந்து வருவதாக பல ஆதாரங்களுடன் வெளியிட்டார்" கட்டுரையாளர். பேராசிரியர் மேற்படி கூற்றுக்கு சார்பாக பல ஆதாரங்களை வெளியிட்டுள்ளார் என்று சொல்லிச் செல்வதுடன் இது சம்பந்தமான கட்டுரையை எழுதுவார் என எதிர்பார்க்கின்றார். எனவே விவாதம் செய்வதாயின் பேராசிரியரின் கட்டுரையின் வரவை நாங்கள் எதிர்பார்த்து இருக்கின்றோம் என்று சொல்லிக் கொண்டு அது தொடர்பாக இங்கே சில விடயங்களைக் குறிப்பிடுகிறேன்.

உதாரணத்திற்கு பேராசிரியரினால் முன்வைக்கப்பட்ட ஒரு காரணம் "ஒரு நிறுவனத்தின் வியாபாரம், தொழிற்சாலை, உற்பத்தி, உலகின் பல நாடுகளிலும் பரவியுள்ளது என்பதாகும். ஆனால், உண்மையில் என்ன நடக்கின்ற தென்றால் பூகோள மயமாக்கலின் மூலம் தொழிலாளர் வேலை இழப்பும், தொழிலாளர் மேலான சுரண்டலும் அதிகமாகி தொழிலாளி முதலாளிக்கிடையிலான முரண்பாடு கூர்மை அடைவதுடன் ஒரு புதிய எழுச்சியும் உலகத் தொழிலாளிடையில் ஒரு பரந்த ஐக்கியமும், உருவாகி வருவதைத் தான் நாம் நடைமுறையில் காண்கின்றோம். உதாரணத்திற்கு அமெரிக்காவில் Seatle நகரில் அண்மையில் W.T.O. இற்கு எதிரான போராட்டமே இதற்குக் கட்டியம் கூறி நிற்கின்றது. அது மாத்திரமல்ல கனடாவில் ஆடைத் தொழிற்சாலையொன்று குறைந்த சம்பளமாக $6.85 வழங்கியது. இப்போது அத்தொழிற்சாலை மெக்சிக்கோவில் இயங்கி 1$ சம்பளத்திற்கு வேலை வாங்குவதன் மூலம் பல கனேடியத் தொழிலாளர்கள் வேலை இழப்பதுடன் மெக்சிக்கோ தொழிலாளர் மிக மோசமாகச் சுரண்டப்படுகின்றார்கள். இதுதான் உண்மை.

பேராசிரியரின் கட்டுரை வெளிவந்தால் தொடர்ந்து நாம் விவாதிக்கலாம் தானே.

# பலவீனமான......................

ஈழத்து, சிங்கப்பூர், மலேசிய, புலம் பெயர்ந்தோர் தமிழ் இலக்கியங்கள் உள்ளடங்காதா? ஏனெனில் உள்ளடக்கம் இந்திய தமிழ் இலக்கியத்தையே முழுவதுமாக கொண்டுள்ளது. அப்படியெனின் இந்திய இலக்கியங்கள் தவிர்ந்த மற்றைய தமிழ் இலக்கியங்கள் என்ன வகையில் அடங்கும் என்று முனைத்து நிற்கும் கேள்விக்கு தமிழ் நாட்டு இலக்கிய மேதாவிகளின் பதில் தான் என்ன?

முடிவில், நவீன தமிழ் இலக்கியத்தின் ஒரு நூற்றாண்டுக் காலப் பயணத்தின் சுவடுகளைப் பதிவு செய்யும் படைப்புகளும் விவாதங்களும் என்று கூறும் இலக்கிய மலரில் இந்திய தமிழ் எழுத்துக்களை மட்டுமே முழுவதுமாக உள்ளடக்குவது பொருத்தமானதல்ல. தமிழ் இலக்கியம் என்ற வட்டத்தில் எப்படி சிறுகதை, கவிதை, நாடகம், சினிமா, என பல உள்ளடக்கப்படுகின்றனவோ அதே போல் தமிழ் இலக்கியம் எனக் குறிப்பிடும் போது, ஈழத்து தமிழ் இலக்கியம், இந்திய தமிழ் இலக்கியம், சிங்கப்பூர் தமிழ் இலக்கியம், மலேசிய தமிழ் இலக்கியம், புலம் பெயர்ந்தோரின் தமிழ் இலக்கியம் என்பன உள்ளடக்கப்பட வேண்டும்.

வெங்கட்சாமிநாதன் அவர்கள் தமிழ் நாட்டு தமிழ் நாடக இலக்கியம் பற்றி ஒரு தொடர் கட்டுரையை சரிநிகரில் முன்பு ஒரு தடவை எழுதியிருந்தார். அக்கட்டுரையின் தலைப்புக் கூட '80, 90களில் தமிழ் நாடக இலக்கியம்' என்று தான் இருந்தது. தமிழ்நாட்டு தமிழ் நாடக இலக்கியம் என்று அல்ல.

'தமிழ் இலக்கியம்' என்ற சொற்றொடர் தமிழ் நாட்டிற்கு மட்டும் சொந்தமானதல்ல. தமிழ் நாட்டு இலக்கியத்தையே தமிழ் இலக்கியமாகப் பார்க்கும் போக்கு நீண்ட காலமாகவே, ஒரு வகையில் அதன் 'பெருந்ததன்மை' காரணமாகவே இருந்து வருகின்றது.

இவர்கள் தமிழ் இலக்கியத்தில் மேலாதிக்கம் செலுத்தும் போக்கை கைவிட்டு தமிழ் இலக்கியம் என்று குறிப்பிடும் போது ஈழத்து இலக்கியம், புலம் பெயர் ஐரோப்பிய நாடுகளின் இலக்கியம், மற்றும் சிங்கப்பூர், மலேசிய இலக்கியம் என்பவற்றையும் கணக்கில் எடுத்துக் கொள்ளவேண்டும். அல்லது தமிழ்நாட்டுத் தமிழ் இலக்கியம் என்று வரையறுத்துக் கொள்வது நல்லது.

தமிழ்நாட்டு இலக்கிய ஜாம்பவான்கள் கவனத்தில்கொள்வார்களா?

– ரமா

Registered as a Newspaper in Sri Lanka

# சரிநிகர்

இரு வாரங்களுக்கு ஒரு முறை

"சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே"
-பாரதி

இல. 19/04, 01/01, நாவல வீதி, நுகேகொட.
தொலைபேசி / தொலைமடல் : 814859, 815003, 815004.
மின்னஞ்சல்: sarini@sltnet.lk

## படுகொலைக்கு நிதி!

நாட்டை யுத்த முனைப்புடன் நடாத்திச் செல்வதற்காகப் பிரகடனப்படுத்தப்பட்ட அவசர காலச் சட்ட விதிகள் ஏற்கெனவே நாட்டு மக்களின் குரல் வளையைத் திருக ஆரம்பித்து விட்டன.

ஏற்கெனவே, நாம் எமது பத்திரிகையில் சுட்டிக் காட்டியபடி, இந்தச் சட்டம் வெறுமனே யுத்தம் சம்பந்தப்பட்டு மட்டுமல்லாமல் வாழ்வின் எல்லா அம்சங்களிலும் மக்களுக்கு நெருக்கடியைத் தரும் என்ற விடயம் வர வர உண்மையாகி வருகிறது.

டீசல், சமையல் வாயு விலையுயர்வு, பஸ் கட்டண உயர்வு என்பனவற்றுடன் சேர்ந்து இவற்றின் உயர்வு காரணமாக உணவுப் பொருட்கள் உள்ளிட்ட அனைத்து அத்தியாவசியத் தேவைப் பொருட்கள் மற்றும் பண்டங்களின் விலைகள் வானத்தைத் தொட்டுவிடும் வேகத்துடன் கிடுகிடென்று ஏறிவிட்டிருக்கின்றன.

மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்தது போல அரசாங்கம் பாதுகாப்பு வரியை 01மூ ஆல் அதிகரித்ததுடன் நில்லாது, இப்போது அரசாங்க, தனியார் துறை ஊழியர்களை ஆகக் குறைந்தது இரண்டு நாள் சம்பளத்தைத் தருமாறு கோரியிருக்கிறது.

அரசாங்கத்தின் அநியாயமான, தமிழ், முஸ்லீம் மக்களை யுத்த பீதிக்குள் வைத்திருக்கின்ற,படுகொலை செய்கின்ற யுத்தத்தை நியாயப்படுத்தும் நடவடிக்கை தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. சமாதானம், அரசியல் தீர்வு என்பன இன்று வெறும் பேச்சுக்கு உச்சரிக்கப்படும் சொற்களாக மாறி யுத்தம், யுத்தத்திற்கு நிதி என்பனவே எங்கும் பேசப்படும் விடயங்களாகி விட்டன.

யுத்தம் ஒரு புறத்தில் தமிழ், முஸ்லீம் மக்களை அழித்தொழிக்கும் செயலைச் செய்யும் அதேவேளை, படையில் சேர்ந்துள்ள பல சிங்கள இளைஞர்களைக் காவு கொடுத்தும், அங்கவீனர்களாக்கியும் வருகின்றது.

இதனால் சிங்கள மக்கள் மத்தியில் எழுந்து வரும் எதிர்ப்பலைகளைக் கட்டுப்படுத்த, யுத்தத்தை நியாயப்படுத்தவும், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட படை வீரர்களைப் பராமரிக்கவும் உரிய பல ஜனரஞ்சகமான செயல்களில் அரசாங்கம் ஈடுபடத் தொடங்கியுள்ளது.

ஒரு புறத்தில் யுத்தத்தில் கரியாக்கப்படும் பெருந் தொகைப் பணத்தை ஈடுசெய்ய வரி அதிகரிப்பு, விலை உயர்வு போன்றவற்றைக் கொண்டு வந்து, மக்கள் சற்றும் விரும்பாத யுத்தத்தின் சுமையை அவர்கள் மீது சுமத்தியிருக்கிறது அரசாங்கம். மறு புறத்தில் இதனால் ஏற்படப் போகும் மக்களின் எதிர்ப்புக்களைச் சமாளிக்கப் பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

அவசர காலச் சட்ட விதிகளின் கீழ் மக்களின் எதிர்ப்புகளை நசுக்கும் சட்டங்களை உருவாக்கி வைத்திருக்கிறது.

போர் வீரர்களைத் தேசிய வீரர்களாக உயர்த்தி, அவர்களில் பாதிக்கப்பட்டோரைப் பராமரித்தல், அவர்களது குடும்பத்திற்கு உதவுதல் போன்ற செயல்களுக்காக மக்கள் மத்தியில் ஸ்தாபனங்களை உருவாக்கி வருகிறது. தொடர்பு சாதனங்கள் மூலம் இதற்கான பிரச்சாரத்தையும் அரசு முடுக்கி விட்டுள்ளது.

அண்மையில் சிரச தொலைக்காட்சி தமது இரண்டாண்டு நிறைவையொட்டி யுத்த வீரர்கட்கான நிதி சேகரிப்புக்காக நேரடி நிகழ்ச்சி ஒன்றை நடாத்தியது. நிகழ்ச்சி நடாத்தப்பட்ட இரண்டே மணி நேரத்தில் 17 இலட்சம் ரூபாய் சேகரிக்கப்பட்டது.

யுத்த வீரர் நிதியத்திற்காகப் பத்திரிகை விளம்பரங்கள், இணையத் தளங்கள் எல்லாம் உருவாக்கப்படுகின்றன.

மக்களை ஏதோ ஒரு வகையில் யுத்தத்தின் பங்காளிகளாக்கும் நோக்கிலான சகல நடவடிக்கைகளும் தொடர்கின்றன.

இதற்கான நிதி சேகரிப்பு இப்போதெல்லாம் பரவலாக ஆரம்பிக்கப்பட்டு விட்டது.

இந்த நிலையில் தான் அரசாங்க, தனியார் துறை ஊழியர்களிடம் இரண்டு நாள் சம்பளத்தைத் தருமாறு கோரும் கோரிக்கையும் வெளியிடப்பட்டிருக்கிறது.

அரசாங்கத்திற்கு எடுபிடி வேலை செய்வதில், தமது கடமையையும், பொறுப்பையும் மறந்து செயற்படும் அடிவருடித்தனம் மிகவும் அதிகமாக உள்ள ஆசிரிய சேவை அதிகாரிகள், அரசாங்கம் எள் என்ற முன்பு எண்ணையாக நின்று நிதி சேகரிப்பில் இறங்கியுள்ளார்கள்.

பாடசாலை ஆசிரியர்கள் அனைவரையும், எவ்வளவு பணம் தருவீர்கள் என்று கேட்டுப் பத்திரங்கள் சுற்றுக்கு விடப்பட்டுள்ளன.

தமிழ் ஆசிரியர்கள் யுத்தத்துக்கு நிதி தருமாறு நேரடியாகவோ, மறைமுகமாகவோ வற்புறுத்தப்படுகின்றார்கள்.

தமது உறவினர்களையும், குழந்தைகளையும், சொத்துக்களையும் யுத்தத்தினால் நாள் தோறும் இழந்து கொண்டிருக்கும் தமிழ், முஸ்லீம் ஆசிரியர்களிடம் யுத்தத்துக்கு நிதி தருமாறு கட்டாயப்படுத்துவதைவிடக் கொடுமை வேறு ஒன்றுமில்லை.

ஏற்கெனவே பொருட்களை வாங்கும் போது பாவனையாளர்கள் என்ற முறையிலும், வங்கிக் கடன் பெற்றவர்கள் என்ற முறையிலும், வரியிறுப்பாளர்கள் என்ற முறையிலும் யுத்தத்துக்காகத் தவிர்க்க முடியாமல் - விரும்பியோ விரும்பாமலோ - பணத்தை அளந்து கொண்டிருப்பதன் காரணமாக இளைத்துப் போய் கொண்டிருக்கும் ஆசிரியர்கள் - குறிப்பாகத் தமிழ், முஸ்லீம் ஆசிரியர்கள் திரும்பவும் 02 நாள் ஊதியம் என்று வற்புறுத்தப்படுவது எந்த விதத்திலும் நியாயமானதல்ல.

அரசாங்கத்தினதும், அதன் எடுபிடி அதிகாரிகளதும், இந்தக் காசு பிடுங்கும் நடவடிக்கை, யுத்த நிதியைத் தர மறுக்கும் தமிழ் ஆசிரியர்களைப் புலி ஆதரவாளர் என்று முத்திரை குத்தும் அளவுக்கு வளர்ந்து விட்டுள்ளது.

மக்களைக் கணக்கு வழக்கின்றி சுரண்டி அநியாய யுத்தத்தில் பணத்தை வீணடிக்கும் சட்ட பூர்வ உரிமை இந்த அரசாங்கத்துக்கு - சமாதானத்தினை நிலை நாட்ட என்று கூறி வாக்குப் பெற்றுப் பதவிக்கு வந்த அரசாங்கத்திற்கு - கிடையாது. அதற்கான தார்மீக உரிமை கூட அதற்கு இல்லை.

இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கம், இந்தப் பாதுகாப்பு நிதியைத் தான் தரப் போவதில்லை என்று பகிரங்கமாக அறிவித்துள்ளது.

அரசாங்க ஊழியர்களே, தனியார் துறை ஊழியர்களே, இந்த நாட்டில் வாழ்கின்ற ஏனைய மக்களே, உங்களில் எவரையும் அநியாயமான இந்த யுத்தத்திற்காக நிதி வழங்குவது அவசியம் என்று கட்டுப்படுத்தும் உரிமை யாருக்கும் கிடையாது - இந்த அரசாங்கத்திற்குக் கூட.

எனவே, உண்மையில் நீங்கள் யுத்தத்தை எதிர்ப்பவராக இருந்தால், உங்கள் உறவுகளும், சொத்துக்களும், யுத்தத்தால் அழிக்கப்படுவதை எதிர்ப்பவராக அல்லது விரும்பாதவராக இருந்தால், எம் மீது திணிக்கப்பட்டிருக்கும் இந்த யுத்தத்திற்காக ஒரு சதம் கூட வழங்க முன் வராதீர்கள்.

நீங்கள் வழங்கும் ஒவ்வொரு சதமும், ஒரு அப்பாவி உயிரைக் குடிக்கவோ, முடமாக்கவோ வழங்கப்படுகிற பணம் என்று புரிந்து கொள்ளுங்கள்.

யுத்தத்தை எதிர்க்கிற சமாதானத்தை இந்த நாட்டில் காண விரும்புகிற ஜனநாயகவாதிகளே, தொழிற்சங்கங்களே, அரசியல் கட்சிகளே, சமூகத் தொண்டர்களே, தொடர்பு சாதனவியலாளர்களே, தொடர்பு சாதனங்களே உங்களால் முடிந்தளவிற்குப் பாதுகாப்பு நிதி வசூலிப்புக்கு எதிராகப் பிரச்சாரம் செய்யுங்கள்.

இதன் மூலம் நீங்கள் சமாதானத்துக்கு உங்களது பங்களிப்பை வழங்கியவர் ஆவீர்கள். உங்கள் விருப்பத்திற்கு மாறாக உங்களது பணம் உங்களது சம்பளத்திலிருந்து கழிக்கப்பட்டாலோ, தருமாறு நீங்கள் மிரட்டப்பட்டாலோ அச்சம் இன்றி எதிர்த்து நில்லுங்கள்.

இந்த அரசாங்கம் யுத்த முனைப்புடன் செயற்பட, மக்களது அங்கீகாரம் பெற்ற ஒரு அரசாங்கம் அல்ல என்பதால், எந்தச் சட்டத்தாலும் உங்களை ஒன்றும் செய்ய முடியாது.

சரிநிகர் யுத்த நிதிக்கெதிராக உங்களுடன் கைகோர்த்து நின்று குரல் எழுப்புகிறது !

படு கொலைக்கு நிதி தரமாட்டோம் !

யுத்தத்தை நிறுத்து ! !

சமாதானப் பேச்சை ஆரம்பி ! ! !

### வவுனியா:

## நோயாளியா? பயங்கரவாதியா?

யுத்தத்தின் பிடியில் சிக்கியுள்ள யாழ்குடாநாட்டில் பொதுமக்கள் யுத்த நெருக்கடிகள் காரணமாக பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ள அதேவேளையில், காயமடைந்த நிலையில் வன்னிப்பகுதி வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டவர்களும் பெரும் கஷ்டங்களுக்கு ஆளாக நேர்ந்துள்ளது.

காயமடைந்த நிலையில் வன்னிப் பகுதிக்குள் வந்து சேருகின்ற பொது மக்களுக்குத் தேவையான வைத்திய சேவைகளை உரிய முறையில் வழங்க முடியாத நிலையில் வன்னிப்பகுதி வைத்தியசாலைகள் கஷ்டமடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இங்குள்ள வைத்தியசாலைகளுக்குத் தேவையான மருந்துகள், வைத்தியசாலைக்கான உபகரணங்கள், பொருட்கள் என்பவை அப்பகுதிக்குச் சென்றடைவதில் ஏற்பட்டுள்ள தாமதமே, இதற்கான காரணமாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வருட தொடக்கத்தில் இருந்து வன்னிப்பகுதிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய மருந்துப் பொருட்கள் மற்றும் வைத்தியசாலைகளுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள் என்பவை கிரமமாக அனுப்பி வைக்கப்படவில்லை. இதற்குத் தேவையான அனுமதி பாதுகாப்புப் பகுதியினரால் வழங்கப்படாதிருப்பதே இந்தத் தாமதத்திற்கான காரணமாகும்.

வன்னிப்பகுதி வைத்தியசாலைகளில் கிளிநொச்சி வைத்தியசாலையில் மாத்திரமே எக்ஸ் கதிர் படப்பிடிக்கும் வசதி உள்ளது. இந்த எக்ஸ் கதிர் படப்பிடிப்பிற்குத் தேவையான இரசாயனப் பொருட்கள், படச்சுருள்கள் என்பன அனுப்பி வைக்கப்படாததன் காரணமாக இந்தப் பிரிவு கடந்த 50 தினங்களுக்கு மேலாக மூடப்பட்டுள்ளது. அவசர நோயாளர்களுக்கு எக்ஸ் கதிர் படம் பிடிப்பதன் மூலம் ஆற்றப்பட வேண்டிய சேவைகள் வன்னிப் பகுதியில் இப்போது எங்குமே இல்லாத நிலையே காணப்படுகின்றது.

இதேவேளையில் மல்லாவி வைத்தியசாலையில் அவசர சத்திர சிகிச்சை தவிர்ந்த ஏனைய சத்திர சிகிச்சைகளும் கடந்த ஒருவார காலமாக நிறுத்தப்பட்டுள்ளன. இதற்குத் தேவையான மருந்துப் பொருட்கள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் பற்றாக்குறை காரணமாகவே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இத்தகைய ஒரு சூழ்நிலையிலேயே, யாழ் குடாநாட்டின் தென்மராட்சி பகுதிகளில் காயமடைகின்ற பொதுமக்கள் வன்னிப்பகுதி வைத்தியசாலைகளுக்குக் கொண்டு வரப்பட்டு சிகிச்சை பெறவேண்டி இருக்கின்றது. முக்கியமானதும், அவசரமானதுமான நோயாளர்களும், காயக்காரர்களும் மேல் சிகிச்சைக்காக மல்லாவி, கிளிநொச்சி வைத்தியசாலைகளில் இருந்து வவுனியா வைத்தியசாலைகளுக்குக் கொண்டு வரப்படுகின்றார்கள்.

இங்கு வருகின்றவர்களில் அனேகருக்கு இங்கு உறவினர்களோ அல்லது நண்பர்களோ இல்லாத நிலைமையே காணப்படுகின்றது. இதனால் அவர்கள் தமக்குத் தேவையான அடிப்படை வசதிகளைப் பெறவும், ஆறுதல், தேறுதல் அளிப்பதற்கு யாருமற்றவர்களாகவுமே இருக்கின்றார்கள்.

இவர்களுக்கு இங்குள்ள பொது அமைப்புக்கள், நலன் விரும்பிகள், தமிழ்க்கட்சிகள் என்பன உதவிகள் வழங்கியுள்ள போதிலும், அவர்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்படாத நிலைமையே காணப்படுகின்றது.

இவர்களிலும் அனுராதபுரம், கொழும்பு போன்ற வைத்தியசாலைகளுக்கு மேல் சிகிச்சைக்காக அனுப்பப்படுகின்றவர்கள் மொழி தெரியாமலும், உதவிக்கும் பராமரிப்புக்கும் உறவினர்கள், உரியவர்கள் இல்லாத நிலையிலும் பெரும் கஸ்டமடைந்து வருகின்றார்கள். பொதுவாகவே, தென்மாரட்சி பகுதிகளில் இருந்து காயமடைந்த நிலையில் வருகின்றவர்கள் அனேகமாக வயோதிபர்களாக இருப்பதும் முக்கியமாகும்.

தென்மராட்சி பகுதியில் இருந்து காயமடைந்த நிலையில் வவுனியா வைத்திசாலைக்கு மேல் சிகிச்சைக்காக 36 பேர் கொண்டுவரப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. இவர்களில் பலர் அவயவங்களை இழந்தவர்களாகவும்: கடும்காயம் காரணமாக அவயவங்களை அகற்ற நேர்ந்தவர்களாகவுமே உள்ளனர். உதவியற்ற பலர் மாற்றுடைகள் இல்லாமலும், ஊட்டச்சத்துமிக்க உணவுகளைப் பெற முடியாதவர்களாகவும் இருக்கின்றார்கள்.

இதனால், இவர்கள் எறிகணை தாக்குதல்களினால் ஏற்பட்ட கடும் காயங்கள் குணமாகாதது மட்டுமல்லாமல் துன்பங்களை அனுபவிக்க நேர்ந்துள்ளது.

இது ஒரு புறமிருக்க இவ்வாறாகக் காயமடைந்த நிலையிலும், வன்னிப் பிரதேசங்களில் இருந்து வேறு நோய்கள் காரணமாக வவுனியாவுக்குக் கொண்டு வரப்பட்டு, பின்னர் மேல்சிகிச்சைக்காக கொழும்புக்கு அனுப்பப் படுகின்றவர்கள் கொழும்பு வைத்தியசாலைகளில் பணியாற்று கின்றவர்களினால் சந்தேகக் கண்கொண்டே பார்க்கப்படுகின்றார்கள். குறிப்பாக தாதிகள் இவ்வாறு செல்கின்றவர்கள் பயங்கரவாத நோக்கத்துடனேயே கொழும்புக்கு வந்து சேர்கின்றார்கள் என்று சந்தேகிக்கப்படுவதுடன், அவர்கள் பல்வேறு இம்சைகளுக்கும் துன்புறுத்தல்களுக்கும் உள்ளாக்கப்படுகின்றார்கள்.

இவ்வாறு வவுனியாவில் இருந்து அண்மையில் கொழும்பு பெரியாஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்ட பெண்ணொருவர் உடலில் ஏற்பட்டிருந்த கட்டிக்கு வைத்தியம் செய்வதற்காகச் சென்றிருந்த போதிலும், அந்த நோயை வவுனியாவிலேயே குணப்படுத்திக் கொள்ளலாம் என்றும் கொழும்பு ஆஸ்பத்திரிக்கு வரவேண்டிய அளவிற்குப் பெரிய வருத்தமல்ல என்றும் கூறி, இவர், பயங்கரவாதச் செயற்பாட்டிற்காகவே கொழும்புக்கு வந்தார் என புலனாய்வு பொலிசாருக்குத் தகவல் கொடுத்ததையடுத்து, அந்த அப்பாவிப் பெண் பொலிசாரின் தீவிர விசாரணைக்கு உள்ளாக நேரிட்டுள்ளது.

அப்பாவிப் பொதுமக்களுக்கு உரிய மனிதாபிமான அடிப்படையிலான மருந்துப் பொருட்களையும் தேவையான வைத்திய வசதிகளையும் அரசாங்கம் தமிழ்ப் பகுதிகளுக்கு வழங்கினால் இத்தகைய கஷ்டங்களை தமிழ் நோயாளிகளும் காயக்காரர்களும் அனுபவிக்க நேரிடமாட்டாது.

பயங்கரவாதத்தைத் தடுப்பதற்கும் ஒழிப்பதற்கும் எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகள் அப்பாவிகளான பொதுமக்களைப் பாதிக்காமல் பார்த்துக் கொள்ளும் தார்மீகப் பொறுப்பு ஒரு ஜனநாயக அரசாங்கத்திற்கு உள்ளதென்பதை பொறுப்புள்ளவர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

*தீபன்*

### சரிநிகர் சந்தாதாரர்களுக்கான அறிவித்தல்

சரிநிகருக்கான உங்கள் சந்தாவை புதுபிக்கவோ அல்லது உறுதிப்படுத்தவோ தவறும் பட்சத்தில் உங்களுக்கான பத்திரிகையை நிறுத்த வேண்டிய கட்டாயத்தில் நாம் உள்ளோம் என்பதை தாழ்மையுடன் அறியத்தருகிறோம்.

சரிநிகர் ஒரு வருடத்திற்கான சந்தா: உள்நாடு - 300.00
வெளிநாடு - US $ 50

காசோலை எனின் MIRJE என்றும்' காசுக்கட்டளை எனின் அஞ்சல் நிலையம் NUGEGODA எனவும் குறிப்பிடப்பட வேண்டும்.

ஆசிரியர்: பாலசுப்ரமணியம் வசந்தன், வெளியீட்டாசிரியர்: எஸ்.கே.விக்னேஸ்வரன், 19 /04, 01 /01, நாவல வீதி, நுகேகொடை. அச்சுப் பதிவு: நவமக, 66 /04, தர்மாராம வீதி, இரத்மலானை. 20.06.2000